1360 1190, May. 1930 பிரமோதூத வைகாசி







# ஆனந்த போதினி

# ANANDA BODHINI.

Vol. 15. பொருளடக்கம். No. 11.


| | பக்கம். |
|---|---|
| 1. கடவுள் வணக்கம் | 641 |
| 2. அரும்பொருள் விளக்கம் | ... 642 |
| 3. மாணவர்க்கு ஒரு வேண்டுகோள் | 643 |
| 4. நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள் | 648 |
| 5. இலக்கிய இலக்கணம் | ... 650 |
| 6. ஆரியசித்தாந்தம் | ... 654 |
| 7. புத்தாண்டு வாழ்த்து | ... 657 |
| 8. தமிழ்மொழியின் பெருமை | ... 658 |
| 9. வேதாந்த சூடாமணி வசனம் | ... 661 |
| 10. ஓர் சங்கை | ... 666 |
| 11. புகழுடைய வாழ்வே மனித லக்ஷியம் | ... 669 |
| 12. பெண்களின் சாமுத்திரிகம் | ... 671 |
| 13. கஞ்சத்தனம் செய்த வஞ்சம் | ... 673 |
| 14. மணிவாசகர் மதுரவாசகம் | ... 681 |
| 15. சுகாதாரம்.—விநோதம் | 684, 686 |
| 16. ஆனந்த சந்திரோதயம் | ... 690 |
| மனோ சக்தி | ... 693 |
| நாவுக்கரசு சுவாமிகள் மாட்சி | 696 |
| ல்.-வர்த்தமானப் பகுதி | 700, 702 |
| சாங்கம் | ... 704 |


M211 M15AB
N29.15.12.
207686

## "ஆனந்தபோதினி"

### சந்தா விவரம்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினாங், ஸிங்கபூர், தென் ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4—0 |
| நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடி மாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை யனுப்பப்படும்.

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜு 2—அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரை யில் 2-அணா வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6-அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரி விப்போர் கிரயம் அனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாக வும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷ யங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | | 20—0—0 |

Telephone No. 3606. Telegram:—"Ananda Bodhini," Madras.

[illegible]

---

2-30. (186)

# ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(தொகுதி 15.)

சுக்கில ௵ ஆடி ௴ முதல் பிரமோதூத ௵ ஆனி ௴ வரையில்
1929 ௵ ஜுலை ௴ முதல் 1930 ஜுன் ௴ வரையில்

நா. முனிசாமி முதலியார்,

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

*All Rights Reserved.*

| | | |
|---|---|---|
| காலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0 | 1930. | தபால் கூலி வேறு. |

# ANANDA BODHINI

## GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Ananda Bodhini" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

*Madras, 28th Nov. 1915.*
THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKKISHNA PILLAY.

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, now Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "**Ananda Bodhini**." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
*Madras, 5th Dec. 1915.* } (Sd.) A. C. PRANATARTIHARA IYER.

We have received the current number of the Tamil monthly "**Ananda Bodhini,**" containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to women either in the form of abstract statements, or small stories containing moral lessons.—*Hindu 22-9-15.*

Dear Sir.

Your Tamil monthly entitled "**ANANDA BODHINI**"..........................is written in ***easy, clear*** and ***readable*** style, ***well-suited, particularly***, to ***ladies*** who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be ***read*** and ***re-read*** from the view point to quality in contradistinction from style and rhetoric, with a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.* pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuances of the monthly, since it is being and has to be read by both sexes, ... ... ... ... ... It is very much to be envied that there should be over 10000* subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception. I wish the monthly all success.

**Trivandrum, 21-1-17.** } **A. V. SUBRAMANIA AIYAR, F.N. S.A. (Lon.), F.C.I. (Birm.)**

* Now more than 20 Thousands.

# ஆனந்தபோதினி

15-ம் வருடத்திய விஷய அட்டவணை.


| விஷயங்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| கடவுள் வணக்கம் | ... | 1, 65, 129, 193, 257, 321, 385, 449, 513, 577, 641, 705 |
| அரும்பொருள் விளக்கம் | ... | 2, 66, 130, 194, 258, 322, 386, 450, 514, 578, 642, 706 |
| போதினியின் 15-வது ஆண்டு | ... | 3 |
| கிராம நிர்மாண வேலை | ... | 7 |
| ஆனந்தபோதினி வாழ்த்து | ... | 13 |
| புத்தாண்டு வாழ்த்து | ... | 657 |
| உலக சுபா சுபம் | ... | 14 |
| வேதாந்த சார சங்கிரக வசனம் | ... | 17, 73, 138, 230 |
| ஆனந்த சந்திரோதயம் | ... | 20, 99, 142, 204, 417, 474, 527, 591, 690 |
| ஆரிய சித்தாந்தம் | ... | 24, 78, 146, 201, 263, 329,459,609,654,740 |
| பெண்களுக்குள்ள ஸ்தானம் | ... | 29 |
| "கோயிலா ? கொலைக்களமா ?" | ... | 33 |
| திருமங்கை ஆழ்வார் வைபவம் | ... | 37 |
| சங்கம் | ... | 41 |
| ஹரிதாசர் | ... | 44 |
| நாவல் நாடகங்கள் | ... | 46 |
| நம் நாடும் கல்வியும் | ... | 48 |
| ரஷ்யாவின் புதிய கல்வி முறை | ... | 266 |
| பாட புஸ்தகங்கள் | ... | 123 |
| கணித நூலும் நமது நாடும் | ... | 352 |
| சிறுவரும் தேச சரித்திரமும் | ... | 603 |

| விஷயங்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| மாணவர் கடமை | ... | 131, 363 |
| மாணவர்களுக்கு நல்லுரை | ... | 145 |
| மாணவர்க்கு ஒரு வேண்டுகோள் | ... | 643 |
| ஆசிரியர் சீடனுக்கு உபதேசிக்கும் முறைமை | ... | 49, 95, 154, 222, 276, 341, 490 |
| ஜோதிடம் | ... | 51, 110, 185 |
| பெண் மக்கள் பகுதி | ... | 54, 104, 160 |
| பெண்கள் துயரம் | ... | 195 |
| தமிழ்ப் பெண்களின் வீரம் | ... | 295 |
| பெண்களுக்குரிய நலன்கள் | ... | 451 |
| பெண்களின் சாமுத்திரிகம் | ... | 570, 631, 671 |
| பெண்மையியல்பு | ... | 721 |
| பெண் தருமம் | ... | 746 |
| ஸர். பிரபுல்ல சந்திரரே | ... | 55 |
| வைத்தியம் | ... | 58 |
| எழில் மொழிகள் | ... | 60 |
| நாவல் | ... | 61, 125, 188, 252, 315, 380, 442, 509, 573, 700, 761 |
| பொது வர்த்தமானம் | ... | 63, 127, 191, 255, 319, 383, 446, 511, 575, 702 |
| மணித்திரட்டு | ... | 639 |
| பிரபஞ்ச விநோதம் | ... | 766 |
| பஞ்சாங்கம் | ... | 64, 128, 192, 256, 320, 384, 448, 512, 576, 640, 704, 768 |
| உண்மை நாகரிகம் | ... | 67 |
| இந்தியர் புறமதம் புகுவதேன்? | ... | 71 |
| தேச நலப்பகுதி | ... | 81 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் மாட்சி | ... | 86, 213, 288, 407, 696, |





| விஷயங்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| கண் வழி நுழைந்த கள்வன் | ... | 89 |
| நல்லொழுக்கம் | ... | 113 |
| மனித வாழ்க்கை | ... | 116 |
| ஆகாரம் ஐயவினாவுக்கு விடை | ... | 118 |
| வேதாந்த ஐயவினாவும் விடையும் | ... | 120, 167, 238, |
| நவரத்தினங்கள் | ... | 158 |
| அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் | ... | 161 |
| சிறு கதைகள்:— | | |
| கண்ணம்மாள் | ... | 171 |
| சின்ன கலாட்டா | ... | 241 |
| புஷ்பராகத் தோடு | ... | 307, 354, |
| புனை பெயர் | ... | 421 |
| நாய்க்கடிக்குச் செருப்படி | ... | 497 |
| வம்புச் சண்டை | ... | 561 |
| கஞ்சத்தனம் செய்த வஞ்சம் | ... | 618, 673, |
| சிறுமிகள்—கல்வி | ... | 753 |
| "எனது பாலிய ராமாயணம்" | ... | 180 |
| தமிழ் இலக்கிய அபிவிருத்தி | ... | 209 |
| தமிழ் மொழியின் பெருமை | ... | 281, 368, 397, 481, 531, 585, 658, 725 |
| சக்தி வணக்கத்தின் சிறப்பு | ... | 215 |
| அன்னை வழிபாடு | ... | 411 |
| முத்தும் முத்தமிழும் | ... | 218 |
| அறம் பொருள் இன்பம் | ... | 226 |
| அறம் | ... | 559 |
| ஓர் போர்வீரனது தேசபக்தி | ... | 234 |
| சங்கீதம் | ... | 236 |
| வால்மீகி ராமாயணம் | ... | 249, 293, |
| செல்வர் செருக்கு | ... | 252 |
| உடல் நலம் பேணல் | ... | 259 |
| ஜீவேலசதி | ... | 270 |

| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| கடல்கடைந்த காளையும் மலையசைத்த மன்னனும் … | 273 |
| ஓர் கவியின் பிரகிருதி வருணனை … | 292 |
| நோய்க் கிடங்கொடேல் … | 298 |
| சீனா—பாரதநாடு … | 303 |
| பண்டைப் புலவர் மாட்சி … | 310, 347, |
| திரிகரண சுத்தி … | 323 |
| பக்தியின் சிறப்பு … | 333 |
| வேதாந்த சூடாமணி வசனம் … | 337, 392, 465, 551, 613, 661 |
| தெய்வம் ஒன்றுண்டு … | 345 |
| பீதர்பட்டணத்தின் சிறப்பு … | 373 |
| தமாஷ் பேச்சு … | 378, 439, |
| குளிக்கப் போயும் சேற்றைப் பூசல் … | 387 |
| திருவள்ளுவர் … | 401 |
| வள்ளுவர் பாயிரம் … | 485 |
| பஞ்சகிரக கூடம் … | 431 |
| பழம்பதி … | 433 |
| எனது தென்மலைப் பயணம் … | 436 |
| முப்பொருளுண்மை … | 441, 458, 592, |
| அருந்தமிழ் வளர்த்த ஐயர் … | 461 |
| திருமுருகாற்றுப்படை … | 469 |
| சொல்வகை ஓர்தல் … | 478 |
| ஜேம்ஸ் கார்பீல்டின் சலியா முயற்சி … | 493 |
| ஐய வினா விடை … | 507 |
| அரசியலும் சமூகவியலும் … | 515 |
| என்ன செய்யப்போகிறீர்கள்? … | 521 |
| ஓரற்புதச் சந்திப்பு … | 524 |
| மாணிக்கத்திரள் … | 529 |
| பிரபஞ்ச வாழ்வின் பித்தலாட்டம் … | 535 |
| வராஹ மிசிரரின் கால நிலை … | 539 |
| 'குடியன் மனைவி குமரியழும் நிலை … | 543 |
| அறம்புகாத அணிநகர் … | 545 |
| விக்கிரக ஆராதனை … | 555, 717 |





| விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|
| எட்டிக்குப் போட்டி … | 548 |
| யோகீஸ்வரரின் ஜீவிய சங்கிரகம் … | 568 |
| விநோதம் … | 574, 625, 686, 756 |
| உண்மைத் தொண்டு … | 579 |
| இலக்கிய இலக்கணம் … | 588, 650, 714 |
| "கம்பர் கவி இன்பம்" … | 593 |
| பெரியார் வணக்கம் … | 600 |
| எறும்புகள் மகாநாடு … | 605 |
| பக்தி … | 608 |
| ஸ்ரீ இராமரும் காந்தியும் … | 629 |
| விலை வினோதம் … | 633 |
| நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள் … | 635, 648 |
| மனோசக்தி … | 637, 693, 748 |
| ஓர் சங்கை … | 666 |
| புகழுடைய வாழ்வே மனித லக்ஷியம் … | 669 |
| மணிவாசகர் மதுரவாசகம் … | 681 |
| சுகாதாரம் … | 684 |
| தற்கால அரசியல் நிலை … | 707 |
| சாத்தனார் அறச் சிறப்பு … | 729 |
| மணப் புரிதல் … | 732 |
| "பழைய குருடி கதவைத் திறடி" … | 735 |
| கவியரசி சரோஜினி தேவி … | 737 |
| தேவதைகட்கு உயிர்ப்பலி கொடுத்தல் … | 743 |
| வஞ்சித்து வாழ்வோர் … | 751 |
| சொற்பிதிர் எண்—1 … | 760 |



# வாத சௌமியம் 1,200

அகஸ்தியமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய வாதகாவியத் திறவுகோல்.

இதிலடங்கியிருக்கும் அரிய பெரிய விஷயங்களைக் கொண்டே இப்புத்தகத்தின் பெருமையை நன்குணர்ந்து கொள்ளலாம். வாதம், வைத்தியம், யோகம், ஞானம், மாந்திரீகம், மோக்ஷம் முதலியவற்றை விரும்புவோருக்கு இப்புத்தகம் மிக அவசியமானது. இப்புத்தகத்தைக் கைக்கொள்வோர் சிறந்த ஐசுவரியத்தையும், நோயற்ற வாழ்வையும், பேரின்பத்தையும் அடைவார்கள். இதன் விலை ரூ. 1—8—0

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

*குறைந்த சந்தா!*　　*நிறைந்த விஷயம்!!*

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கோட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

| | |
|---|---|
| மத உண்மைகளா? | கிராமச் சீர்திருத்தங்களா? |
| தத்துவ ஆராய்ச்சிகளா? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா? | வைத்திய விசேஷங்களா? |
| வியாபார ரகசியங்களா? | தேசீய தத்துவங்களா? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா? |
| | இன்னிசைப் பாட்டுக்களா? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. **3**, **6** மாத சந்தா ரூ. **1-12-0.**
பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு
வருட சந்தா ரூபா **4.**

### "ஆனந்தபோதினி" ஆபீஸ்,

தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

**வெளிநாடுகளுக்கு 6-மாத சந்தா இடையாது.**

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 15 } பிரமோதூதஸு ஆனிமீ கஉ
1930ஸு ஜூன்மீ 15உ { பகுதி 12

## கடவுள் வணக்கம்.

சந்ததமு மெனதுசெய லினதுசெய லியானெனுந்
தன்மையினி யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே
இந்தநிலை தெளியநா னெக்குருவி னாடிய
இயற்கைதிரு வுளமறியுமே
இந்நிலையி லேசற் றிருக்கவென் றுன்மடமை
இதசத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடுவழக்காய்ச்
சென்மம்வரு மோவெனவும் யோசிக்குதே மாது
சிரத்தையெனும் வாளுமுதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள்செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (1)

---

இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம்ப லையெலாம்
அரும்பச் செய்யென தன்னையொப் பாமனே (2)

---

நெஞ்சகம்வே றாகி நினைக்கட எண்ணுகின்ற
வஞ்சகனுக் கின்பமெந்தாய் வாய்க்குமா றெவ்வாறே.

207636

# அரும்பொருள் விளக்கம்

(1) **இ**தனால் அடிகள் பற்றை அறுத்த மெய்ஞ்ஞான தீரம் தந்தருளுமாறு பரிபூரணானந்தத்தைப் பிரார்த்திக்கின்றார்.

(இ-ள்) நோக்கும் இடம் எல்லாம் ஒரு சிறிதும் நீக்கம் இல்லாமல் நிறைந்து நிற்கின்ற பூரண இன்பமே! எக்காலத்திலேயும் என்னுடைய செயல்கள் எல்லாம் நின்னுடைய செயல்களே; நான் என்று சொல்லக் கூடிய தன்மை உன்னைத் தவிர வேறொன்றில்லாத் தன்மையால் வேறு அல்லேன். வேத முடிவும் ஆகம முடிவும் விளக்குந் தன்மையும் இதுவே யாகும். இத்தகைய அரிய உண்மை நிலையை அறிய நான் மனம் உருகி வாடிய தன்மையைத் திருவுளம் நன்கு அறியுமே. இந்நிலையிலேயே சற்று மனதை ஒடுக்கி இருக்கலாம் எனிலோ அறியாமையானது இச்சகம் பேசிக் கெடுக்கும் பகைவனைப் போல் வந்து என் சிந்தையிற் குடிகொண்டு விடுகிறது. மல மாயை கன்மங்கள் மீண்டும் என்னை வந்து பற்றுமோ என்றும், தொடர் வழக்காகிப் பிறவி உண்டாகுமோ என்றும் என் மனமானது எண்ணி வருந்திக்கொண்டிருக்கின்றது. ஆகையால் சிரத்தையாகிய வாளையும், பிறவித்தளையை அறுக்கும் மெய்ஞ்ஞான தீரத்தையும் எனக்கு உதவிக் காத்துக் கிருபை புரிவாயாக என்பதாம்.

"...............எனது செயல் நினது செயல்" என்றதின் கருத்தோடு "என் செயலென்பதியா தொன்றுமில்லை யினித் தெய்வமே, உன் செயலே யென்றுணரப் பெற்றேன்" என்ற பட்டினத்தார் திருவாக்கு ஒப்பு நோக்கத்தக்கது. சந்ததம் எப்பொழுதும். இத சத்ரு—அநுகூல சத்ரு—அடுத்துக் கெடுக்கும் பகை.

(2) இதனால் அடிகள் தமக்குள் உண்மை அன்பை அரும்பச் செய்ய வேண்டும் என்று பரம்பொருளை வேண்டுகின்றார்.

(இ-ள்) என்னுடைய அன்னைக்கு நிகராகிய இறைவனே! காந்தமானது இரும்பைக் கவர்வது போல் அடியேனைத் திருவருள் வலிமையாற் கவர்ந்து, மறுபடியும் பிறவியினைத் திரும்பிப் பாராவண்ணம் தடுத்து, தேவரீருடைய திருவடிக் கரும்பைக் கொடுத்து, அடியார்களுக்குரிய இலக்கணமாகிய கண்ணீரும் கம்பலையும் என்னிடமும் அரும்பச் செய்து காத்தருளல் வேண்டும் என்பதாம்.

கண்ணீர்—ஆனந்த பாஷ்பம், கம்பலை—மெய்க் நடுக்கம்.

(3) இதனால் மனம் வேறுபட்டு நிற்கின்ற தமக்கு இன்பம் வாய்க்குமோ என்று ஏங்குகின்றார்.

(இ-ள்) எந்தாய்! மனமானது வேறுபட்டு வீண் விகாரங்களிற் சென்று கொண்டிருக்கின்ற நிலையில் தேவரீரோடு இரண்டறக் கலக்க என்னுகின்ற வஞ்சகனாகிய எனக்கு இன்பம் சித்திக்கும் வகை எப்படி? என்பதாம்.

---

"அறிவுள்ளவன் அதிகம் பேசான்."

M211. N15AB N29.12.12

# ஆனந்தபோதினி

பிரமோதூத
வரு ஆனிமீ 1உ

## தற்கால அரசியல் நிலை.

**உ**லகம் எங்கும் ஜனநாயகத்துவப் பேரொளி வீசிக்கொண்டிருக்கும் காலம் இது. ஜன சமூகத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகியவை ஓங்கி வளரவேண்டும் என்ற சித்தாந்தம் அநேகமாக உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் பரவி விட்டது. பெரும்பான்மையான நாடுகள் இம் மூன்று இன்பங்களையும் பூரணமாக அநுபவித்து வருகின்றன. இட்டது சட்டமாக விளங்கிய பண்டைக் காலக் கொடுங்கோன் மன்னர் ஆட்சிமுறைகளோ, செல்வர்களின் கட்டுத்திட்ட நிர்ப்பந்தங்களோ இக்காலத்தில் மிகமிக அருமை. ஏதோ ஒரு சில நாடுகளில் பேருக்கு அரசர் என்று ஒருவர் வைக்கப்பட்டிருந்தாலும் எல்லாக் காரியங்களும் ஜனங்களுடைய விருப்பப்படியேதான் நடைபெறுகின்றன.

நமது அருமைப் பாரத நாடு சுதந்தர இன்பம் நுகர்ந்த காலம் கனவாகிவிட்டது. சரித்திரத்திற்குங்கூட எட்டவில்லை என்றே சொல்ல வேண்டும். நமக்கு ஒருவாறு திட்டமாகக் கிடைத்திருக்கும் சரித்திரங்கள் என்று கூறப்படுபவையெல்லாம் வேற்றரசர்களின் ஆட்சி முறைகளையும், போர்களையும், கொள்ளைகளையுமே தான் கூறிச் செல்லுகின்றன.

நமது நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சிமுறை நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே நிலைவருகிறது. ஆங்கிலேய ஆட்சியால் நமது நாட்டுக்கு நன்மை அதிகமா தீமை அதிகமா என்ற ஆராய்ச்சி இக்காலத்தில் மிகவும் அவசியம். நன்மை அதிகம்

---

"பலமான காரணங்கள் பலமான காரியங்களைச் செய்கின்றன."

என்று வாதிக்கின்றவர்கட்கும் பல காரணங்கள் இருக்கின்றன. தீமை அதிகம் என்று வாதிப்பவர்கட்கும் கண் கண்ட சான்றுகள் அநேகம் இருக்கின்றன. ஆனால் தற்காலத்தில் நாட்டில் வறுமையும், பிணியும், அறியாமையும் நிறைந்திருக்கும் உண்மையை மறுக்க ஒருவரும் முன்வரமாட்டார் என்றே நம்புகின்றோம்.

இவ்வுண்மையைக் காங்கிரஸ் மகாசபை — அது தோன்றிய நாள் முதல் பொது ஜனங்கட்கு எடுத்துக் காட்டி விளக்கிக் கொண்டு வந்திருந்தாலும், பாமர மக்கள் உள்ளங்களிலும் பசுமரத்தாணி போல் பதியச் செய்த பெருமை மகாத்மா காந்தியடிகட்கே உரியதாகும். பொதுவாக ஒத்துழையாமை இயக்கப் பிரசார காலத்திலும், சிறப்பாக உப்புச் சத்தியாக்கிரகப் போர் தீவிரமாக நாடெங்கும் பரவி நடை பெற்றுவரும் இக்காலத்திலும் பாமர ஜனங்கள் ஆங்கிலேயர்களின் ஆட்சிமுறையின் ரகஸியத்தை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

உலகம் இப்பொழுது காந்தியடிகளையும் அவர் தோற்றுவித்த சுதந்தரக் கிளர்ச்சியாகிய உப்புச் சத்தியாக்கிரகப் போரையும் இமை கொட்டாமல் நோக்கிக்கொண்டிருக்கிறது. உலகம் போற்றும் உத்தமர்—தியாகமூர்த்தி—மகாத்மா காந்தியடிகள் இப்பொழுது சிறை வாசம் செய்கிறார். அவர் என்ன குற்றம் செய்து சிறை சென்றார்? திருடினாரா? கொலை செய்தாரா? இல்லை! இல்லை!! முப்பத்து முக்கோடி மக்களின் வறுமை நீங்கவேண்டும், பிணி நீங்கவேண்டும், அறியாமை நீங்கவேண்டும் என்று அன்பை—அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட சத்தியாக்கிரகம் செய்தமைக்காகவே சிறை வாசம் செய்கிறார்—தவம் செய்கிறார். நாடெங்கும் காட்டுத் தீயைப் போல் பரவி ஆயிரக் கணக்கான தொண்டர்களும், தேவேந்திர போகம் அநுபவித்துக் கொண்டிருந்த தலைவர்களும் பற்பல கொடுந் துன்பங்களை அநுபவிப்பதற்கும், சிறை செல்வதற்கும் காரணமாயிருக்கின்ற உப்புச் சத்தியாக்கிரக வரலாற்றையும் உண்மையையும் நேயர்கள் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

ஆள்வோர் எவ்வளவு நன்னோக்கம் கொண்டவர்களாயினும், அந்நியர்களாயிருப்பின், ஆளப்படுவோருக்குப் பலவித இடுக்கண்கள் உண்டாதல் இயற்கை. ஆங்கிலேயர்கள் நல்லவர்களாயிருக்கலாம்;

"துன்பத்தை ஒழித்துவிடு; பிறகு அது உன்னை விட்டுவிடும்."



ஆனால் அவர்கள் தங்கள் சொந்த நலன் கருதியே இந்தியாவை ஆட்சி புரிகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இது பல தடவைகளில் பலரால் நன்கு நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்தியா ஆங்கிலேயர்களுக்குச் சொந்தம், இங்குள்ளவர்கள் எல்லோரும் அவர்களுக்கு ஏவல் புரியும் அடிமைகள் என்ற எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் உண்டாகும் படியாகவே தற்கால ஆட்சிமுறை நடைபெற்று வருகிறது. இந்தியாவின் விடுதலைப் போர்—சுயராஜ்யக் கிளர்ச்சி சுமார் ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு வந்தாலும் விமோசனம் சமீபத்தில் உண்டாகும் என்று இதுவரை யாருக்கும் தோன்றவில்லை. மகாத்மா காந்தியடிகள் காட்டிய அஹிம்சைப் போர்—சத்தியாக்கிரக முறை நமது நாட்டுக்கு விரைவில் விமோசனம் கொடுத்துவிடும் என்ற நம்பிக்கை எல்லாருடைய உள்ளங்களிலும் நன்கு பதிந்துவிட்டது. முன்னர் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிட்ட பிறகு இந்திய தேசிய வாழ்வில் ஒரு பெருத்த சோர்வு ஏற்பட்டிருந்தது. உண்மைத் தியாகி—தேசபந்து—சித்தரஞ்சன தாஸர் கண்ட "சுயராஜ்யக் கட்சி"யானது அரசியல் போலித் தலைவர்களுக்குக் கொண்டாட்டமாகவே முடிந்தது. அக் கட்சி இரட்டை ஆட்சி முறையை அநேக இடங்களில் ஸ்தம்பிக்கச் செய்தும் அதிகார வர்க்கம் குஷாலாகவே காலந் தள்ளி வந்தது. அதனால் நாட்டுக்கு எத்தகைய நலனும் விளையவில்லை.

சர்க்காரும் வெள்ளைக்காரர்களும் 'இந்தியா இன்னும் சுயராஜ்யம் பெறும் தகுதியுடையதாயில்லை. இப்பொழுது நாங்கள் இந்தியாவை விட்டுவிட்டால் அது அடியோடு அழிந்து போய்விடும். இந்தியர்களை நாங்கள் சுயராஜ்யத் துறையில் பழக்கி வருகின்றோம். காலக் கிரமத்தில் படிப்படியாகச் சுயராஜ்யம் கொடுத்து விடுவோம்' என்று கூறிவருகின்றனர். சைமன் கமிஷன் நியமனம் வரை மிதவாதிகள் என்போர் அவர்கட்குப் பக்கபலமாகவே இருந்து வந்தனர். இந்திய அரசியல் நிலையைக் கண்டறிந்து, மேலும் வேண்டிய சீர்திருத்தங்களை வழங்கச் சிபார்சு செய்வதற்கு என்று ஏற்பட்ட சைமன் கமிஷன் நியமனமானது பொதுவாக இந்திய மக்கட்கும் சிறப்பாக மிதவாதிகட்கும் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டது. அதனால் சைமன் கமிஷனை நாடுமுழுவதும் பகிஷ்காரம் செய்துவிட்ட செய்தி எல்லாருக்கும் தெரிந்ததே.

"காதலுக்குக் கண்ணில்லை."

மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமையை நிறுத்திவிட்ட பிறகு தமது நோக்கத்திற்கு நாடு தயார் இல்லை என்ற காரணத்தால் கதர்த் தொண்டை மாத்திரம் தீவிரமாக மேற்கொண்டு அரசியல் வாழ்வினின்றும் சற்றே விலகியிருந்தார். ஆயினும் மற்ற அரசியல் வாதிகட்கு அணுவளவும் இடையூறு செய்யாமல் தம்மால் இயன்ற ஆதரவையும் அளித்துக் கொண்டிருந்தார்.

இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் மந்திரிகளும் பிறரும் "இந்தியர்களுக்குச் சுயராஜ்யம் என்றால் பொருள் என்ன என்றே விளங்கவில்லை. தங்களுக்கு என்னவேண்டும் என்று திட்டமாகவும் ஒருமுகமாகவும் கூறவும் முடியவில்லை" என்று இறுமாப்புடன் எளனம் செய்துகொண்டிருந்தனர். சென்னையில் கூடிய காங்கிரஸ் "பூரண சுயேச்சையே இந்தியாவின் லட்சியம்" என்று தீர்மானித்தது. அப்போது காந்தியடிகளுங்கூட "இது சிறுபிள்ளைத்தனமான தீர்மானம்" என்று அனாதாவு செய்து கேலி செய்தார். இளைஞர்களுக்கு இத்தீர்மானம் மிகுந்த உற்சாகத்தையும் உணர்ச்சியையும் தந்து கொண்டிருந்தது. இந்நிலையில் பண்டித மோதிலால் நேருவின் தலைமையில் பலகட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி "இந்தியாவுக்குத் தற்பொழுது குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கவேண்டும்" என்று ஒரு திட்டம் வகுத்தனர். அதை "நேரு திட்டம்" என்று வழங்குவார்கள். இந்த நேரு திட்டத்தை அநேகர் ஆதரித்தனர், சிலர் எதிர்த்தனர். கல்கத்தா காங்கிரஸில் இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று பெருமுயற்சி செய்யப்பட்டது. பூரணசுயேச்சை வாதிகள் அதை நிறைவேற்ற விடாமல் தடை செய்வதற்குத் தயாராயிருந்தார்கள். இந்நிலையில் மகாத்மாகாந்தியடிகளின் உதவி பெரிதும் வேண்டப்பட்டது. பூரணசுயேச்சை வாதிகட்கும் குடியேற்றநாட்டு அந்தஸ்து வாதிகட்கும் திருப்தியைக் கொடுக்கும்படியான முறையில் ஒரு மத்தியஸ்தம் செய்தார் காந்தியடிகள். அதாவது ஒரு வருட கெடுவில் சர்க்கார் குடியேற்றநாட்டு அந்தஸ்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பூரணசுயேச்சையை லட்சியமாக வைத்து அதற்கு வேண்டிய முறைகளைக் கையாளுவது—தாமே தலைமை தாங்கி நடத்துவது என்பதே யாகும். சர்க்கார் அணுவளவும் அசையவில்லை.





1—11—29—தேதியில் ராஜப்பிரதிநிதியாகிய லார்டு இர்வின் ஒரு பிரசங்கம் செய்தார். அது விளக்கமற்றதா யிருந்தாலும் மிகுந்த அறுதாபம் நிறைந்ததா யிருந்தது. மறுநாளே முக்கிய தலைவர்கள் ஒன்று சேர்ந்து சில நிபந்தனைகளோடு அதை ஆதரித்து ஒரு அறிக்கை வெளியிட்டனர். லார்டு இர்வின் தமது பிரசங்கத்தில் சர்வகட்சி மகாநாட்டைப்பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். உடனே குடியேற்ற நாட்டு அந்தஸ்து ஏற்படுத்துவதை ஆதாரமாகக் கொண்டுதான் கௌரவமான ராஜியைச் செய்துகொள்ள முடியும் என்று எல்லா அரசியல் கட்சியினரும் ஒரு முகமாக அபிப்பிராயம் தெரிவித்தனர்.

மகாத்மாகாந்தியடிகள் டில்லியில், லாகூர் காங்கிரஸுக்கு முன்பு 23-12-29 தேதியில் ராஜப்பிரதிநிதியைப் பேட்டிகண்டு ராஜி பேசினர். அந்த ராஜிப்பேச்சுப் பயனின்றி முறிந்து விட்டது. பின்னர் லாகூர் காங்கிரஸ் "பூரணசுயேச்சையே இந்தியாவின் லட்சியம்" என்று தீர்மானம் செய்தது.

இச்சமயத்தில் இங்கிலாந்தில் காமன்ஸ் சபையில் இந்திய விவாரம் கிளம்பியது. இந்திய மந்திரி மிஸ்டர் வெட்ஜ்வுட் பென்னின் பேச்சும், மற்றவர்கள் இறுமாப்புடன் கூறிய கூற்றுக்களும் இந்தியர்களுக்குப் பலவித ஐயங்களைக் கிளப்பிவிட்டன. மிஸ்டர் பென் இரண்டாந் தடவை செய்த பிரசங்கம் ஒன்றில் "இந்தியாவில் இப்பொழுது குடியேற்றநாட்டு அந்தஸ்து நடைமுறையில் இருந்து வருகிறது" என்று கூறினர். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை என்பது எல்லாரும் உணர்ந்ததே.

மகாத்மா காந்தியடிகட்கு எவ்வகையிலேனும் ஒரு கௌரவமான ராஜிசெய்து கொள்ளவேண்டும் என்பதே விருப்பம். சைமன் கமிஷன் தனது முடிவைத் தெரிவிக்காதிருக்கிற நிலையில், சர்க்கார் குடியேற்றநாட்டு அந்தஸ்தைக் கொடுப்பதாக வாக்குறுதி அளிப்பதற்குள்ள கஷ்டங்களை உணர்ந்து, பதினொரு கோரிக்கைகளை மாத்திரம் உடனே அளித்தால் போதும் என்று பழைய கோரிக்கைகளைக் குறைத்துக்கொண்டு அவைகளைத் தெரிவித்தார் காந்தியடிகள். இப்பதினொரு கோரிக்கைகளில் முக்கியமான ஒரு ஆறு கோரிக்கைகளையாவது பூர்த்தி செய்தால் போதும் என்பது மகாத்மாவின் லட்

கோள். சர்க்கார் தனது பிடிவாதத்தினின்றும் ஒரு சிறிதும் இறங்கி வரவில்லை என்பது நன்கு தெளிவாகிவிட்டது. தலைவர்கள் எல்லாரும் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மகாத்மா காந்தியடிகள் சட்டமறுப்புச் செய்வதற்காக உப்புச் சத்தியாக்கிரகப் போரைத் தொடங்கியது. காந்தியடிகள் சத்தியாக்கிரகம் தொடங்குவதற்கு முன்பும் ராஜப்பிரதிநிதிக்கு ஸ்நேகபாவ முறையில் ஒரு உருக்கமான இறுதிக் கடிதம் விடுத்தார். அதற்கு ராஜப் பிரதிநிதி முறுக்கான பதிலையே கொடுத்து விட்டார்.

இப்பொழுது உப்புச் சத்தியாக்கிரகப் போர் நாடெங்கும் தீவிரமாய் நடைபெற்று வருகிறது. பழைய ஒத்துழையாமையை விட இப்பொழுது வேகம் அதிகமாயிருக்கிறது. பொது ஜனங்கள் சர்க்காரிடம் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். பெருந்தன்மையும், இந்திய மக்களிடம் அநுதாபமும் உள்ளவர் என்று பாராட்டப்படும் ராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் ஆட்சியில் அநேக கொடுந்துன்பங்கள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. அஹிம்சையையே தங்கள் உயிராகப் போற்றும் ஆண் பெண் தொண்டர்கள் முரட்டுத்தனமாக அடிக்கப்படுகின்றனர். அநேக இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும்—அதனால் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. இன்னும் இதைவிட மோசமான நிலைமை ஏற்படலாம் என்ற அச்சமே அதிகாரிகளின் செய்கைகள் வெளிப்படுத்திக்கொண் டிருக்கின்றன. சாதாரணச் சட்டப்படி ஆட்சி நடக்கவேண்டியது போய், ராணுவச் சட்டப்படியும், அவசரச் சட்டப்படியும் ஆட்சிமுறை நடந்து வருகிறது. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப்பட்டு விட்டது. நாட்டில் சிறந்த அரும்பெரும் தலைவர்களும், தொண்டர்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றனர். ஸ்ரீ. சரோஜனி, கமலாதேவி, துர்க்காபாய் போன்ற பெண்மணிகளும் சிறைவாசம் செய்கின்றார்கள். அஹிம்சா மூர்த்தியான மகாத்மாவும் சிறையில் கிடக்கின்றார். இந்த துரதிர்ஷ்ட—நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்கவேண்டியது யாருடைய பொறுப்பு என்று கேட்கின்றோம்.

கவர்ன்மெண்டார் இன்னும் பழம்பாடமே படித்துக்கொண் டிருக்கின்றனர். தாங்கள் லண்டன்மா நகரில் கூட்டப்போகும் சர்வகட்சி மகாநாட்டுக்கு எல்லாரையும் வரவேண்டும் என்று அழைக்கிறார்கள். அங்கே சென்று செய்யுங் காரியம் என்ன என்பது மாத்திரம் தெளிவு செய்யப்படவில்லை. அங்கு செல்லும் தலைவர்களின் வாக்கு மதிக்கப் பெறுமா? குடியேற்ற நாட்டு அரசியல் முறையை நிர்மாணிப்பார்களா? அதைப் பிரிட்டிஷ் மந்திரிகள் ஏற்றுக்கொண்டு

“உப்பிட்டவரை உள்ளளவும் நினை.”



பார்லிமென்டின் அங்கீகாரத்துக்கு விடுவார்களா? இவை யெல்லாம் ஒன்றுமே தெரியவில்லை. எல்லாம் அந்தகாரமா யிருக்கிறது. இந்திய மக்களின் உண்மைத் தலைவராகிய மகாத்மா காந்தியடிகள் சிறையில் அடைபட்டுக் கிடக்கும்போது மகாநாட்டுக்கு யார் சென்று எதைச் சாதித்து விடுவார்கள் என்று கேட்கின்றோம். மகாத்மா காந்தியடிகள் இல்லாத எந்தச் சர்வகட்சி மகாநாடும் திருப்திகரமான முடிவுக்கு வரமுடியாது. மகாநாட்டில் காந்தியடிகள் எழுந்தருளியிருக்கவேண்டும்.

இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைப் போக்கவேண்டுமானால் சர்வகட்சி மகாநாட்டில் குடியேற்ற நாட்டு அரசியல் முறை நிர்ணயிக்கப்படும் என்று உறுதிகூறி காந்தியடிகளை அழைக்கவேண்டும். அடிகளும் ஒத்துழைக்க முன் வருவார். அடிகள் சிறைக்குச் சென்றும் ஓயாமல் நடைபெற்று வரும் தற்காலப் போராட்டமும் ஓய்ந்து விடும்.

நாட்டு மக்களுக்குள் எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும் குடியேற்ற நாட்டு அரசியல்முறை நடைமுறையில் வந்துவிடவேண்டும் என்றே எல்லாரும் விரும்புகிறார்கள். இந்த லட்சியம் நிறைவேற்றப்படும் வரையில் நாட்டில் அமைதி நிலவாதென்றே நன்கு தெளிவாகிறது. மகாத்மா காந்தியடிகளைக் கைது செய்துவிட்டால் போராட்டம் ஓய்ந்துவிடும் என்று ஒரு சிலர் மனப்பால் குடித்தனர். தாங்கள் எண்ணிய எண்ணம் தவறு என்று இப்பொழுது அவர்கள் தீர்மானித்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். காந்தியடிகள் பழைய ஒத்துழையாமையை நிறுத்திய போதுங்கூட ஜனங்கள் நிறுத்தக்கூடாது என்று ஆட்சேபணை செய்தனர். ஆயினும் அவர் கட்டளைக்கு அடங்கி நடந்தனர்.

இப்பொழுது கவர்ன்மெண்டாருக்கு இரண்டே இரண்டு வழிகள் தான் இருக்கின்றன. நாட்டுமக்களின் விருப்பத்திற்கு இணங்கி அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று ஆளவேண்டும். இல்லையேல் பலத்தைக்கொண்டு ஆளவேண்டும். பலத்தைக்கொண்டு சிறிது காலந்தான் ஆளமுடியும். ஜனங்களுடைய ஆதரவைக் கொண்டு ஆளும் ஆட்சிமுறையின் சிறப்பு வேறுவிதமாக இருக்கும்.

ராஜ தந்திரத்தில் கைதேர்ந்த பிரிட்டிஷ் மந்திரிகளும், லார்டு இர்வினும் என்ன செய்யப் போகிறார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். இங்கிலாந்து—இந்தியா ஆகிய இருதேசங்கட்கும் நன்மை பயக்கும் முறையில் வேண்டிய காரியங்களைச் செய்யும் அறிவாற்றல்களை அவர்களுக்குத் தந்தருளுமாறு எல்லாம் வல்ல திருவருளை வழுத்துகின்றோம். ஓம் தத் ஸத்.

“எண்ணித் துணிக கருமம்.”




# மூக்கூடற்பள்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

மூக்கூடல் மூத்த பள்ளியும் மருதூர் இளையபள்ளியும் நாட்டின் பெருமையை நாவாரவழுத்திய பின், மள்ளர் தெய்வம் தொழுது மாரியை வரவழைக்கத் தொடங்கினார்கள். மாதம் மும்மாரி மாறாது பெய்யுமாறு மள்ளர்கள் சேரியில் குரவையிட்டுத் தெய்வம் தொழுதார்கள்.

"இங்ஙன் மும்மாரி உலகெங்கும் பெய்யவே
தெய்வத்தைப் போற்றவந்து கைதொழுங்காண்
பொங்கலுமிட்டுத் தேங்காயும் கரும்பும்
பூலாவுடையார்க்குச் சாலவே கொடும்
குங்குமத் தோடும் சந்தனம் கலந்து
குமுக்கா வுடையாரையர் தமக்குச் சாத்தும்
கங்கணம் கட்டி யேழு செங்கிடாயும் கொண்டு
கரையடிச் சாத்தாமுன்னே விரைய வெட்டும்."

என்று சேரியில் உறையும் சிறுதெய்வங்களை மாரிப்பொருட்டால் மள்ளர் வணங்கிப் போந்தார். பூலாவுடையார்க்குப் பொங்கலிட்டுத் தேங்காயும் தீங்கரும்பும் திருத்திக் கொடுத்தார்கள். குமுக்கா வுடையார்க்குக் குங்குமமும் சந்தனமும் சாத்திக் கும்பிட்டார்கள். கையில் கங்கணங்கட்டி ஏழு செங்கிடாக்களை வெட்டிக் கரையடிச் சாத்தனைக் களிப்பித்தார்கள். இன்னும் பூத்தலைச் சாவற்பலி கொடுத்துப் புலியூருடையாரைப் பூசித்தார்கள். வாய்த்த மதுவும் கள்ளும் கொண்டு வடக்குவாய்ச் செல்வியை வணங்கினார்கள்.

"பூத்தலைச் செஞ்சாவல் சாத்திரத்தாலே
புலியூருடையார் கொள்ளப் பலிதானிடும்
வாய்த்த சாராயமும் வெறியாத்துக் கள்ளும்
வடக்குவாய்ச் செல்வி உண்ணக் குடத்தில் வையும்
தோத்திரம் பண்ணும் பண்ணும் கூத்தாடியே
தொழுது தொழுது வேண்டும் மழைபெய்யவே
எத்துமாலழகர் பேரை வாழ்த்தியே
எல்லோரும் வாரும் பள்ளர் எல்லோருமே"

என்று பச்சேரிப் பள்ளரெல்லாம் சேரியிலமர்ந்த சிறு தெய்வங்களை வாழ்த்தி வணங்கிய பின் விண்ணிலே கார்மேகம் தவழ்ந்தது. மின்னல் மின்னியது. மெல்லிய மேல்காற்று வீசியது. இவ்வாறு வானத்தே தோன்றிய மழைக்குறியைக்கண்டு பள்ளர்கள் ஆடிப் பாடித் துள்ளி மகிழ்ந்தார்கள்.

---

"வாழாமற் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்."



"ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
மேற்குமின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித்தவளை ஆர்ப்பரிக்குதே
சேற்றுநண்டு சேற்றைக்கிளறி வளையடைக்குதே—மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுதே
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணை—சேரி
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்ளுமே"

என்று பள்ளுக் கவிஞர் பள்ளரது மனத்திலெழுந்த பெருமகிழ்ச்சியை இனிய மொழிகளால் எழுதியமைத்தார். மழையை நோக்கி வாழும் மள்ளர்கள் மலையிற் கார்பொழியும் குறிகளை நன்றாய் அறிந்து கூறுகின்றார்கள். மேற்கும் கிழக்கும் மின்னுகின்றது. மேல்காற்று வீசுகின்றது, நீர்த்தவளை ஆர்ப்பரிக்கின்றது, வானம்பாடி வட்டமிட்டாடுகின்றது, சேற்றுநண்டு வளையின் வாயிலை அடைக்கின்றது, இவ்வடையாளங்களால் மலையில் மழை சொரிந்து மறுநாள் ஆற்றில் வெள்ளம் வருமென்று பண்ணைப் பள்ளர் துள்ளுகின்றார்கள்.

பள்ளர்கள் எண்ணியவாறே திரிகூடமலையிலும் பொதியமலையிலும் பெருமழை பொழிந்து சிற்றாறும் பெரியாறும் பெருகி வருகின்றன. ஆற்றில் பொங்கி எழுந்த வெள்ளத்தின் வேகத்தை பள்ளுக் கவிஞர் எழுதிக் காட்டும் முறை இனிமை வாய்ந்ததாகும்.

"வானக் குறிசில் வள்ளலார் வரைக்கோனைப் பரிசகொள்ளலார்
வழங்குமாறு திறப்பட்டே புனல் முழங்குமாறு புறப்பட்டே
தானக்களிறு படிந்திடக்குலை யேனக்களிறு மடிந்திட
தழையினுரமூர்தியும் பசுங்கழையினுரம் சிந்தியும்
கானக்குழவி யலையவே மதுபானக் குழவி கலையவே
காட்டுச்சாதி கேரிற்போய்க் குறமோட்டுச்சாதி யூரிற்போய்
சேனைப்புரவி யழகனூர் மருகோனைப் பரவி யழகுபூர்
தினையவனத்தை யுதிர்த்துப்பாலை யனைய வனத்தை யெதிர்த்ததே"

முல்லை நிலத்தைக் குறிஞ்சிப் பொருளால் நிறைத்து, மருதநிலத்தை முல்லைப் பொருளால் நிறைத்து, நெய்தல் நிலத்தை மருதப்பொருளால் நிறைக்கும் இயலமைந்த ஆற்று வெள்ளத்தின் வேகத்தைக் கவிஞர் அழகுற எழுதியமைத்தார். தானக்களிறு படிந்திடவும் ஏனக்களிறு மடிந்திடவும், கானக்குழவி அலையவும் மதுபானக் குழவிகலையவும், தழையினுரம் உந்தியும் கழையினுரம் சிந்தியும் பொங்கி எழுந்து புறப்பட்ட வெள்ளத்தின் தோற்றம் கண்ணுக்கினிய காட்சியாகும். இவ்வாறு கருங்கடலை நோக்கிக் கடுகிச் சென்ற வெள்ளம்.

"புகுந்த நெய்தலை மயக்கியே—மலர் மிகுந்த நெய்தலை சயக்கியே
புடையிற் புள்ளினம் சரியவே—அதன் இடையிற் புள்ளினம் விரியவே
பகுந்து நுளையப்பட்டினம்—திரை மிகுந்து நுளையப்பட்டினம்
படைத்திடாமை புகளவே—நிலை கிடைத்திடாமை திகளவே
உகுந்த தண்டலை நீக்கியே—புன்னை வகுந்த தண்டலைத் தாக்கியே
உப்பளத்திரை ஓட்டியும்—புனல் அப்பளத்திரை வட்டியும்

---

"மனையாளைக் குற்றமொன்றும் சொல்லவேண்டாம்."

தகுந்தடங்கடல் இறைவனைத்—தொழ மகிழ்ந்திடுங் கடல் துறையினில்
சார்ந்து சரிந்து சேர்ந்து—குறுகி வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே"

என்று பள்ளுக் கவிஞர் பண்புறக் கூறுமாறு ஆற்று வழியாய் வார்ந்து வார்ந்து சென்றது. இருகரையும் பெருகிவந்த ஆற்று வெள்ளத்தைக் கண்டு அகம் களிக்குமாறு பச்சேரிப்பள்ளர் தம் பள்ளியரைக் கூவி அழைக்கின்றார். பொருனையாறு பெருகிவரும் புதுமையைப் பார்க்குமாறு பணிக்கின்றார். அவ்வாற்று வெள்ளத்தில் மிதந்து வந்த மீன் வகையை எண்ணி மனம் மகிழ்கின்றார்.

"உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலில் உதிரங்கீறி அதிர நீர்
உதையவரைக்கும் பொதியவரைக்கும் ஒத்துப்போம்படி மூற்றும்போய்
பதைத்துநெளியும் துதிக்கை மூக்கன் பண்ணிச்சாளை எண்ணெய்மீன்
பசலிதிருக்கை கசலி கொழுத்த பண்ணுக்கும் பளம் பாசிமீன்
வளைக்கு மகரம் குதிக்கும் சன்னைமத்தி உல்லம் பொத்திமீன்
மடந்தை கடந்தை அம்பா நொறுக்கி மசரிபஞ்சலை கருங்கண்ணி
புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலைப்பொருந்தும் அழகர் புகழைப்
பொருனை ஆறுபெருகி வார புதுமைபாரும் பள்ளீரே" [யோல்

பெருமீன் வகையினையும் சிறுமீன் வகையினையும் செவ்வையாய் அறிந்து சுவைதெரிந்த பள்ளர்கள் ஆற்று வெள்ளத்தில் வந்த பசலிமீனையும் கசலி மீனையும், சாளைமீனையும் சன்னைமீனையும், மடந்தைமீனையும், கடந்தை மீனை யும், பஞ்சலைமீனையும் கருங்கண்ணி மீனையும் பாகுபடுத்திக் கூறும்முறை பண்பு வாய்ந்ததாகும். இம்மீன்களை ஆற்று வெள்ளம் ஆங்காங்கு மணலில் ஒதுக்கி அழகர் பெரும்புகழ்போல் பெருகிச் சென்ற புதுமையைக் கண்டு களிக்குமாறு பள்ளியரை அழைக்கும் முறை அருமை வாய்ந்து விளங்கக் காணலாம்.

இவ்வாறு பொருனையாறு பெருகி வரும் புதுமையைக்கண்ட பள்ளி யரைச் சிற்றாறு பெருகிவரும் செம்மையைக் காணுமாறு பள்ளர் பணிக்கும் திறம் அறிந்து போற்றத் தக்கதாகும்.

"குற்றாலத் திரிகூட மால்வரை உற்றே மேகம் பொழிந்த நீர்
கூடிப்பொருனை நாடித்திருமுக் கூடற்பதியை வலங்கொண்டே
வற்றுமடுவிற் பரவை குரவை வாளைகோளை தேளிமீன்
மயிந்தி உளுவை பயிந்தி கூனி மணலிஆரல் ஓராமீன்
பற்றுஅசரை மசரைகெளிறு பருவராலும் அணையிலே
பாயக்காலில் பாயக்குளத்தில் பாயவயலில் பாயவே
சிற்றாறென்பது பெற்றாலும் ஒரு சிறியவர்மனப் பெருமைபோல்
சித்ரநன்னதி பெருகிவார சித்ரம் பாரும் பள்ளீரே"

திரிகூட மலையினின்றெழுந்த சிற்றாறு என்னும் சித்ரா நதியில் பரவை மீனும் குரவை மீனும், வாளை மீனும் கோளை மீனும், மயிந்தியும் பயிந்தியும், அசரை யும் மசரையும், ஆரலும் விராலும் அடுக்கடுக்காய்ப் போந்து அணையிலே தட்டி காலிற் பாய்ந்து குளத்திற் பாய்ந்த வயலில் பாய்ந்த புதுமையைப் பள்ளர் வகுத்துரைக்கும் முறை வளமார்ந்த தாகும்.






## விக்கிரகாராதனை

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன் எழுதியது.)

குறிப்பு:—"ஆனந்தபோதினி" வாரப் பதிப்பில் "ஞானசந்திரிகை" என்னும் தலைப்பின் கீழ், ஆரம்பத்திலெழுதிவந்த வியாசத்தில் விக்கிரகாரா தனையைப் பற்றி யெழுத நேர்ந்த போது, அப்பத்திரிகையைப் பாராமல் மாத சஞ்சிகையை மாத்திரம் வாசிக்கும் நண்பர்களும் அறியும் பொருட்டு அதனை மாத சஞ்சிகையிலும் எழுதவேண்டுமென நினைத்ததுண்டு. எனினும் மறதியின் காரணமாக அது நிகழவில்லை. இது பொழுது அதற்குச் சமயம் வாய்த்தது மகிழ்வைத் தருகின்றது. ஆலய வழிபாட்டி னவசியம், விக்கிர காராதனையாற்றும் முறை, அதன் பயன் என்பவற்றின் தத்துவத்தை யறியா மல் தவறானநெறியிற் கைக்கொண் டொழுகுவோர் பலரும், பயனற்றவையா யிருப்பதோடு பெருந்தீமை பயப்பனவாயிருத்தலின் அவற்றை முழுதுமழிக்க வேண்டுமெனக் கூறுவோர் சிலரும் எங்கும் பரவிக்கிடக்கு மிக்காலத்தில், இவ்வியாசம் மிக்க ஏற்றதாகு மென்பது எமது உள்ளக் கிடக்கை. ஆகலின் இதுகாறும் வரையப்பட்டுவந்த "வேதாந்த சூடாமணி" வசனத்தை அன்பு டன் வாசித்துவரும் நேயர்கள் இரண்டொரு சஞ்சிகைகளில் அதன் தொடர்ச்சி தடைப்படுவதற்காக எம்மை மன்னிப்பார்களாக.

கடவுள் ஒருவர் உண்டு. அவரை வழிபடுவதே மனிதப் பிறவியின் பயன் என்னுங் கொள்கையை யுடையோர் அனைவரும், அவரது சிறப்பிலக்கணங் களைப் பற்றிய விஷயத்திலும், அவரை யடைதற்குரிய நெறிகளிற் சிறப்பு நெறிகளைப்பற்றிய விஷயத்திலும், ஒன்றற் கொன்று மாறுபாடாகவுள்ள பல திறப்பட்ட அபிப்பிராயங்களை யுடையவர்களாய்ப் பிரிந்துநிற்கும் எல்லா மதத்தினரும் அச்சர்வேசுவரனை வழிபடுதற்குத் தனியாக ஓர் இடம் இருப் பது ஏற்புடைத்தாகும்—என்று மொருமைப்பட்ட மனத்தினராய் ஆங்காங் குப் பல கோட்டங்களை யேற்படுத்தினர். அவ்விடங்களுக்கு ஆலயம் எனப் பெயரிட்டனர். 'ஆலயம்' என்பதற்கு இடம் என்பதே பொருளாகும். பத் திரிகாலயம், காரியாலயம் என வழங்குவதுங் காண்க.

சைவ வைணவம் என்னும் பாகுபாட்டினையுடைய இந்து மதம், மகம் மதிய மதம், கிறிஸ்தவ மதம், புத்தமதம் முதலிய எல்லா மதத்தினர்க்கும் ஆலயங்களுண்டு. ஆலய வழிபாடும் (அதாவது குறிப்பிட்ட காலங்களிலோ அல்லது தங்களுக்கு வசதியான காலங்களிலோ சென்று கடவுளைத் தியா னித்து வருதலும்) உண்டு. இதுவே ஆலயவழிபாடு எனப்படுகின்றது.

உலகத்துள்ள மதங்களிற் சில, ஆலயங்களை வெறும் தொழுகைத்தானங்களாக மாத்திரம் கொண்டிருக்கின்றன. வேறு சில அவ்வாலயங்களில் விக்கிரகத்தை வைத்துப் பூசித்து ஆராதித்து வணங்குகின்றன. அவ்வாறு விக்கிரகங்களை வைத்துப் பூசிக்கும் மதங்களில் தலை சிறந்து விளங்குவது இந்து மதமேயாகும். வடக்கே இமய முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில்—நகரம்—கிராமம்—மலை—எங்கு நோக்கினும்—சாதாரணமாக விருட்சங்களினடி முதல் கோடிக்கணக்கான பணச் செலவி லமைக்கப்பட்டவை வரையில்—விக்கிரகங்க ளமைந்த ஆலயங்கள் நிறைந்திருக்கக் காணலாம். ஆங்காங்கு நித்திய பூசைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுவதையும் லக்ஷக்கணக்கான சனங்கள் பற்பல இடங்களினின்றும் வந்து தரிசித்துக் கும்பிட்டுச் செல்வதையும் காணலாம். இவ்வாறு விக்கிரக முண்மை விக்கிரமின்மை என்னும் இருவகைப் பாகுபாடுள்ளவைகளாக நம் நாட்டுப் பெரியோர் கடவுளை வணங்கும் பொருட்டு ஆலயங்க ளமைத்துள்ளனர்.

இவ்விருதிறப்பட்ட ஆலய வமைப்பில் எது சிறந்தது? என்னும் வினாவொன்றெழின்—அதற்கு யாம் கூறும் விடையொன்றே. அஃதியாதெனின்:- இரண்டும் சிறந்தன என்பதே யாகும். அஃதெவ்வா றென்பதை, எப்பக்கத்தினுஞ் சாராது—காய்தல் உவத்தலின்றி—நடுநிலையினின்று நோக்குவாம்.

இருவகை யமைப்புக்களும் சிறந்தனவே யென முன்னர் மொழிந்தனமெனினும், அவ்விரண்டனுள் விக்கிரக மின்மையே சிறந்தது மென்பதே ஆன்றோர் துணிபாம். விக்கிரகாராதனை கூடாதென்பதை விக்கிரகாராதனை செய்வோராகிய இந்துக்களைப் போலத் துணிந்து கூறுவா ரெவருமிலர். ஆகவே, விக்கிரகாராதனை அவசியமின்றென்னுங் கருத்தை விளக்காது விக்கிரகாராதனை அவசிய மென்போர் கொள்கையைக் குறித்துச் சிறிது விளக்குவாம்.

விக்கிரகாராதனை கூடாதெனக் கூறுவோர் யாரோ அவர்களே விக்கிரகாராதனையை யங்கீகரித்திருப்பதால் விக்கிரகாராதனையின் அவசியம் அவசியமின்மை என்னு மிரண்டும் அவர்கட்கு உடன்பாடெனத் தெரிகின்றது. இவ்வாறு இரண்டையும் அங்கீகரிப்பதைக்கொண்டு அவர்கள் அவற்றைச் சாதனசாத்திய முறையில் அமைத்திருத்தல் வேண்டுமென்பது அறியக்கிடக்கின்றது.

ஆண்டவனருளைப்பெற விரும்புவோர் அவனைத் தியானித்தல் அவசியமென்பது அனைவர்க்கும் ஒப்ப முடிந்ததோ ருண்மையாம். தியானத்தின் லட்சணத்தைச் சுருங்கக் கூறவேண்டின் "மனத்தைப் பிறவிடயங்களிற் செலுத்தாது ஆண்டவனையே நினைத்துக்கொண் டிருத்தலாம்" எனக் கூறலே போதும்.

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே."

எனத் தவராஜசிங்கமாகிய பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளியபடி, மனம் விஷயாகாரப்பட் டுழன்றுகொண்டிருக்கச் செய்யும் பூசையும் தியான

"உருக்கி யொரு குடியைக் கெடுக்கவேண்டாம்."



னமும் பயன் படுதலில்லை. ஆகவே ஈசுவரத் தியானத்திற்கு மனம் ஒரு முகப்பட்டிருத்த லத்தியாவசியமாம். எனவே, இந்து மனத்தின் தொழில் உபயோகப் படுவதாகின்றது. எவ்வளவுக் கெவ்வளவு மனம் பகிர் முகப்பட்டு ஓடுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு மனத் துன்பமே பிராப்தியாகு மென்பதும், எவ்வளவுக் கெவ்வளவு ஓடுதலின்றி ஒடுங்குகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு ஆனந்தமே பிராப்தியாகு மென்பதும் அநுபவசித்தமான விஷயம். மனத்தை யடக்குவதென்பது சொல்லளவில் சுலபசாத்தியமானதாகக் காணப்படினும், செய்கையில் அதைவிடக் கடின சாத்தியமான காரியம் பிறிதொன்றில்லை யெனக் கண்டறிவோம்.

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்துவிற் றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திற மரிது"

என்னும் தாயுமானவர் வாக்கே இதனைவலி யுறுத்தும்,

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."

"தன்னை யறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—தன்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன் மற்றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்."

"மனமென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே—முத்தி
வாய்த்ததென் றெண்ணிக் கோடா தாண்டவக்கோனே."

"மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்."

என்பன போன்ற ஆன்றோர் அமுத மொழிகள் மன வடக்கத்தின் அவசியத்தை அறிவுறுத்துகின்றன. மேலும்,

"மனமன மெங்குண்டு மாயையு மங்குண்டு
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை

"தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்."

பிணையாய வேண்டா பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந்தானே."

என்னுஞ் செய்யுளால் மனமே மாயை என்றும், அதன் ஒடுக்கமே மாயா நீக்க மென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரக் கிடக்கின்றது. அன்றியும்,

இந்த மனமானது அந்தக்கரணம் (உட்கருவி) எனப்படுகின்றது. மனம் என்னும் பதம் 'மன்' என்னும் தாதுவினின்றுந் தோன்றியது. 'மன்' என்பதற்கு நினைப்பு என்பது பொருளாம். ஆகவே, நினைத்தற் றொழிலைச் செய்யும் கருவி 'மனம்' எனப்படுகின்றது என்றாகின்றது. மேலும், இது, (மனம்) காற்றின் அமிசமாக வுள்ளது. (உடலும், கர்மேந்திரியங்களும், ஞானேந்திரியங்களும், வாயுக்களும் ஆகியவனைத்தும் பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களாலும், அபஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களாலும் ஆக்கப்பட்டவை யென்பது சரீரதத்துவ நூலோர் துணிபு.) அதனால் (காற்றினமிசமா யிருத்தலால்) எப்பொழுதும் அசைந்து கொண்டே யிருக்கும் தன்மையினை யுடையது. ஒரு கணமேனும் ஓரிடத்தில் நிலையாக விருப்பதில்லை. அதனால் ஆன்றோரால் குரங்கிற்கு ஒப்பிடப்படுவது. எப்போதும் விஷயார்த்தங்களிலோடியுழலு மியல்பினது. ஆகவே, இத்தகைய மனத்தை ஓடாதடக்கிச் சர்வேசுவரனது திருவடிகளில் அழுந்த நிறுத்தித் தியானிப்பது எவ்வளவு கஷ்டம் என்பதைப்பற்றி அதிகமாகக் கூறவேண்டுவ தின்று. இதனை ஒவ்வொருவரும் அனுபவத்தி லறிந்து கொள்ளலாம். இங்குதான் விக்கிரகாராதனை பயன் படுகின்றது.

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" என்று ஒரு பழமொழி உண்டு, ஒருவனுக்குக் கோபம் பிறந்தாலும் நிதானமாக யோசித்துப் பார்க்கும் சக்தி யிருந்தால் அவனுடைய கோபத்தால் யாருக்கும் ஆபத்து இல்லை—பொறுமையற்றவனுடைய கோபம் கேடு விளைவிக்கும். நிதானம் என்பது எல்லாருக்கும் அமைவதில்லை. நிதானத்துக்கும் கோபத்துக்கும் வெகுதூரம். ஒன்று மற்றொன்றுக்குப் பகைப் பொருள், நிதானம் இழப்பதே கோபம். கோபம், அவசரம், படபடப்பு, ஆத்திரம் இவைகள் எல்லாம் ஒன்றற்கு ஒன்று சம்பந்தமுள்ளவை.

"வாத்தியார் கூலியை வைத்திருக்கவேண்டாம்."

# பெண்மையியல்பு

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

எவ்வுயிர்களிடத்தும் பிறவிக்கே உரிமையாக அமைந்து காணப்படும் தன்மைகளே இயல்பு என்று கொள்ளப்படுகிறது.

அவ்வாறே பகுத்தறிவுடன் கூடிய மனித வர்க்கத்திலும் பொதுவாகிய இயல்புக் குணங்களும் (பழவினைக் கேற்ப) மாறுபட்ட செயற்கைக் குணங்களும் விளக்க முறுகின்றன. ஆண் பெண்பாலாரிலும் இயல்புக் குணங்கள் மாறுபட்டே அமைந்துள வென்பது கண்கூடு.

பெண்பாலாரின் இயல்புக் குணங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மீன் தண்ணீரிலேயே பிறந்து வளர்தலும் பிறக்கும்போதே நீந்துவதும் இயற்கை.

பறவையின் குஞ்சு, இளமையிலேயே, ஆறறிவுடைய மனிதரால் எண்ணவு முடியாத ஆகாய வெளியில், எவ்வகைப் பயிற்சியும், சாதனங்களும், துணைவலியுமின்றிப் பறக்கின்றது. இது இயல்புக் குணமே.

புலியின் குட்டி உதிக்கும் பொழுதே அஞ்சாது எதிரேறிச் சென்று பாயும் வன்மைபெறுவதியற்கை. இவ்வாறே ஒவ்வோருயிர்களிடமும் இயற்கை வன்மையைக் கருவிலேயே அமைப்பது கடவுள் நியதி.

மனித வருக்கத்தில் மட்டும் இயற்கைத்தன்மைகளும் மாறுகிய செயற்கைத் தன்மைகளும் மிகவும் விரவியிருக்கக் காண்கின்றோம்.

இதுதான் நல்வினை தீவினைகளின் பயன் எனக் கொள்ளல்வேண்டும்.

கண்ட புகையினால் காணாத நெருப்பினை உணர்வது போல் இயற்கைக் குணமுடையோர்களை நல்வினையாளரென்றும் செயற்கைக் குண முடையோர்களைத் தீவினையாளரென்றும் கொள்வது மரபு.

இதனுக் கிலக்கணமாக நமது ஓதாதுணர்ந்த மூதாட்டியாரகிய ஔவைப் பிராட்டியாரும்

அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னெழிலும் புவிப்பொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விறல் மந் திரிமதியும்
பேசி விலையுடையாள் பெண்

என ஒரே வெண்பாவில் பெண்பாலாரின் இயல்புக் குணங்களை அமைத்துக் காட்டினர்.

"கஷ்ட நஷ்டங்கள் நீ மேலே செய்யுங் காரியங்கட்கு ஊக்கமும் ஆக்கமும் தருகின்றன."

தயை, பணி, எழில், பொறை, மெய்ப்பாடு, விறல் மந்திரி மதி இவ்வாறு குணங்களே மகளிரின் பெருமைக் கறிகுறியாகிய இயல்புக் குணங்களென்றறிதல் கடன்.

இவ்வாறு குணங்களுக்கும் சிறப்புவகையால் அன்னை, அடியாள், இலக்குமி, புவி, வேசி, மந்திரி ஆகிய ஆறு பெயர்களைச் சுட்டியுள்ளார். இவ்விஷயம் பெரிதும் குறிப்பிடற்பாலது. இவருள் ஐந்து பெண்பால் உவமை; ஒன்று ஆண்பாலுவமை. இதனால் ஐந்து பங்கு பெண்ணீர்மையும் ஒரு பங்கு ஆணீர்மையும் இயற்கையில் அமைந்திலங்குபவரே உத்தமப் பெண்ணாவர்- உண்மைப் பெண்ணாவர்.

இவ்வாறின்றி முழுதும் பெண்ணீர்மை யுடையவரும், பெரும்பான்மையும் ஆணீர்மை யுடையவரும் பயனற்ற பேதையராகி இதமற்ற வனவிலங்குகட்கு இணையாவர்.

இவ்வாறே பெண்ணீர்மை சிறிதளவு கலவாத முழு ஆணீர்மையாளர் உளராயின் அவரே கொலைஞர்-அரக்கர் என்று அழைக்கப்படத் தக்கவராவர். இவ்வமைப்பு முறை இவ்விதமாக, மேலே எடுத்துக் காட்டிய வெண்பாவில் உள்ள இயல்புக் குணங்களைக் கூர்ந்து ஆராய்வோமாயின் பெண்மையின் பெருமையும், அவசியமும் இனிது புலனாகும்.

முதலாவது அன்னை தயை. இது தாய்மைப் பேற்றினையடைந்த பெண்பாலாருக்கே பொருந்து மென்பதில்லை. தன்னலங் கருதாத-கைம்மாறு கருதாது எழுகின்ற ஈன்றதாயின் இயற்கைப் பேரன்பானது பெண்பாலார்க்குக் கருவிலேயே அமைந்து ஒக்க வளரும் தன்மைத் தாகும். இயற்கையில் இல்லாத தொன்று பருவம் வந்து தாயாகிய பொழுது அரும்பமுடியாது. இயற்கையில் அரும்பும் ஒன்றே பருவத்தில் மலரக் கூடும்.

இத்தகைய தூய அன்பே மக்களிடத்துச் சிறப்புவகையாலும், கணவன், விருந்தினர், எளியோர் இவர்களிடத்துப் பொதுவகையாலும் பரவித் தொண்டு செய்கின்றது. இஃதின்றேல் இவ்வுலகம் சாரமற்றதாகும். அன்றியும் அன்பே சிவம் என்பதற்கேற்ப இது தெய்வீக குணமுமாகும்.

இரண்டாவது அடியாள் பணி என்றதில் பணிசெய்து பிறரைப் போஷிப்பதைத் தனது கடமையாகக்கொள்ளும் எண்ணமும், அடக்கமும், பேதியாத சகிப்புத் தன்மையும், தனது பெருமையைத் தானுணராத பெரும்பண்பும் உடைமை இனிது விளங்குகின்றது.

அடியாள் என்றது கூலிக்குக் கட்டுண்டு பணியாற்றும் ஒரு பெண்பாலைக் குறிப்பிடுவதால் இல்லத் தலைவிக்கு இழுக்க முண்டென்று கொள்ளுதல் கூடாது.

உத்தம குணங்கள் அமையப் பெற்ற பெண்கட்கு உண்மையாகவே தங்களுடைய நாயகன்மார், மக்கள், நெருங்கிய சுற்றம் இவர்களுக்கு ஆக வேண்டிய உதவிகளைத் தாங்களே நேரில் ஏற்றுத் தொழிற் படுதலில் விருப்பம் அதிகம். ஏவலாளர் மூலம் பூர்த்தி செய்துகொள்ளுவதில் அமைதி உண்டாவதேயில்லை. அதுபற்றி அடியாள் போன்று பணி செய்வதிலும் விரும்பிச் செய்யும் வேட்கையுடையவர் என்பது பெறப்படும். இக்குணம் பின்னும் அத்தகையாருக்குச் சிறப்பே தரும்.

---

"ஒருகாலும் சோம்பலுக்கு இடங் கொடுத்துவிடாதே"



இனி மலர்ப் பொன்னாகிய இலக்குமி போன்ற எழில் உடையார் என்று விளக்கின காரணம் ஆராய்தற்பாலது.

முகப் பொலிவையே எழில் என்பது குறிக்கும். "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்பதும் இதனையே புலப்படுத்தும். இல்லையென்றுரையாத இரக்கமும் ஈகையும் பெருகிய அறநூற்பயிற்சி மிக்குடைய பெண்கட்கு அகத்தினழகு முகத்திற்றெரியும் என்றபடி அகவிளக்கம், அகவிலாசம், இவைகளை முகம் செவ்வனே புலப்படுத்தும் உண்மைபற்றி பொன்னின் எழில் உடையாராயிருத்தலே பெண்ணின் இயற்கை அழகெனை ஔவையார் அணிந்து கூறினர்.

இலக்குமி தங்கிய விடத்தில் இல்லாத பொருள் இராதென்பதுபோல மிகப் பொலிவுடைய பெண்கள் இருக்குமிடத்திலும் எவ்விதக் குறைபாடுகளும் இராவென்பது திறம். இதற்கு நைடதத்தில் நளன் வாக்காக வந்துள்ள "நாம நூல் பகரு முன்னூலோர் இலங்கெழில் அளவு குணமென விசைப்பர்" என்ற குறிப்பும் நற் சான்றாகும்.

இவைகட்குமேல் புவிமாது போன்ற பொறுமை யுடையராயிருத்தலும் இயல்பெனக் காணப்படுகின்றது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" எனத் தெய்வப்புலவர் பொறுமையைக் காண்டற்கு அகழ்தலை ஒரு உபாயமாகக் குறிப்பிட்டமையால் அவ்வாறே தமக்கு இன்னா பலசெய்வாரிடத்தும் சினக் குறிப்புக் காட்டாது சகிப்புத் தன்மையுடன் ஏற்றுப் பொலிவதே பெண்மைக்குப் பேரலங்காரமாக எண்ணப் படுகிறது. உதாரணமாக பெண்களின் சகிப்புத்தன்மை ஆண்மக்களிடம் காணமுடியாதென்பதை இல்லறம் நடாத்தும் எவரும் மறுக்க முன் வாரார். பெரும்பான்மைக்கு மாறாக இரண்டொரு பெண்களும் உளர் எனினும் அவர்கள் உத்தம குணவதிகளாக எண்ணப் படார் என்பது தேற்றம். இந்தப் பொறுமை என்னும் குணமே ஏனைய எல்லா இயல்புக் குணங்களையும் தாங்கி நிற்கும் ஊற்றம் உடையதுமாகும்.

இனி வன்னவுடல் வேசி துயில் என்ற குறிப்பினையும் சிறிது ஆராய்வோம்.

வன்ன வுடல் என்றதினால் இயற்கை மென்மையே யன்றிச் செயற்கையாலும் தூய்மையாக வைக்கப் பட்டு மனங்கவர் பொலிவுடையரா யொளிர்தல் உணரப்படுகின்றது.

இப் பண்பினைப் பெரிதும் போற்றிக் காப்பவர் வேசியராதலின், தனது நாயகன் அளவில் மட்டும் குலமகளிரும் இன்பத் துறையில் அன்னாரை யொப்ப நடந்து ஆடவனின் அன்பைப் புறஞ் செல்ல விடாமல் காத்து ஒழுகல் வேண்டு மென்பது பெறப்படுகின்றது.

அருவருக்கத்தக்க செய்கைகளும், வெறுப்புண்டாக்கும் வன்மொழிகளும், உணர்வை மங்கச் செய்யும் சோம்பலும் பெண்களிடம் அமையுமேல் அவர்கள் உத்தம குணவதிகளாக (கற்பினராயினும்) ஏற்கத் தக்கவர் ஆகார்.

மேலே காட்டிய இவ்வைந்து வகைக் குணங்கட்கும் உதாரணங்களாக ஐந்து பெண் பாலினரையே எடுத்தாண்ட மூதாட்டியார் ஆறுவதாக

---

"உன் மனச்சாட்சியை மதித்து நட"

விறன்மந்திரி மதி என ஆண்பாலியற்கையிலும் அறிவிற் சிறந்த மந்திரியை உதாரணமாக்கினார்.

இதன் நுட்பத்தை ஆராய்தல் வேண்டும். ஆண்மக்களிலும் பெண்மக்கள் நுண்ணறிவு உடையவரென்பதும், அவ்வறிவை நாயகன் கடமையிற் சோர்வுறுங்கால் வலிந்து வற்புறுத்தி எடுத்துக் கூறித் திருத்தித் தீமையினின்றும் விலகும்படி செய்தல் கடமையென்றும், அக்கடமையை யுரிமையாக உடையவர் உத்தமப் பெண்கள் என்றும் அங்கீகரித்திருக்கின்றார். இதற்குக் குசேலர் மனைவியே உதாரணமாகும்.

பெண்பாலார் தாம் இல்லக்கிழத்திகள் என்கிற முறையில் அற்றம் நேர்ந்துழி நேர்ந்துழி ஆலோசனை கூறும் உரிமையை இயற்கைக் குணமாகப் பெற்றிருத்தல் உண்மைப் பெண்களின் இலக்கணமேயன்றி அடிமை வாழ்க்கை நடத்த வேண்டியவர் அல்லர் என்பதும் இதனாற் பெறப்படும். மாயச்சூதினால் தரும பூபதி தமக்கென வுள்ளவை அனைத்தையும் தோற்று வனவாசம் செய்ய துரியோதனியரால் ஏவப்பட்டுப் புறப்படத் துணிகையில் அடிமைத் தன்மையுடன் வனம் செல்லின், மீண்ட பின்பும் இவ்விழி நிலைமையே தொடரும் ஆகலின் அதனை நீக்கிக் கொள்ளுதல் கடமை எனப் பாஞ்சாலி எடுத்துரைத்த நீதிவாதம் அரசவைக் கண் இருந்த அறிஞராலும் போற்றப் பட்டது. அவ்வாறு ஆடுவதற்குப் பந்தயம் வைக்க எப்பொருளும் இன்றென தருமர் தயங்க இவர் இது காறும் செய்த தருமத்தையே பந்தயம் வைக்கும் படி திரௌபதியார் கூறியது அதனிலும் போற்றற்குரியதாயிருந்தது. அவ்வாறே ஆடியபோது தருமன் இழந்த பொருள்களை யெல்லாம் திரும்பப் பெற்றனர். அடிமை தீர்ந்தனர். தருமம் வெல்லும், பாவம்தோற்கும் என்றமை நிலை பெற்றது. ஆகவே இத் தருணத்தில் தேவியார் தமது மதிமந்திரக் கடமையை ஆற்றினர் என்பதே ஈண்டு கொள்ளற்பாலது.

ஆகவே மூதாட்டியார் எடுத்தோதிய அன்னை தயையும் என்ற தொடக்கத்த வெண்பாவின்படி பெண் என்பதற்கு மேலே விவரமாக எடுத்துக் காட்டிய படி ஆறு குணங்களும் அமையப் பெற்றவர்களே சான்றோர். அவ்வாறமையப் பெறாதவர்கள் உத்தமப் பெண்ணினத்தில் சேர்க்கப் படார். இவ் வாறு குணங்களிலிருந்து தனித்தனி பற்பல நல்லியற்கைக் கால்கள் எழுந்து பெருகிப் படர்ந்து பெண்ணுலகைப் பெருமை செய்யும் பேரழகை விவரிப்பதற்கு அறிவாற்றல் என்பால் குறை என்பதே என் நம்பிக்கை.

இஃதிவ்வாறாக இத்தகைய இயற்கையூற்றினைச் செயற்கையில் கல்வியால் அகழ்ந்து கோடல் வேண்டுவது இன்றியமையாக் கடமையாகும். தற்காலத்தில் அன்னிய பாஷைப் பயிற்சியில் மோகம்; அதன் வழி அம்மொழிச் சார்பினரின் நடையுடை யுணவாதி பாவனைகளில் மதிப்பு; பொருளீட்டு முயற்சி, அதிகார விருப்பம், பதவிப் போட்டி, பட்டக்களியாட்டம் இவைகளில் பெண்மக்களைப் புகுத்தி இந்திய சகோதரிகளின் இயற்கைக் குணங்களாகிற தீம்புனலூற்றினைப் பெற முடியாவண்ணம் சுண்ணம் தீற்றி வன்னம் பொலியும் கற் கட்டிடங்களுக் கிணையாகிய நவீன நாகரிகச் சின்னங்களை நல்கும் பிற பாஷாபிவிர்த்தியாகிற மாளிகைகளை எழுப்பி, அந்தோ! இந்திய மக்கள் பொய்யானந்தம் படிந்து வருகின்றனர். கால தேவதை விரைவில் இன்னோர் கண்களை வளரும்படி செய்வதாகுக. பெண் கல்வி தேசபாஷையிற் சிறந்திடுக. ஆண்பாலார் துணை புரிவாராக.

# தமிழ்மொழியின் பெருமை

—(o)—

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே. (பாரதி.)

சென்ற சில மாதங்களாகத் தமிழ்மொழியின் பெருமை சம்பந்தமாகத் தொடர்ந்து எழுதி வருகின்றேன். வாசக சகோதரர்கள் கவனமாய் வாசித்திருப்பர் என்று நம்புகின்றேன். நான் இதுவரை வரைந்துள்ளதின் சாராம்சம் யாது?

உலகில் உள்ள மக்கள் ஜாதியினரில் தமிழர்க்கே தங்கள் தாய்பாஷையின் கண் அளப்பருங்காதல் உண்டென்று கூறிக் கொள்வர். தங்கள் தமிழே மொழிகளில் எல்லாம் தலைசிறந்தது என்று சாற்றுவர். அவர் கூற்றுக்கு ஆதாரமாகப் பல காரணங்கள் பகர்வர். அவற்றைச் சிறிது கூர்ந்து நோக்குவோர்க்கு அவை புராண சம்பந்தமான காரணங்கள், சரித்திர சம்பந்தமான காரணங்கள் என இருவகையாய்ப் பிரிந்து நிற்பது புலனாகும்.

அவற்றுள் புராண சம்பந்தமாகக் கூறப்படும் ஆதாரங்கள் உண்மை என்று உடனே ஒப்புக்கொள்ள ஒண்ணாது. உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அவை ஒரு மொழியின் பெருமையை ஸ்தாபிக்கப் போதிய வன்மை உடையன ஆகா.

சரித்திரங் கூறும் காரணங்கள் உண்மையாகவும் இருக்கலாம், பொய் யாகவும் இருக்கலாம். உண்மையான காரணங்கள் என்று வேறு பிரித்து ஆராய்தல் அவசியம். அங்ஙனம் உண்மையானவை என்று அறையப்படும் இதிகாச காரணங்கள் ஆறு ஆகும்.

அவற்றுள் முதற்கண் மொழியப்படும் சிறப்பு தமிழ்மொழியின் தோற்ற காலத்தின் தொன்மையைப் பொறுத்ததாகும். தமிழ் மொழியே தரணியில் முதன் முதலாக முளைத்தமொழி என்பது தமிழ்மக்கள் துணிபு.

தமிழின் தொன்மையைக் காட்டக்கூடிய சான்றுகள் தமிழ்நூல்களிலும் இதர தேசத்து நூல்களிலும் காணப்படும் என்பர். தமிழ் நூல்கள் சமஸ்கிருத நூல்கள்—இவை இயம்பும் சான்றுகள் இவை என்று இதற்கு முன் எழுதிய கட்டுரைகளில் காட்டிவிட்டேன்.

“நல்ல உணவால் உடல்நலம் வளர்ச்சி பெறுகிறது”

சென்னை 600 008

பிறநாட்டு நூல்கள் பேசும் சான்றுகளிலும் சில தந்துள்ளேன். இன்னும் சில இவண் தர விருப்பம்.

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆக்கப்பட்ட பழந்தமிழ் நூல்கள் அக்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் ராஜீய சம்பந்தமாயும் வியாபாரம் சம்பந்தமாயும் தொடர்பு இருந்தது என்று விளக்குகின்றன.

"யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்"

என்று புறநானூறும்,

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்"

என்று சிலப்பதிகாரமும்,

விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி

என்று மதுரைக்காஞ்சியும் கூறுவதைக் கவனிக்க. ஆகவே அப் பழயகாலத்தில் இப்பொழுது கிரீஸ் என்று வழங்கப்பெறும் ஐரோப்பிய நாட்டிலிருந்து பலர் இங்கே தமிழ்நாட்டுக்கு வந்திருந்தனர் என்பது விளங்கும். அக் கிரேக்கர் அக்காலத்தில் "யவனர்" என்று அழைக்கப்பட்டனர். காரணம் யாதெனின் அக்காலத்தில் கிரீஸ் அயோனியா என்று அழைக்கப்பட்டதால் கிரேக்கர் "அயோனியர்" என்றும் அழைக்கப்பட்டு வந்தனர் என்பதாகும். அயோனியர் என்னும் ஐரோப்பிய மொழி தமிழ் மக்கள் வாயில் யவனர் என்று மாறிவிட்டது. அவர்கள் தங்கள் நாட்டிலிருந்து சிறந்த மதுவகைகள் கொண்டுவந்து கொடுத்தார்களாம். அயோனியாவிலிருந்து குதிரைகளும் பாண்டியநாட்டுக்கு வருவதுண்டாம். யவனரே பாண்டியன் கோட்டைவாயிலைக் காத்து நின்றனராம்.

(2) கி. மு. ஆறாவது நூற்றாண்டில் இலங்கையில் அரசாண்டுகொண்டிருந்தவன் விஜயன் என்பவன். அவன் பாண்டியன் மகளை மணஞ்செய்து கொண்டதாக "இலங்கை மகாவம்சம்" என்னும் இலங்கைநூல இயம்புகின்றது. மணமகள் பாண்டிய இளவரசி கடல் கடந்து லங்காபுரிக்குச் சென்றபோது கப்பல்கள், யானைகள், குதிரைகள், வண்டிகள், மந்திரிகள், ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள், எழுபத்தைந்து வேலையாட்கள், பல அடிமைகள், எழுநூறு தோழிப்பெண்கள் சுமந்து வந்தனவாம். அக் கப்பல்களை நடத்திச் சென்ற கப்பலோட்டிகள் அதிகத் திறமை வாய்ந்தவர்கள் என்று அறிவிக்கக் கூடிய பல சான்றுகள் உள என்று தாமஸ் பௌல்சில் என்பவர் "புத்தர் காலத்து தட்சண தேசம்" என்னும் கிரந்ததில் கூறுகின்றார்.

(3) அதற்கு முன்னர் தமிழ்நாட்டிற்கும் கிரேக்க தேசத்திற்கும் வியாபாரம் மிகச் சிறப்பாய் நடந்து வந்தது. அரிசி என்னும் பதத்திற்கு இங்கிலீஷ் மொழி 'ரைஸ்" (Rice) என்பதாகும். அந்த ஆங்கில வார்த்தையின் மூலம் கிரேக்க மொழியாகிய "ஆரிஜா" (Oryza). அந்த ஆரிஜா என்னும் கிரேக்கபதம் தமிழ் "அரிசி"ப் பதமே எனறு ஆசிரியர்கள் தீர்மானிக்கின்றனர்.

"ஆன்மாவின் கோவில் உடல்"



அது போலவேதான் தமிழ்ப்பதமாகிய "இஞ்சிவேர்" என்பது முதலில் "ஜிஞ்சிபேர்" (Gingiber) என்னும் கிரேக்க பதமாகிப் பின்னர் "ஜிஞ்சர்" (Ginger) என்னும தற்கால ஆங்கில மொழியால் வழங்கி வருகிறது என்பர்.

(4) அதற்கு முன் பாபிலோனியா தேசத்தோடு தமிழர் வியாபாரம் செய்து வந்தனர். அந்நாட்டில் தமிழ் வியாபாரிகள் பலர் குடியேறியும் இருந்தனர். முக்கியமாக அந்நாட்டிற்குத் தமிழ் நாட்டிலிருந்து அரிசியும் சந்தனமரமுமே போயின என்று கென்னடி என்பவர் கூறுகிறார்.

(5) அதற்கு முன் கி. மு. 727-ம் வருஷத்தில் அஸ்ஸிரியா என்னும் தேசத்தை அரசாண்டுவந்த மன்னனாகிய ஷால்மனேசர் என்பவனுக்கு இங்கிருந்து பல யானைகள் அனுப்பப்பட்டன என்பதும் கூறப்படுகின்றது.

(6) அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் அதாவது கி. மு. 962 முதல் கி.மு. 930 வரை பாபிலோனியாவில அரசு செலுத்திவந்த ஸாலமோன் என்னும் பேரரசன் தன் ராஜதானி நகரைச் சிறப்பாய் அலங்கரிக்க விரும்பி விசேஷக் கப்பல் கூட்டம் ஒன்றைத் தயாரித்து, தங்கம் நவரத்தினங்கள் முதலியன அயல்நாடுகளில் போய் கொண்டு வருமாறு தமது மாலுமிகளையும் வியாபாரிகளையும் அனுப்பிவைத்தான். அவர்கள் அங்ஙனமே சென்று சுமார் இரண்டு வருஷங்கள் கழித்து தங்கம் வெள்ளி நவரத்தினங்கள் வாசனைத்திரவியங்கள் சந்தனமரம் குரங்குகள் மயில்கள் முதலிய பல அபூர்வ வஸ்துக்களைக் கொண்டுவந்து அரசனுக்குச் சமர்ப்பித்தனர். அவர்கள் கொண்டுவந்த வஸ்துக்களில் வெள்ளி தவிர ஏனைய பொருள்கள் எல்லாம் தமிழ் நாட்டில் மட்டுமே காணப்பட்டதால் அந்தப் பாபிலோனிய வியாபாரிகள் தமிழ் நாட்டினரோடு வாணிபம் செய்து வந்திருக்க வேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் துணிகின்றனர். தவிர ஸாலோமோன் அரசன் காலத்திய விவிலிய (Bible) நூலில் காணப்படும் "தூக்கிம்" என்னும் பதம் அந்நாட்டு ஹீப்ரு பாஷைப் பதம் அன்று; அது தமிழ் மொழியாகிய "தோகை" (மயில்) என்பதன் மாறுபாடே என்றும் தீர்மானிக்கின்றனர். இதிலிருந்து ஸாலமோன் காலத்திலேயே தமிழ் மக்கள் நனிநாகரிகம் பெற்றிருந்தனர் என்பது விளங்கும்.

(7) அதற்கு முன்னர் அதாவது கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் வாழ்ந்து, இறந்தவுடன் யாக்கை அழியாது தைலமாட்டப்பட்டுப் பத்திரமாய்ப் பேழைகளில் அடக்கம் செய்யப்பட்டு வைத்திருக்கும் எகிப்திய மன்னர் தேகங்களின் மேல் போர்க்கப்பட்டிருக்கும் மெல்லிய வர்ண வஸ்திரங்கள் இந்தியாவில் நூற்று நெய்யப்பட்டவையே என்றும், அக் காலத்தில் சுருக்கமான இடத்திலேயே ஆரியர் வசித்துவந்தபடியால் அத்துணிகளை நூற்று நெய்து சாயம் தோய்த்து மலர்கள் கோத்து எகிப்துக்கு அனுப்பியவர் திராவிட மக்களாகவே இருக்க வேண்டும் என்றும் ஆசிரியர் லாஸன் என்பவர் அபிப்பிராயப் படுகின்றனர்.

சென்ற மாதம் எழுதிய வியாசத்தில் சந்திர குப்த மௌரியா மன்னன் அரச சபையில் பிரதம மந்திரியாய் இருந்த சாணக்கிய அந்தணன் தான் எழுதியுள்ள அர்த்த சாஸ்திர நூலில் பாண்டிய நாட்டு வஸ்திரங்களையும் சிறப்பாகத் தென் மதுரையின் துணிவகைகளையும் கூறிப் புகழ்ந்துள்ளதை எடுத்துரைத்திருந்தேன்.

"பேச்சில் மென்மையும் இனிமையும் கலந்திருக்கவேண்டும்"

பண்டைத் தமிழ் நூல்களும் தமிழ் நாட்டார் செய்த மெல்லிய அழகான ஆடைகளைக் குறித்துக் கூறுகின்றன.

நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை

என்பது பொருநராற்றுப் படையில் காணப்படுகின்றது. அதன் பொருள்

"இழைபோன வழி என்று குறித்துட்
பார்க்க வராத மெல்லிய னவாய்ப்
பூந்தொழில் முடிந்து பாம்பின்தோ
லை யொத்த ஆடை"

என்பதாகும். இது போலவே இயம்பும் சிறு பாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை முதலிய பத்துப் பாட்டுச் செய்யுட்களும்.

சாணக்கியர் புகழ் மொழிகளும், தமிழ் நூல்கள் கூற்றுக்களும், ஆசிரியர் லாஸனின் அபிப்பிராயம் சரியானதே என்று வலியுறுத்தி நிற்பதை நோக்குக.

(8) பழைய காலத்தில் "சால்டியா" என்று பெயர் பெற்ற நாட்டில் புதைபட்டிருக்கும் நகரமாகிய "ஊர்" (Ur) என்பதில் தேக்குமரம் காணப்படுகின்றது. அத் தேக்கு மரம் தென் இந்திய நாட்டையே சேர்ந்தது என்று ஆசிரியர்கள் பலர் உறுதி கூறுகின்றனர். "ஊர்" என்னும் நகரம் செழித்தோங்கி யிருந்தது கி. மு. 4000 ஆண்டளவிலாகும். அக்காலத்து ஆரியர் வேதமொழி எதுவும் இந்தியாவுக்குள் புகுந்துவிடவில்லை. ஆகையால் திராவிடரே தங்கள் நாட்டுத் தேக்குமரத்தைச் சால்டியா நாட்டு "ஊர்" துறைமுகத்துக்கு அனுப்பியோ அல்லது கொண்டுபோயோ இருக்கவேண்டு மென்பது "வேத இந்தியா" என்னும் சரித்திர நூல் வரைந்துள்ள ராகோஜின் என்னும் போராசிரியரின் துணிபு.

ஆகையால் மேற்கூறிய சான்றுகளிலிருந்து தமிழ் நாடு சுமார் ஆறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே நாகரிகம் மிகப் படைத்து உலக வியாபாரத்திற்கு நடுநாயகமாய் விளங்கிவந்தது என்பது தெளிவாம்.

அங்ஙனம் அது பல நாட்டார் வந்து வாணியம் செய்யத்தக்க நனி நாகரிகம் பெற்ற நாடாயிருந்திருப்பின் அந்நாட்டாரின் மொழி அதிகச் சிறப்புப் பெற்றதாயிருந்திருக்க வேண்டும் என்பதிற்குச் சந்தேகமில்லை. பாஷையொன்று சிறப்புற்றிருக்க வேண்டுமானால் அதற்கு எத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு முன் அது தோன்றியிருக்க வேண்டும்?

ஆரியர் ரிக்வேதம் எழுந்தது பஞ்சநதி தீரத்திலாகும். ஆனால் அவர்கள் அவ்விடத்திற்கு வருவதற்கு முன்னதாகவே தமிழர் நாகரிகம் படைத்தும், சால்டியா தேசத்தோடு வியாபாரம் செய்தும் வந்த விபரம் மேலே கண்டோம். ஆகையால் உலகத்தில் தற்காலம் காணப்படும் மிகப் பழைய நூலாகிய ரிக்வேதம் இயற்றப்படுவதற்குப் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னரே தமிழ் தோன்றி யிருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலை.

(தொடரும்)

---

"உன்னுடைய பாட்டனார் என்ன நிலைமையில் இருந்தார் என்பது அநாவசியம். நீ எப்படி இருக்கிறாய்?"

# சாத்தனார் நூற் சிறப்பு.

(வி. பரமசிவன்.)

## தோற்றுவாய்

சாத்தனார் எனும் கவின்மேகம் பொழிந்த பாக்களெனும் தண்ணந் தாரைகளால் நிறையலுற்ற தமிழகக் குளமானது வற்றாப் பொய்கை எனப் போற்றப்பட்டுப் பொலிகின்றது. இம்மேகம் பொழிந்த பாக்களெனும் தாரைகள் இன்று மணிமேகலை எனும் பெயருடன் பிறங்குகின்றது. யாம் ஈங்கு கவின்மேகமென உருவகப் படுத்திய சாத்தனார் வரலாற்றை ஈண்டுச் சிறிது கூறுதல் அமைவதே.

## சாத்தனார் காலம்

இவ்வாசிரியர் பெயர் சீத்தலைச் சாத்தனார் என்ப. இதனோடு "கூலவாணிகன்" எனுமோர் அடையையும் இயைப்பர். என்னை எனின் கூலவாணிகம் செய்தமையின் என்ப. கடைச்சங்க காலத்தோ ரென்ப ஆராய்ச்சித்திறம் மிக்கார். இப்புலவர் பெருமானும் முத்தமிழ் ஆரம் தந்த இளங்கோவடிகளாரும் சமகாலத்தவ ரென்பதை மறுப்பாரில்லை. அகச்சான்றும் புறச்சான்றும் அளவிடற் கரியன உள. ஈண்டு ஒன்றிரண்டு இயம்புதல் அமையும்.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென."

என்பது மணிமேகலைப் பதிகமாகும்.

உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்

என்பது சிலப்பதிகாரப் பதிகமாத லுணர்க.

"மணிமேகலை"யை இளங்கோவடிகள் கேட்டன ரெனவும், சிலப்பதிகாரத்தைச் சாத்தனார் கேட்டன ரெனவும் ஈங்குள்ள உரைகள் விளக்குமாறுணர்க. இதனான் இருநூற் புலவரும் ஒரு காலத்தவரே என்பது துணியப் பெறுதலையும் தேர்க. இஃதேயன்றியும் "மணிமேகலை" ஆசிரியரும் சேரனாப் போதாரும் ஒரு காலத்தின ரென்பதும் ஈண்டு உணர்தற் பாற்று. இதற்குத் திருவள்ளுவமாலையில் சாத்தனார் செய்த செய்யுளும,

"......................வள்ளுவர் முப்பாலால்,
தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு"

என மருத்துவன் தாமோதரனார் உரைத்த செய்யுளும் தக்க சான்றும்.

---

"விளையாட்டே வினையாதலும் உண்டு"

திருவள்ளுவரது நூற்கருத்துக்களும் சொற்றொடர்களும் மணிமேகலையிற் பல இடங்களில் அமைந்திருத்தலும் இதற்குச் சான்றாகும். சாத்தனார் சங்ககாலத்தினரென்பதற்கு அதிகமான சான்றுகள் தேடிச் செல்ல வேண்டுவதில்லை. புறநானூறு, நற்றிணை முதலாம் பன்னூல்களில் இன்னார் செய்த பாக்கள் பொலிதலே இதற்குக் கரியாம்.

## நூலாராய்ச்சி

நூலாராய்ச்சி தற்போழ்து பயன்தரும் முறையிற் கொள்ளப் பெறவில்லை. நூலாராய்ச்சி, சொல், தொடை, யாப்பு, அணி முதலாய செய்யுளிலக்கண ஆராய்ச்சியோடு அமைந்து விடுகின்றது. நூலில் ஆங்காங்குள்ள ஒன்றிரண்டு சொற்களைப் பற்றிக்கொண்டு, இவ்வாசிரியன் இன்ன காலத்தினன், இவனது குலம் இன்னது என்பன வாதிய பயனில்லாத ஆராய்ச்சிகளே காணப்படுகின்றன. நூலாராய்ச்சி செய்யப் புகுவோருக்கும் சரித்திரம் எழுதுவோருக்கும் முக்கியமாக வேண்டியது நல்ல காரணங்களாகும். காரணங்களின்றிச் செய்யும் ஆராய்ச்சியோ சரித்திரமோ பயன்பெறு தொழியும். அஃதேயன்றியும் மக்களது மன நிலையும் அதனாற் கேடுறினும் உறலாம்.

எந்நூலை ஆயப் புகினும் அந்நூலாராய்ச்சியினது முடிவு அந்நூலினது அமைப்பையும், அந்நூலில் சூலமாக விளங்குறு இரகசியங்களையும், புதிய அழகுகளையும் பிறர்க்குப் புலப்படுத்துவதாகவே இருத்தல் வேண்டும். சொல்லழகையும் தொடையழகையும் மாத்திரம் நோக்கி ஆராய்ச்சியை முடித்தல் ஆராய்ச்சி இலக்கணத்தோடு மாறுபட்டதாகவே கருதப்படும்.

ஓர் மனிதனது சால்பைத் தெளிவான் புகுந்த ஒருவன் அவனது அணியழகையும், ஆடையழகையும் கண்டு இம்மனிதன் உயர்ந்தோனே—சான்றோனே எனப் பகர்தலோடு ஒப்பதாகும் மேற்கூறிய ஆராய்ச்சி.

ஆராய்ச்சி என்பதும் புதியதோர் சிருஷ்டியே யாகும் எனல் மிகையன்று. நூலாசிரியனது உள்ளத் தோற்றங்களையும் எண்ணங்களையும் நுண்ணிய தன் அறிவால் அறிவுறுத்தல் சிருஷ்டியேயன்றோ? அழகை உணர்வினால்—தத்தம் மன அறிவால் உணர்தலே சுவையாராய்ச்சி. இன்று கவிச்சுவை காண்போர் இத்தகைய நிலையில் இல்லை யென்பது எமது துணிபு. சொல்லழகுகளிலும் மோனை முதலாய தொடை யழகுகளிலும் மயங்கி நூலினது அமைப்பழகை உணர்தற்கு இயலாமல் போய்விடுகின்றனர். சொல்லழகை எவ்வாறுணர்தல்—எவ்வாறு ரஸித்தல் வேண்டும் என்பது எம்மால் விளக்கப்படல் வேண்டுவதே.

காவியங்களிலுள்ள சொற்களை நுனித்து நோக்கின் ஓர் உண்மை பெறலாம். அஃது அவ்வச் சந்தர்ப்பத்திற் கேற்பச் சொற்கள் அமைந்திருத்தல். வைரக் கற்களைத் தனியாக நோக்கி அழகு காண்பதினும் தங்கத்தில் பதித்த பிறகு அழகு காண்பதே மேல். தங்கத்திற் பதிக்கப் பெற்ற வைரத்தை மட்டும் ரஸிப்பது ரஸனையாகாது. அதனை அத் தங்கத்தோடியைத்து—அதனது அமைப்பைக் கொண்டே அழகை அறிதல் வேண்டும். அழகை உணர்கின்றேனென இயம்பி அத் தங்கத்தினின்றும் அவ் வைரத்தைப் பிரித்துவிடின் அத்

“பாம்பின் கால் பாம்பு அறியும், திருடனைத் திருடன் அறிவான்”



தங்கத்தினது கட்டுத்திறனும் வைரத்தினது மிகுந்த அழகும் சிறிது குறைவாகவே காணலாம்.

இத்தன்மையாகவே பாட்டினின்றும் சொற்களைப் பிரித்து அழகு காணும் பெற்றி இருக்கின்றது. கவிகளின் அழகு ஆசிரியனது அமைப்பைப் பொறுத்தே இருக்கின்றது. அக்கவி கூறப்பட்ட சந்தர்ப்பத்தை முதலில் நோக்குதல் வேண்டும். அதன் பின்னர் அச்சந்தர்ப்பத்தை அக்கவி உணர்த்துகின்றதா என நோக்கல் வேண்டும். அதற்குப் பிறகு அச் சந்தர்ப்பத்தை உணர்த்துதற்குக் கவியில் எம்முறை கையாளப் பட்டுளது என நோக்குதல் வேண்டும். இவ்வாறு நோக்கும் பொழுதுதான் உண்மையான கவியழகு ஏற்படும். இவ்வாறு நோக்கினால் நாம ஒரு கவியோடு நமது ஆராய்ச்சியை நிறுத்திவிட முடியாது. நாம் குறித்த கவி எப்பகுதியில் அமைந்துள்ளதோ அப்பகுதி முழுமையும் நம்மால் படிக்கவேண்டி யிருக்கும். இத்தகைய ஆராய்ச்சியினாலே ஓர் கவியினது பெருமை வெளிப்பட இயலும்.

“ஆராய்ச்சிக்காரன் புலவன் விட்டதை நிறைக்கின்றான்” எனவோர் அறிஞர் உரைத்துள்ளார்; இதில் ஆராய்ச்சிக்காரனே நூலைப் பெருமைப்படுத்துகின்றான் என்பதொரு செய்தியும் தொனித்தல் காண்க.

ஆராய்ச்சி செய்வோரது மனோபாவத்திற்கு ஏற்ற பெற்றியாகவே ஆராய்ச்சி செய்யப்படும் நூலும் அமையும். ஒரு நூலினது அழகு எல்லோரது உள்ளத்திலும் ஒத்த தன்மைத்தாக அமைவதில்லை. ஆராய்ச்சி செய்வோரது—அழகை உணர்வோரது உள்ள நிலைக்கு ஏற்றவாறே அழகும் உணரப்படும். இவ்வகை ஆராய்ச்சியே அழகிதெனக் கருதப்படுதலோடு மக்கட்கு மிகுதியும் பயன் நல்குவதுமாகும்.

## சாத்தனாரின் பாவமைப்பு.

காவியத்தை ஆய்வான் புகுநர் முதற்கண் கவனிக்கற் பாலவாய செய்திகள் சிலவுள.

(1) காவியம் தோன்றிய காலம்.

(2) அக்காலத்து வழக்காறுகள்.

(3) முற்காப்பியங்கள், பிற்காப்பியங்கள் எவை என உணர்தல். (ஆயப்புகும் காப்பியத்திற்கு.)

(4) முற்காப்பியத்திற்கும் நம்மால் ஆயப்படுகின்ற காப்பியத்திற்கும் ஒற்றுமை—வேற்றுமைகள்.

(5) ஆயப்படும் காப்பிய ஆசிரியரின் நோக்கம்.

(6) அந் நோக்கத்தை வெளிப்படுத்தும் முறை

(7) இவ் வாசிரியர் காலக் காப்பிய முறைக்கும் ஆயப்புகும் காப்பியத்தின் ஆசிரியரது காப்பிய முறைக்கும், ஆயப்புகுவோர் காலக் காப்பிய முறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், இவைகளை நன்கறிந்து பின்னரே காவியம் ஆராயப்படுதல் வேண்டும். இம்முறைகள் யாதும் கொள்ளாது காப்பியம் ஆயப்படின் அதனால் அரும்பயன் அடைய வியலாது.

“இன் சொற்களுக்கு மதிப்பு அதிகம்; அவைகளும் எளிதில் கிடைக்கக்கூடியனவே”

# — மணம் புரிதல் —

(டர்பன். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை எழுதியது.)

பிறர் பிறரெல்லாம் பலவித நிலையில் நின்ற அந்தப் பண்டைக் காலத்தே, நாகரிகத்தில் கீர்த்திபெற்று விளங்கியவர் திராவிடரே. இவ் வுண்மையைப் பண்டைத் தமிழ் நூல்களில் பரக்கக்காணலாம். இம் மாட்சிமைப்பட்ட திராவிடர்களிடத்து இருந்த உயரிய பழக்க, வழக்க, வொழுக்க நிலைகள் நாளடைவில் முற்றிலும் மாறுபட்டு விட்டன.

தம் விழுமிய வொழுக்கங்களை யிழந்து, தாய் நாட்டிற் குடிபுக்க சிலர் சுய நயங் கருதிப் புனைந்திட்ட உரைகளை மெய்யெனக் கொண்டு அவரது ஒழுக்கங்களே தம் முடைய ஒழுக்கங்களெனக் கருதி மயங்கவும் நேர்ந்தன. மணம் தமிழ் நூல் வழக்கால் எவ்வாறு நிறுத்தப்படுகின்றதென்றால், களவு, கற்பு என்னும் இவ்விரண்டு வழிகளா லென்க. களவல்லது கற்பு நிகழாது; நிகழினும் அக் கற்பு நிலையுறுதல் அத்துணை இயலாதென்பது தேற்றம். களவென்ற சொற் கேட்ட வுடன் களவு தீதென்றல் தவறு. அது நல்லதாக மாறுதலும் உண்டு. தலைவனைநேடிய தலைவி, அவனை அறியாது தன்னை கொலை செய்வான்றுணிந்து, ஒரு கலத்தில் நஞ்சு பெய்து மறைவிற் சேமித்து வைத்தனள். அதனை யறிந்தான் ஒருவன் அவளை அறியாது அக் கலத்தினை எடுத்து நஞ்சினை உகுத்தனன் என்க. இது களவாமோ? மற்றும் சிறுமியரை ஈன்ற ஞான்றே இருமுது குரவர் இது பிறர் பொருள் என்று வரை செய்திட்டமையின், பிறர்க்குரிய அவரை வவ்வுதல் வழக்கேயா மன்றோ?

கொடுப்பாரு மடைப்பாரு மின்றி, ஒத்தகல்வியும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் ஒத்த வனப்புமுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்மிற்றாமே, எதிர்ப்பட்டபொழுது இருவருள்ளத்திலும் ஒருங்கே தோன்றிய உருவவன்பு விழி வழிப் பாய்ந்து இருவரையும் ஒன்று பிணிக்கக் கூடுவது களவாமென்க. அஃதன்றி, அன்பு எவ்வாறு நிகழும்: அன்பில்வழிக் கற்பு எவ்வாறு நிலையுறும்? பின்னர் யாவரு மறியச் சடங்குவழி மணத்தல் கற்பாம். இருமுது குரவர் கற்பித்த வழி இருவரும், மணமகன் கற்பித்த வழி மணமகளும் நிற்றலாற் கற்பு என்ற பெயர்த்தாயிற்று.

"ஒரு நண்பனுவது இல்லையானல் இந்த உலகம் மிருகத் தன்மை வாய்ந்ததாகவே இருக்கும்"



"கற் பெனப்படுவது சொற்றிறம் பாமை" என்னும் ஆப்த வாக்கும் இதனை வலியுறுத்தும். இவ்வித மணமே தமிழ் மக்கட்குப் பழமையும் உரிமையுமாம். இனி இவ்வழக்கு மறைந் தொழிந்ததைக் குறிப்பது ஈண்டு அத்துணை அவசியமில்லை. இப்பொழுது நடைபெறும் மணவினை மட்டும் அறிவுடையார் வெறுக்கத்தக்க நிலையினதாம். ஒத்த கல்வி, ஒத்த அறிவு, ஒத்த உடல்நிலை ஒத்த வனப்பு என்னு மிவற்றை ஒரு சிறிதும் கருதுவாரல்லர். மணமகன் எவ்வளவு இழிந்தவனேனும் வயதில் முதிர்ந்தோனேனும், நோய்க்கிருப்பிடமன்னோனேனும் பொருள் ஒன்று மட்டும் உடையவனாயின் அவனை விழுமிய மணமகளைக் கொள்வது மிக்க வழக்காயிற்று.

மணமகன் கல்வியறி வற்றவனேனும், அழகிற் குறைந்தவனேனும், எவ்வாறிருப்பினும் அம் மகட்கு எத்துணைப் பொருள் ஈவர் என்னுமிவற்றை யறிந்து இவ் வளவிலே பெரிதும் மகிழ்ந்து கொள்வாராகின்றனர். இம் மட்டோ! ஒன்று மறியா இளம் பருவத்தே மணச்சடங்கு நிகழ்த்துகின்றனர். சுருங்கச் சொல்லின் இப்பொழுது மணம் என்பது ஒரு வர்த்தகமாய் விட்டது.

இச் சந்தர்ப்பத்தில் பாலிய விவாகம் கூடாதென்று கூறும் சாரதாமசோதாவை நாமும் ஆதரிக்கின்றோம். தம் நாட்களெல்லாம் பாடுபட்டுப் பல தடங்கல்களிலிருந்தும் சற்றுந் தயங்காது இதைச் சட்டமாகச் செய்வதற்கு முதற் காரணமாயிருந்த ஹரிபிலாஸ் சாரதா நீடுழி வாழ்க. மற்றும் இம் மசோதாவை ஆமோதித்துச் சட்டமாகும்படி உதவிபுரிந்த 66-இந்திய சட்ட நிரூபண சபை யங்கத்தினர்களுக்கும் நம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

முன்னர் குறித்திட்ட இருவர் மனம் ஒப்பிய உண்மை அன்பே மணமகன் புனையும் மங்கல அணியாம். அவ் விருவரும் மலரும் மணமும், மணியும் ஒளியும், நகமும் சதையும் போல ஒன்றுபட்ட அன்பினராய் ஒருவர்க்கொருவர் துணைபுரிபவராய், உரிமையாளராய், கிழவன் கிழத்தியாய் வாழ்தற்குக் கடப்படுகின்றனர் என்பதை மணச் சடங்கிற் கூறப்படும் மறை மொழியாகிய மந்திரங்களும், கிரியா விதானங்களும் செவ்விதிற் கற்பிக்கின்றன.

இல்லறமாகிய சகடு, ஒத்த அறிவும், ஒத்த வன்மையுமுடைய இவ்விருவரா லிழுக்கப்பட்டாலன்றி ஓடாது. ஒருவர் சற்று வலிகுன்றியவராயின் அச் சகடம் எங்ஙனம் சரிவர ஓடும்? அவ்விருவர் தலையிலும் இவ்வறச்சுமை சமன் செய்து பங்கிடப்பட்ட தென்க. ஒரு கூறு மிக்கதும், ஒரு கூறு குறைந்ததுமில்லை. இவ்வாறாக, மணமகனுக்கு மணமக ளடிமையாதலும் மணமகளுக்கு மணமகன் அடிமையாதலும் இயலுமோ? இவ்வியன் முறை திருத்தம் பெற்றாலன்றி நம் சந்ததியார், நம் மூதாதையர் உயர் நிலையை எறிட்டுப் பாரார். இத்தகைய திருத்தத்திற்குப் பெண் பாலாரைக் கல்வியறிவிற் சிறந்தவராக்குதல் நமது முதற் கடமையாகும்.

ஒரு குழுவினர் திருத்தம் யாவும் அவரது பெண்பாலாரிடத்தில் அடங்கி நிற்கும். அவர் திருத்தம் பெறின் நாம் திருந்துவோ மென்பதிற் சிறிதும் ஐயமின்று. நாகரிகத்தில் நாம் மிக முன் வந்துள்ளோம் என்று கருதுகின்ற நம்மவர், இம் மணவினையியலை நன்காராயக் கடமைப்பட்டுள்

"தீய ஒழுக்கங்களிலிருந்து நல்ல சட்டங்கள் ஏற்படுகின்றன"

ளார். இனி, இச்சடங்கில் ஏராளமான பொருளை வறிதே செலவிட்டு இடர்ப்படுகின்றனர் என்பது வெள்ளிடை மலை. அப் பொருள் யாவும் ஆடம்பர நெறியிலேயே செல்லுகின்றன.

ஒரு கிரியையைச் செய்யத் தொடங்குபவன் அது யாரால் சொல்லப்பட்டது? எந்நூலிற் சொல்லப்பட்டது? அது எவ்வாறு செய்யப்படவேண்டும்? யாரால் செய்யப்படவேண்டும்? செய்தால் வரும் பயன் யாது? செய்யாமையால் வரும் இழுக்கென்னை? என்பனவற்றை அறிந்து அல்லது அறிந்தார்வாய்க் கேட்டன்றோ செய்தல் வேண்டும்? குருட்டு நம்பிக்கையே முதன்மையாய் விளங்குகிறது. தமிழ் மணமுறை பண்டைக் காலத்தில் மிக உயர்ந்து விளங்கிற்றென்பதும், இடையில் அவ்வழக்கு மாழ்கி அயல் வழக்கு விரவிற்றென்பதும், இனிப் பண்டை நிலைக்குக் கொணடுவருதற் கண் நாம் கல்வியறிவுடையராதல் வேண்டுமென்பதும், அதனுள்ளும் பெண்பாலாரை அவ்வழி உயர்த்துதல் இன்றியமையாக்கடப்பாடாகு மென்பதும், அக் கடமையை முற்றுவித்தாலன்றி நம் மூதாதையர் பெருமைக்கு நாம் தீங்கிழைத்தவராவோம் என்பதும் போதரும்.

## "ஆனந்தபோதினி" 80 பக்கங்கள்

:(o):

திருவருளின் பூரண கருணை கடாக்ஷத்தாலும், அன்பர்களின் பேராதரவினாலும் நமது "ஆனந்தபோதினி" மாதசஞ்சிகை தமிழ் நாட்டில் தனிப்பெரும் சிறப்போடு தலைமை ஸ்தானம் வகித்து வருகிறது. பல அன்பர்களின் வேண்டுகோட்கிணங்க 16-வது ஆண்டு ஆரம்பமுதல் 80-பக்கங்களோடு பற்பல சிறப்பியல்புகளுடன் "ஆனந்தபோதினி" வெளிவந்து அன்பர்களை மகிழ்விக்கும் என்ற நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்! இப்பொழுது இருந்துவரும் சந்தாதாரர்களின் தொகையோடு இன்னும் அதில் ஒரு பாதிப்பேர்களாவது அதிகப்படியான புதிய சந்தாதாரர்களாய்ச் சேர்ந்துவிட்டால் 96 பக்கங்களில் நமது சஞ்சிகையை வெளியிடலாம் என்றும் முடிவு செய்திருக்கிறோம். ஆதலால் நமது சந்தாநேயர் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்ப்பதில் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டால் இது எளிதில் முடிந்துவிடும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எமது ஆவலை அன்பர்கள் நிறைவேற்றுவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

ப-ர்.

"எளியாருக்குரிய ஐசுவரியம் பெருந்தகைமை"

## "பழையகுருடி கதவைத்திறடி"

(T. S. குழந்தைவேலன்.)

கவி மழை பொழியும் காளமேகப் புலவர், திருவானைக்கா அகிலாண்டேஸ்வரியின் திருவருணோக்கத்தினால் ஞானக்கண் பெற்றதும் தம் ஆசை நாயகியாம் மங்கை மோகனாங்கியை மறந்தவராய்ப் பற்பல விடங்களிலும் சென்று ஆங்காங்கு உள்ள அழகொழுகும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மனதார அநுபவிப்பதும், தானே சுரந்தெழும் இசையும் வசையுங் கூடிய பாடல்களைப் பாடிக் கொண்டும் வருவாராயினர். அப்பொழுது அவர் ஓரூரில் உள்ள ஒரு தாசி வீட்டுக்குச் சென்றார். அவள் பெயர் கூத்தாள் என்பது. பிறவிக்குருடி. அவள்தான் குருடியோவென்றால், அவள் தாய்-பாட்டியெல்லாம் குருடிகள்! இது மிக்க விநோதமான சங்கதி.

கூத்தாள் பார்த்தாள் கவியை. வந்திருக்கும் வரகவியோ மிக்க வரப்பிரசாதி யென்றும், அம்பாள் அருள் பெற்றவரென்றும் பிறராலறிந்திருந்தாளாகையால் மெதுவாக "சுவாமி! தாங்கள் அடியாள் வீட்டுக்கு வர யான் என்ன பேறு செய்தேனோ? தாங்கள் கிருபை கூர்ந்தால் தங்களைக் கண்டு தரிசிக்கும் பேறும் பெற்றுவிடுவேன்" என வினயமாக வேண்டினாள்.

"பெண்ணென்றால் பேயுமிரங்கு" மல்லவா? காளமேகம் மனமிரங்கி "கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள்" என்றார். உடனே கூத்தாளின் இரண்டு கண்களும் பட்டென்று திறந்துகொண்டன. அவளடைந்த ஆனந்தத்தை அவளைப்போன்று கண்ணிலாதிருந்து திறக்கப்பட்டவர்களே உள்ளபடி உரைக்க வேண்டும். அவள் அத்துடன் நின்றாளா? "சுவாமி! என் அக்காளுமல்லவோ" என்றாள். புலவரும் சரியென்று "கூத்தாடன்—மூத்தாள் முகத்தில் முழு நீலம்" என்றார். தாசி பின்னும் விட்டாளில்லை. "புலவர் பெருமானே! என் ஆத்தாளுக்கும்" என்றாள். காளமேகம் இதேதடா பெருத்த மோசமாயிருக்கிறதே யென்றெண்ணிக் கொண்டு இன்னும் பார்ப்போமென "மூத்தாடன்-ஆத்தாள் விழிகளரவிந்தம்" என்றார். இவளுக்கும் கண்கள் திறந்தன. இவள் தான் புலவரை விட்டாளா? இல்லை. "அடிகளே! என் ஆத்தாளுக்கும் அருள் செய்ய வேண்டும்" என்றாள். காளமேகப்புலவர் மிகவும் வியப்படைந்து இதென்ன ஒரு குடும்பம் முழுவதும் குருடாயிருக்கிற

"இன்பத்தின் முடிவு துன்பம்; துன்பத்தின் முடிவு இன்பம்"

தென நினைந்து "ஆத்தாடன்—ஆத்தான் விழிகளிரண்டம்பு" எனக்கூறி, "இன்னும் யாரேனுமுண்டோ?" என வினவினர். கண்பெற்ற குமரி, கிழவிக ளெல்லாம் கொண்டாடிக் கொண்டு "கண் கொடுத்த தெய்வமே! அவ்வளவு தான்" என்று அவரைப் போற்றிப் புகழவாரம்பித்தார்கள். புலவர் தாங் கூறி யவற்றையெல்லாஞ் சேர்த்து

> கூத்தான் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
> மூத்தான் விழிகள் முழு நீலம்—மூத்தாடன்
> ஆத்தான் விழிக ளாவிந்த மாத்தாடன்
> ஆத்தான் விழிகளிரண் டம்பு"

என வெண்பாவாக அமைத்துப் பாடிவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று விட்டார்.

சிலகாலஞ் சென்றபின் புலவர் பெருந்தகை திரும்பவும் அவ்வூருக்கே வர பழைய ஞாபகத்துடன் கூத்தான் வீட்டை நோக்கிச் செல்லலானார். புலவர் வாக்குப் பெற்ற கூத்தான் மிக்க செல்வஞ்சேர்ந்து மாடி வீடுகட்டிக்கொண்டு வாசஞ் செய்தமையின் அவன் வீடு தெரியாமல் குறிப்பாலுணர்ந்து அவ்வீட்டுக்குச் சென்று, வெளிக்கதவு தாழிடப் பட்டிருந்தமையின் பலமாகக் கதவைத் தட்டினார். புலவரென்பதை யுணர்ந்து கூத்தான் முதலியோர் செல்வச் செருக்கினாலோ, கதவைத்திறந்தால் அவருக்கேதேனும் காணிக்கையாகப் பொருள் கொடுக்க வேண்டுமென்னும் அற்ப குணத்தினாலோ கதவைத்திறக்காமல் பேசாதிருந்தனர்.

புலவர் சினமடைந்து "பழைய குருடிகாள் கதவைத்திறவுங்கள்" என்றழைக்க, உள்ளிருந்த அனைவரும் முன்போல குருடிகளாய்க் கதவைத்திறந்து கொண்டு வெளிவந்து மன்னிக்கும்படி வேண்டினார்கள். புலவர் உங்கள்கதி அவ்வளவு தான் என்று போய் விட்டார். அது முதலே "பழைய குருடி கதவைத் திற(வ)டி" என்னும் பழமொழி வழங்குவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

குறிப்பு:—"பழைய குருடி கதவைத் திறடி" என்று வழங்கப்பட்டு வரும் பழமொழிக்கு நண்பர் திரு. T. S. குழந்தைவேலன் அவர்கள் எடுத்துக்காட்டிய காளமேகப் புலவர் வரலாறேயன்றிப் பொய்யாமொழிப் புலவர் பேராலும் இத்தகைய வரலாறு ஒன்று கன்ன பரம்பரையாக வழங்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் இத்தகைய வரலாறுகள் எல்லாம் ஐடத்தால் அநாதரவு செய்யப்படுகின்றன. மேற்காட்டிய பழமொழிக்கு உதாரணமாகக் காளமேகப் புலவர் வரலாறு ஒன்று உண்டு என்பதை எல்லாரும் உணரும் பொருட்டே இக்கட்டுரையைப் பிரசுரித்தோம்.

ப. ர்.

"கற்றார் அனையர் கற்றாரைக் காமுறுவார்"




## கவியரசி சரோஜினி தேவி.

(ஸ்ரீமதி ரங்கநாயகி.)

உலகம் புகழும் இந்தியக் கவியரசி ஸ்ரீ சரோஜனி தேவியின் பேரை எல்லாரும் அறிந்திருப்பார்கள் என்றே நம்புகின்றேன். இந்த அம்மை இந்திய மாதர் சிரோன் மணி. தன்னலங்கருதாத் தனிப்பெருந் தலைவி. விடுதலைப் போர்புரி வீரப் பெண்மணி. காந்தியடிகளைப் போற்றும் கண்ணிய காந்தாமணி. வெளிநாட்டு இந்தியர் விரும்பும் கற்கண்டு. எண்டிசை பரவும் எழிற் கவி ரத்தினம். மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய அறப் போரில் தலைமை தாங்கிச் சென்று சத்தியாக்கிரகம் செய்தமைக்காக நமது பெண்கள் நாயகம் ஒன்பது மாதம் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார். இவருடைய வரலாற்றைச் சுருக்கமாகக் கீழே தருகின்றேன். வாசகர்கள் வாசித்துணர்ந்து அம்மையாரை ஆதர்சமாகக்கொண்டு வாழ்வை நடத்துவார்களாக.

ஸ்ரீமதி சரோஜனி தேவியார் வங்காள பிராமண வகுணத்தைச் சேர்ந்த அகோரநாத சட்டோபாத்தியாயரின் மூத்த புத்திரியாவர். வங்காளத்தில் கங்கைக் கரையிலுள்ள பைரம் என்னும் நகரமே அகோரநாதரின் பிறப்பிடமாகும். அகோரநாத சட்டோபாத்தியாயர் ஒரு பெரிய ஆசார சீர்திருத்தக்காரர். இவர் பழையதொரு பிராமண வமிசத்திற் பிறந்தும் முற்போக்குணர்ச்சியுள்ளவராகி நவீன ஆசாரங்களையே கடைப்பிடித்து வாழ்ந்து வந்தார். நமது தென்னிந்தியாவைப் போலவே வங்காளத்திலும் அக்காலத்தில் கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் செல்லல் ஆசார ஹீனம் என்ற அபிப்பிராயம் வேரூன்றியிருந்தது. ராஜாராம் மோஹனராய் முதலான மகான்கள் தோன்றி அவ்வழக்கத்தை உடைத்தெறியவே நூற்றுக்கணக்கான இளைஞர் ஆண்டுதோறும் மேனாட்டுக்குச் சென்று கல்வி பயின்று வந்தனர். அகோரநாதர் இங்கிலாந்துக்குச் சென்று கல்வி பயின்று 1877-ம் ஆண்டில் எடின்பர்க் சர்வகலாசாலையில் சாஸ்திரப் பட்டமும் பெற்றார். தமக்குச் சாஸ்திரிய ஞானமும் அநுபவமும் முதிர்ச்சி பெற பர்ளின் நகர சர்வ கலாசாலையிலும் சிறிது காலம் இருந்தார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியவுடன்

"வினைக் கேடாக அநுபவம் உண்டாம்."

அகோரநாதர் ஐதராபாத்தில் நைஜாம் காலேஜ் என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். இவர் கல்வி முன்னேற்றத்துக்காக மிகவும் உழைத்திருக்கிறார்.

## பிறப்பு—இளமை.

ஸ்ரீ சரோஜினி தேவியார் ஐதராபாத்தில் அகோரநாதருக்கு 1879-ம் ஆண்டு பிப்ரவரி மீ 13-ம் தேதியன்று பிறந்தார். குழந்தையைப் பெற்றோர் வெகு அருமையாக வளர்த்து வந்தனர். சிறுவயதிலிருந்தே கல்வி கற்பிக்கத் தொடங்கினர். அகோரநாதருக்கு சரோஜனி தேவியார் சாஸ்திர ஞானமும் கணித ஞானமும் பெற்றுச் சிறந்து விளங்கவேண்டும் என்று மிகுந்த அவா. ஆனால் கவிச்சுவையே சிறப்பாக நுகர்ந்தார். இந்த அம்மையார் கருவிலே திருவுடைய இயற்கைக் கவியரசி என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு. சரோஜனி தேவியாருக்குப் பதினோராம் ஆண்டு நடக்கும்போது ஒரு நாள் கணிதத்தில் கணக்கு ஒன்று சரியாகத் தெரியாமல் யோசனை செய்துகொண்டிருக்கையில் கவிகள் எழுந்தனவாம். இதைத் தேவியாரே பன்முறை கூறியிருக்கின்றனர். அந்நாள் முதலே அம்மையாரின் கவித்திறமை எங்கும் பரவத்தொடங்கிற்று. பதின்மூன்றாம் ஆண்டு நடக்கும்போது ஆயிரத்து முந்நூறு அடிகள் கொண்ட பாமாலை ஒன்று புனைந்தனராம். பின்னர் இரண்டாயிரம் சீர்கள் கொண்ட ஒரு நாடகத்தை ஆறு நாட்களில் எழுதி முடித்தனராம். இதனால் அம்மையார் கருவிலே திருவுடையார் என்பதில் ஐயமும் உண்டோ? 16-வயது நிரம்பு முன்னர் தேவியார் படித்து முடித்த நூல்கள் கணக்கில் அடங்காவாம். எப்பொழுதும் "புஸ்தகமே ஹஸ்த பூஷண"மாகக் கொண்டிருப்பாராம். சரோஜனி தேவியார் தமது பன்னிரண்டாம் பருவத்திலேயே சென்னை சர்வ கலாசாலைப் பிரவேச பரீக்ஷையில் தேர்ந்துவிட்டார். இச்செய்தி அக்காலத்தில் நாடெங்கும் ஒரு புதிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. பெண்களுக்குக் கல்வி வேண்டாம் என்றவர்களும் தங்கள் பெண்மக்களுக்கு உயர்தரக் கல்வி கொடுக்க ஊக்கங் கொண்டனர்.

## சீமைச் செலவு.

1895-ம் ஆண்டில் சரோஜனி தேவியார் இங்கிலாந்துக்குச் சென்று லண்டன் நகரில் உள்ள அரச கலாசாலையிலும், கர்டன் நகரிலுள்ள கலாசாலையிலும் மூன்று வருட காலம் கல்வி பயின்றார். சரோஜினியின் வருகை இங்கிலாந்திலுள்ள ஆடவர் மகளிர் மனங்களைக் கவர்ந்தது. இந்தியர்கள் நாகரிகமற்ற ஜாதியார் என்று எண்ணிக்கொண்டிருந்த ஆங்கிலேய ஆண் பெண்கள் எல்லாரும் சரோஜனியின் வருகையால் இந்தியர்களின் சரித்திரத்தையும் நிலைமையையும் அறிய அதிக ஊக்கம் செலுத்தினர். தேவியார் லண்டன்மா நகரிலுள்ள கலாசாலையில் கல்வி பயின்று வருங்கால் அவருடைய

" இல்லாதவன் வாய்ச்சொல் செல்லாது."



நுண்ணிய அறிவையும் கவித்திறமையையும் பாராட்டாதார் ஒருவரும் இல்லை. ஆங்கிலப் பெண்களை விட இந்தியப் பெண்கள் படிப்பில் சிரத்தையும் ஆசிரியரிடத்தில் பக்தியும் மிகுதியாகக் காட்டுகின்றனர் என்னும் அபிப்பிராயத்தை அக்கலாசாலை ஆசிரியர் மனங்களில் நன்கு பதியும்படி செய்தனர் நம் சரோஜினி தேவியார்.

## இத்தலி தேச வாசம்.

சதா சர்வ காலமும் புஸ்தகமும் கையுமாய்ப் பொழுது போக்கி வந்தமையால் சரோஜனி தேவியார் தேக வலிமை குன்றி நோய்கொண்டனர். பிணி நீங்கி உடல் நலம் பெறும் பொருட்டுத் தேவியார் இங்கிலாந்தை விட்டு இத்தலி நாட்டுக்குப் பிரயாணமானார். அந்நாடு இயற்கை வனப்பில் சிறந்தது. எப்பொழுதும் குளிர்பூங்காற்று வீசுதலால் வேனிற் பருவமும் தண்ணென்றிருக்கும். எங்கு நோக்கினும் கழனிகளும் பொழில்களும் பச்சென்று செழித்து விளங்கும். வர்ஜில், தாண்டி முதலிய பல கவி மணிகள் பிறந்து புகழ்வாய்ந்த இந்நாடு கவிவாணர்களுக்கு ஏற்ற இடமே. இதனால் நம் கவியரசியான சரோஜினி தேவியும் இந்நாட்டை அடைந்தார்.

## திருமணம்.

1898-ம் ஆண்டு செப்டெம்பர் மீ சரோஜனி தேவியார் ஐரோப்பாவிலிருந்து ஐதராபாத்திற்குத் திரும்பிவந்தார். வந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் உயர் குடும்பத்தினராகிய டாக்டர் நாயுடு என்பவரைக் கலியாணம் செய்து கொண்டார். பிராமண குலத்தில் தோன்றிய மாது ஒருத்தி வேறு குலத்தைச் சேர்ந்த ஒருவரை மணம் செய்து கொண்டாள் என்னும் செய்தியைக்கேட்ட எல்லாரும் வசை பேசத்தொடங்கினார்கள். இதையெல்லாம் தேவியார் லட்சியம் செய்யவில்லை. உண்மைக்காதல் ஏற்பட்ட விடத்தில் கடிமணம் புரிதல் நலம் என்ற தீர்மானத்தோடு டாக்டர் நாயுடுவைக் கணவராக வரித்துச் சந்தோஷமாகக் காலங் கழித்தார்.

## இறுதியுரை

சரோஜனி தேவியார் ஜயசூரிய, பத்மஜா, இரணதீர, லீலாமணி என்னும் பெயர்களையுடைய நான்கு குழந்தைகளைப் பெற்றார். தேவியார் தம் இளம் பிராயத்திலிருந்தே தேசாபிமான வாழ்க்கைக்குரிய உண்மை நிலைகளை அறிந்திருந்தார். தேசிய வாழ்க்கையில் மதுரகவிகள் பாடி மக்கட்கு உணர்ச்சியையும், ஊக்கத்தையும், களிப்பையும் ஊட்டி வருவதோடு தியாக புத்தியோடு மதிக்கத்தக்க தேசத்தொண்டும் ஆற்றி வருகிறார். உண்மைப் பாரதபுத்திரி ரத்தினமாகிய ஸ்ரீ. சரோஜினி தேவியாரின் சிறைத்தவம் நம்நாட்டு மக்கட்கு விரைவில் விடுதலையை உண்டாக்கும் என்று நம்புகின்றேன். தேவியாருக்குப் பல்லாண்டு கூறுவோம்.

சரோஜினி தேவிக்கு ஜே!

" இல்லானை இல்லாளும் வேண்டாள்."




(சிவானந்தசாகர யோகீஸ்வரர்)

## இல்லற வொழுக்கம்

இப்படி பதிபக்தி செய்வதனால் எல்லாத் தெய்வங்களும் அவன் ஏவல் வழி நிற்கும். பஞ்ச மஹா பூதங்களும் அவன் சொற்படி நடக்கும். அவளால் ஆகாத தொன்றில்லை. சந்திரமதி நெருப்பாறு கடந்ததும், தமயந்தி வேடனை யெரித்ததும், அநசூயை மும்மூர்த்திகளையும் புத்திரராகப் பெற்றதும், சூரியனுதியா திருக்கும்படி நளாயினி சபித்ததும், இறந்த கணவனைச் சாவித்திரி மீட்டுக்கொண்டுவந்ததும், சுகன்யை அசுவினி தேவர்களை ஜெயித்துத் தன் கணவனுக்கு மாருத இளமையைக் கொடுத்ததும், ஸீதையும் த்ரௌபதியும் தம் சத்துருக்களைச் சங்கரித்துக் கீர்த்தி பெற்றதும், உலகம் புகழவாழ்ந்ததும், அருந்ததி எல்லாராலும் கொண்டாடப்பட்டு நக்ஷத்திரமண்டலத்தில் இன்றும் வாழ்ந்துகொண் டிருப்பதும் இன்னும் பலவும் இந்தப் பதிவிரதத்தால் கிடைக்கப்பெற்ற பாக்கியமே யாம்.

ஆடவர்களுக்குத் தெய்வத் தியானத்துக்கு ஒருகால எல்லை யுண்டு. பெண்களுக்கோ அது இல்லை. ஜாக்ரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் பெண்கள் பதிபக்தி செய்யக் கூடும். நாயகனுடைய இனிய வசனங்களையும், அவனுடைய அழகிய சொரூபத்தையும், அவன் தன்னுடன் விளையாடும் செயல்களையும் சதா சிந்தித்துக்கொண்டிருப்பின் அது பதிபக்தியின்பாற் பட்டுச் சர்வ சித்திகளையும் எளிதில் தரும்.

இவ்வாறிருத்தலே பெண்களுக்குச் சதா நிஷ்டைகூடி யிருத்தலாம். இதனால் மனத்தில் கணவனுடைய சொரூபம் மறவாமல் நிலைபெறும். நிலை பெறவே வேறு புருஷர்களுக்கு அம்மனம் இடம் கொடாது. அதனால் மனம் ஒரு நிலைப்பட்டு யோகநிலையை அடையும். அதனால் தெய்வப் பிரத்யக்ஷமுண்டாகும். தெய்வப் பிரத்யக்ஷமுண்டாமாயின் எய்தப் பெருத தொன்றுமில்லை. அதுவே பெண்களுக்கு ஜீவன் முக்தி தசையாம்.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை"

என்று தேவர் கூறியதனால், மூன்று அவஸ்தைகளிலும் பதிவிரதை தன்

---

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்."



கணவனை மறவா ளென்பதும் அவளுக்குச் சகல பூதங்களும் ஏவல் செய்யும் என்பதும் பெறப்பட்டது காண்க.

சிலர் பெண்களை அடிமை யாக்கினர்கள் இந்துக்கள் என்பர். அவர்கள் வைதிகநெறி யறியாதவ ரென்க. சிற்றின்பத்தை அநுபவித்துக் கொண்டே பேரின்பத்தை யடையும் இந்நெறி இகழத்தக்க தல்லவென்று கொள்க.

இவ்வாறு கணவனிடம் கற்றுக்கொண்ட நெறியில் மனதை வழுவாமல் நிறுத்தலே நிறையெனப்படும். இந்த நிறைக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு காவலுண்டு. மனதை நிறையில் நிலைநிறுத்தி மேற்கண்ட நான்கு காவலாளிகளால் காவல் செய்து தன்னைத்தானே காத்துக்கொள்வதே பெண்களுக்குச் சிறந்த அழகாம்.

> "காவலுனே பாவையர்க் கழகு"

என்று அவ்வையார் கூறியதையும் கவனிக்க.

> "சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்,
> நிறைகாக்கும் காப்பே தலை"

என்றார் தேவர்.

தனக்குப் பிறகாவல் வேண்டாமல் தன்னைத் தானே காத்துக் கொள்பவளே பதிவிரதைகளில் சிறந்தவளாவாள். நளாயினி, தமயந்தி, சீதை, திரௌபதி இவர்களின் அரிய செயல்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வரத்தக்கன.

> "தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வேத வசனம் காண்க.

கற்பினால் தன்னைக் காத்துக்கொள்வது மன்றித் தன் கணவனையும் போஷித்துச் சிறந்த புகழையும் சம்பாதித்து, அந்நெறியில் மறதியில்லாம லிருக்க வேண்டும். தன்னைக் கணவன் காக்கும்படி நடப்பது குலப் பெண்களுக்கு மிகுதியு மிழிவு. தன்னைத்தானே காத்துக்கொண்டு கணவனையும் பாதுகாப்பதால் உலகத்தில் புகழ் பரவும். இழிவை யொழித்துப் புகழுண்டாகும்படி நடப்பவளே பதிவிரதை யாவாள்.

> "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழு முலகு"

என்றதனால் இவ்வாறு கணவனைத் தெய்வமாக வணங்கும் பெண்கள் தேவர்கள் தொழும்படி தேவலோகத்திற் சிறந்து வாழ்வார் என்று கூறினர் தேவர். அரியவை யெல்லாவற்றுள்ளும் அரியதும் பெரியவை எல்லாவற்றுள்ளும் பெரியதுமான இக்கற்புடைமையே பெண்களுக்குப் பெருஞ் செல்

---

"நல்லோர் கடுஞ் சொற்களுக்கு நல்வாவு கூறுக."

னம்; கிடைத்தற்கரிய ஆபரணம்; இகபர மிரண்டிலும் துணை; மோக்ஷ உலகத்தின் திறவுகோல்.

இதனை யுடையவள் தன் கணவன் மஹாபாவியானாலும் அவனையும் இழுத்துக்கொண்டு சொர்க்கம் செல்வள். இத்தகைய பெண்ணிருக்கும் வீட்டில் லட்சுமி, ஸரஸ்வதி, கற்புத் தெய்வமாகிய உமாதேவி இவர்கள் இடை விடாமல் வசிப்பார்கள். அஷ்டபாக்கியங்களும் தாமாகவே வந்தடையும்.

“ இல்லதென் இல்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை ”

என்று வேதங்கூறுவதால், கணவன் தன் மனைவிக்கு நயபயங்களால் இல்லறவொழுக்கத்தைப் போதித்தல் வேண்டும். இல்லறத்திற்கு முக்கியமானது விருந்தினரை உபசரித்தலாம்.

பெண்ணுக்குக் கணவனே குருவாயிருந்து, நன்னெறிகளை உபதேசிக்கவேண்டும். அவை தெய்வ உண்மை, தெய்வபக்தி, புண்ணிய பாவங்கள், அவற்றின் பயன், சொர்க்க நரகங்கள், அவற்றாலாகும் இன்ப துன்பங்கள், மோட்சம், மோட்சநெறி, ஜனனமரண துன்பங்கள், அவற்றை நீக்கிக் கொள்ளும் உபாயம், விருந்தை உபசரித்தல், பிரமசாரி, வானப்பிரஸ்தன், ஸந்யாஸி இவர்களுக்குப் பிச்சையிடுதல், கூன், குருடு, சப்பாணி வியாதியஸ்தர், அநாதைகள், பாலர், விருத்தர் இவர்களுக்கு உண்டி யுதவிக் காத்தல் “வைகறைத் துயிலெழு” என்றபடி அதிகாலையில் துயிலெழுதல், கணவனை வழிபடுதல், முதலியவற்றையெல்லாம் உபதேசித்தல் வேண்டும். இவற்றுக்குச் சாதனமான அன்புடைமை, பொறுமை, பொறாமை யின்மை, அயலகம் புகாமை—முதலியவைகளையும் போதிக்க வேண்டும். ஸத்தியந் தவறாதிருக்கவும் பொய் பேசாதிருக்கவும் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

இவைகளை யெல்லாம் கணவனிடத்திலே கற்றுக்கொண்டு அந்நெறியில் தவறாதிருப்பதே பெண்களுக் கழகு.

“ கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக ”

என்று வேதங் கூறுகிறபடியால், கற்றுக்கொண்டபடி அந்நிலையில் நிற்க வேண்டும். இதுவே பெண்களுக்குக் கல்வியாகிய கற்பு எனப்படும். இவைகளை வாயினாலேயே போதிப்பது மாத்திரம் போதாது தானும் நடந்து காட்ட வேண்டும். வழுக்கண்ட விடத்து நயபயங்களால் திருத்த வேண்டும். இவ்வாறின்றி அந்நிய வீட்டிலிருந்து தன் வீட்டிற்கு வந்த அநாதையான இளம் பெண்களை முறையில்லாமல் வாயில வந்தபடி வைவதும் முரட்டுத்தனமா யடிப்பதும் ஈனத்தனமாம். இப்படிச் செய்வதனால் அந்நடையே பெண்களுக்குப் பழகிவிடும். ஒரு சமயம் கணவனிடத்திலும் கூட அலட்சியம் தோன்றிவிடும். அப்படியாம்கால் இல்லறம் ஒரு போதும் ஒழுங்காய் நடைபெறாது. பழிபாவங்கள் ஏற்பட்டு இருவரும் நரகமடைய நேரும்.

---

“ மனம், வார்த்தை, கண்கள், செய்கை—இவைகளில் அன்பு ததும்ப வேண்டும்.”

# தேவதைகட்கு உயிர்ப்பலி கொடுத்தல்.

மனிதன் அஞ்ஞானத்தைப் போக்கிப் பரிபக்குவ மடைவதற்கு முக்கியமானவை அறிவும், அன்புமெனக் கூறலாம். அறிவை அனுபவத்தாலும், கலைஞானத்தாலும் பெருக்க வேண்டும். மனைவி மக்கள் முதலியவர்களை இயல்பாகவே நேசித்துவருவது போல் பிறவுயிர்களின் மேல் அருள் பிறத்தல் அன்பின் பயனென்னலாம். “அன்பில்லாத உடல் உயிரற்ற உடல்.” ஒருவன் ஜீவகாருணிய மில்லாமல் முத்தியடையலாமென்பது மணவாளனைக் கொன்று மைந்தன் வரங்கேட்பது போலாம். தேவதைகளுக்கென உயிர்ப்பலி கொடுத்து ஆராதிக்கும் மூடப்பழக்க வழக்கங்கள் பலவிடங்களில் நடந்து வருகின்றன.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மண்டைக்காடென்னூர் தலத்தில் மண்டைக்காட்டம்மன் பேரால் வருட மொருமுறை நடத்தும் கொடையடியினத்தன்று அளவின்றி அறுக்கப்படும் ஆடு கோழிகளின் இறப்பையும், துண்டிக்கப்பட்ட முண்டங்கள் துள்ளிக் குதிப்பதையும், கோரமான உருவம் தரித்து வெளிக்கொண்டு முழங்கி யாடுபவர்களின் காட்சியையும் பார்க்க லக்ஷக்கணக்கான ஜனங்கள் செல்வதுண்டு. மிகுந்த காணிக்கைப் பணமும் வசூலாகும். 1103-ஆண்டு மாசி மாதம் முதல் மண்டைக்காட்டம்மனுக்கு பலியிடலாகாதென்று காருண்ய திருவிதாங்கூர் கவர்ன்மெண்டாரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதுபோலவே சமஸ்தானத்தில் பல இடங்களில் நடந்துவரும் பலியிடுதலென்ற கொலைபாதகச் செயலை மாற்றும்படி உத்தரவு பிறப்பித்தால் மிக நலமாயிருக்குமென்று கருதுகிறேன்.

நாளிது ஆண்டு மாசி மாசம் கடைசியில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் செண்பகராமன்புதூருக்கு அடுத்த கண்ணன்புதூர் என்ற ஸ்தலத்தில் வருடந்தோறும் மாசி பங்குனி மாதங்களில் ஒரு தேதியைக் குறிப்பிட்டு ஊரில் வரி வசூலித்து அவ்வூர் சுடலைமாடன் கோவிலில் கொடை கழிப்பது வழக்கம். அதுபோலவே இந்த வருடத்தில் மாசி மாதம் கடைசியில் அக் கோயிலில் கொடையடி விழா நடந்தது. அக் கொடையில் பல ஜனங்கள் கூடியிருந்

---

“ பிறருடைய செல்வம், அழகு, வல்லமை, அதிர்ஷ்டம், பெருமை—இவைகளைக் கண்டு பொறாமை அடைகிறவன் ஒரு நோயாளி.”

தார்கள். விற்பாட்டு, கணியான் பாட்டு, முரசறைதல் முதலானவைகள் ஒன்றன்பின் ஒன்றாக முழங்கின. பேயாடிகள் பலர் சல்லடங் கச்சை முதலியவைகள் கட்டிக்கொண்டும், முகத்தில் மஞ்சள் முதலியவைகளைத் தேய்த்து விரூபமாகியும், லாகிரி பதார்த்தங்கள் உபயோகித்தும் ஆடுவது பிசாசுகளே பிரசன்னமாகிவிட்டதாகத் தோன்றும்.

அத் துர்தேவதைகளுக் கெல்லாம் பிரீதியுண்டுபண்ண ஆடு கோழிகளை வெட்டுவது வழக்கமானதால், பலியிடவேண்டிய சமயம் வந்ததும் பல ஆடுகளும் கோழிகளும் தயாரிக்கப்பட்டன. முதலில் நிரம்பவுங் கொழுத்து நிமிர்ந்த வெள்ளாட்டுக்கடா ஒன்றைப் பலியிடுவதற்காக அது அத்தேவதை சந்நிதிக்கு நேரே கொண்டுவிடப்பட்டது. அப்பொழுது பகல் 12 மணியிருக்கலாம். அக்கோவில் பூசாரி கொண்டியில் தண்ணீரும் புஷ்பமாலையுங் கொண்டுவந்து அக்கடாவின் தலையில் தண்ணீரை புரோக்ஷித்து மாலையை அதன் தலையில் சுற்றிச் சென்றார். பலி செய்வதற்குத் தயாராய் நின்றிருந்த கொலையாளி ஒருவன் இரக்கம், மானம், வெட்கம், நாகரிகமின்றிப் பலிசெய்வதற் கெனவே தயாரிக்கப்பட்ட ஓர் வெட்டரிவாளொன்றைக் கையிற் பிடித்து ஆயங்கட்டி ஓங்கிய வண்ணமாக நின்று கொண்டிருந்தான். கடாவின் தலை வெட்டுவதற் கேற்ற விதத்தில் வருவதற்காக தழை யொன்றை ஒருவன் நீட்டிக்கொண் டிருந்தான். கொலையாளி ஆயம்பிடித்து கடாவை வெட்டின சமயம் கையினின்றும் அவ்வரிவாள் தவறிச் சென்று பக்கத்தில் கூர்மையாகச் சந்தோஷத்துடன் பார்த்துக்கொண்டிருந்த உத்தேசம் 30-வயதுள்ள வாலிபனொருவன் மூக்கிற் சென்றுவிழ மூக்கறுபட்டதுந் தவிர கன்னப்பக்கத்தில் ஒரு பகுதியையும் சீவிக்கொண்டு போய்விட்டது. உடனே அவன் வைத்தியசாலைக் கெடுத்துக்கொண்டு போகப்பட்டான். பிழைப்பானென்று நிச்சயிக்க முடியவில்லை. பலி செய்த கொலையாளியை எலும் பொடிய நொறுக்கிவிட்டார்கள்.

படிப்பும் விசாரணையுமொழிந்த பாமர ஜனங்கள் தேவதைகட்கெனக் கொடுக்கும் பலி, மாடு மக்களுக்குப் பிணி அணுகாமலிருக்கும் பொருட்டும், (அம்மை, கொள்ளை, நோய்கள் இவற்றை தேவதைகளெனக் கற்பனை செய்துகொண்டு) சிலர் அவ்வாபத்துக்களினின்று தப்பும் பொருட்டும் வணங்குவதுண்டு. இது விஷயமாக பாழாக்கப்படும் பணத்தி லொருபகுதியேனும் பொது மக்களின் கல்வியிற் செலவழிக்கப்பட்டால் மனித வாழ்வு எவ்வளவோ கௌரவ தசையை யடையலா மென்பது யாவராலும் மறுக்க முடியாததோருண்மையாகும்.

---

“படிக்கும்போது உன் மனது அதில் பற்றியிருக்கிறதா என்று கவனிக்க.”



நாம் எந்தத் தேவாலயங்களிலும் பிரவேசிக்கும்போது முதலில் பலிபீடமொன்று அமைத்திருப்பதைக் காணலாம். நம் மனத்திற் குடிகொண்டுள்ள காமக்குரோதாதி துஷ்ட குணங்களையும் அகங்கார மமகாராதி சகல துஷ்ட மிருகங்களையும்

“துன்னுமறியாமனது பலிகொடுத்தேன்
கன்மதுவிட்ட தேவதைகளில்லை”

என்பதற்கிணங்க அந்த பலிபீடத்தினிடம் பலிகொடுத்துப் பரிசுத்த மனதுடன் சன்னிதானத்துட் புகுந்து மூலஸ்தானத்திலுள்ள கடவுளைத் தரிசனஞ் செய்யவேண்டு மென்ப தான்றோர் கருத்து. சமஸ்தமான ஜீவகோடிகளிடத்திலும் சமமாய் நிறைந்துள்ள ஆத்ம சொரூபத்தைத் தனது ஆத்ம சொரூபமாக அறிந்தவனெவனோ அவன் எந்த ஜீவனையும் இம்சிக்கமாட்டான். செடிகளிலும் பரமாத்ம சொரூப மிருக்கிறதென்று முடிவுசெய்து அச் செடிகளிலுள்ள இலைகளைப் பறித்தால் பாவமுண்டென்று பெரியோர்கள் நினைத்து அதைப் பறித்துச் சாப்பிடாமல் தானாய்ப் பழுத்துதிர்ந்த தழைகளைக் சாப்பிடுகிறார்கள். அவ்வித மிருக்க, தனக்கோ அல்லது தனது குடும்பத்தினர்க்கோ ஏதேனும் வியாதியோ கவலையோ வந்துவிட்டால் அதை நிவாரணஞ் செய்து கொள்வதற்கு வாயில்லா ஜீவன்களாகிய ஆடு கோழிகளைக் கொண்டு துஷ்ட தேவதைகளுக்குப் பலிகொடுத்து அதன் மாமிசத்தைத் தின்று தன் தேகத்தை வளர்ப்பவன் எவ்வகையால் கடவுளுடைய கிருபையை யுடையவனாவான்.

“உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள,
எங்கள் மக்களும் நாங்களு மென்செய்தோம்
பொங்கலிட்டுப் பலியும் கொடுக்கிறீர்
எங்கள் முறையினை யீசனார் கேளாரோ.”

“அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானுட ரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்
அம்மா வெனும்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவருக் கென்னாமோ.”

“கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்புசித்தோன் போய்நர கடைவனன்றே.”

---

“ஒருவனுடைய குணத்தை அவனுடைய நண்பர்கள் யார் என்பதைக் கொண்டு ஊகிக்கலாம்.”

# மாதர் உலகம்



## பெண் தருமம்

**(வி. ரா.)**

1. உனக்கு வேலை இல்லாதபோது பிறருடைய குற்றங்களை எடுத்துத் தூற்ற முற்படாதே—நற்குணங்களை மாத்திரம் கூறுக. நற்குண நங்கையரின் புண்ணிய சரிதங்களைப் படித்துக் கொண்டிருப்பாயாக.

2. நீ தையல் வேலையைக் கற்றுக் கொள்ளல்வேண்டும். அயல் வீடுகளுக்கு அடிக்கடி போகாதே. அயல் வீட்டாருக்குச் சமயம் இல்லாதபோது உன் மீது சீற்றம் உண்டாகிவிடும்.

3. உன் பக்கத்து வீட்டார் செல்வப் பெருக்குடன் வாழ்ந்தால் நீ பொறாமைகொள்ளற்க—மகிழ்ச்சியேகொள்க. அதிகாலையில் படுக்கையை விட்டு எழுக. தந்த சுத்தி முதலிய காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கடவுளைத் தொழுக. உனக்குப் பிறர் செய்யுந் தீமைகளை மறந்துவிடுக. முழுமனதுடன் குடும்ப காரியங்களைக் கவனிக்க. மற்றவர்களோடு வார்த்தையாடும்போது அசந்தர்ப்பமாய்ப் பேசாமல் அளவாகவும் உண்மையாகவும் பேசுக. வார்த்தைகளாலேயே நன்மை தீமைகள் உண்டாகும்.

4. கணவன் இல்லாப் பெண்ணுக்குச் சௌக்கியம் எங்கிருந்துவரும்? அதனால் பிறந்த வீட்டார் எவ்வளவு செல்வம் படைத்தவர்களானாலும் அடிக்கடி அங்கே ஓடாதே.

5. உனது நற்குணமே உன்னுடைய கணவனுக்கு இன்பத்தைக் கொடுக்கும். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களில் மோகம் கொள்ளாமல் மானமே முதன்மையான பூஷணமாக எண்ணுக.

6. உன்னுடைய தாய் தந்தையர்கள் உனக்குக் கலியாணம் செய்யத் தீர்மானிக்கும்போது, அந்த வரன்மீது உனக்கு விருப்பம் இல்லையேல், வெட்கத்தால் மனதுக்குள் வைத்துப் புழுங்காமல், தாயாரிடம் தைரியமாகக் கூறி

"பிறர் குற்றங் கண்டு உன்னைச் சீர்திருத்திக் கொள்ளல் அறிவுடைமை."



விடவேண்டும். சொல்லாவிட்டால் காலம் முழுவதும் நீதானே கஷ்டப் படவேண்டும்— பரிதபிக்கவேண்டும்.

7. நீ ஒரு நற்காரியத்தைச் செய்யத்துணியும்போது மூடப்பெண்கள் என்ன நிந்தனை செய்தாலும் அதைவிடாமல் செய்வாயாக. அதிக ஜனங்கள் மெச்சவேண்டும் என்ற ஆசையை விட்டொழிக்க.

8. ஒவ்வொரு வார்த்தைக்கும் சிரிக்காதே. சிறியவர்களாயிருந்தாலும் நல்லொழுக்கமுள்ள பெண்களுக்கு மரியாதை செய்வாயாக. பேசும்போது உரத்த குரலில் பேசற்க.

9. உனக்குத் துக்கம் வந்தபோது சப்தமாகவேனும், ஒப்பாரி வைத்தேனும் அழாதே. ஒரு நிமிஷத்துக்கு மேல் விசனப்படாதே.

10. ஒவ்வொரு நியாயத்தையும் நீதியையும் உன்னுடைய ஸ்நேகிதைகட்கும் மற்றவர்கட்கும் எடுத்து உபதேசித்து, அவர்களை நல்லொழுக்கமுடையவர்களாக்கப் பாடுபடுவாயாக. இடையறாப் பேரின்பப் பேற்றுக்காகக் கடவுளை எப்பொழுதும் தொழுதுகொண்டிருப்பாயாக.

—கிருஷ்ண லக்ஷ்மீ

### மனைவியரைப் பார்க்கத் தகாத சமயம்.

தங்களுடைய மனைவியர் உணவு உண்ணல், தும்மல், கொட்டாவி விடுதல், தம் இஷ்டப்படி உட்கார்ந்திருத்தல், கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளல், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தல், வஸ்திர ஹீனமாயிருத்தல் ஆகிய சமயங்களில் புருஷர்கள் அவர்களைப் பார்ப்பது கூடாது. புருஷர் தம்முடைய மனைவியரோடு கூடவிருந்து உணவு கொள்ளுதல் கூடாது. இவ்விதிகளைக் கடந்து நடக்கின்றவர்களுக்குக் காலக் கிரமத்தில் அவர்கள்மீது வெறுப்புண்டாகிவிடும். வீட்டுக்கு விலக்காயிருக்கும்போது பார்க்கவும் கூடாது.

"தற்பெருமையானது பிறர் உன்னை ஏளனம்செய்யத் தூண்டுகிறது."

# மனோ சக்தி.

(ஜகதீச குமார சர்மா.)

(695-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனிதனே! ஒரு பணம் நிறைந்த பிரபு புகழின்றி உண்டு வாழ்கிறான். ஒரு ஏழை—சோம்பேறி பிச்சையெடுத்தோ எப்படியோ தன் காலத்தைக் கழிக்கிறான். இவ்விருவரும் எப்படியோ பட்டினியில்லாமல் நாளைக் கடத்தி விடுகிறார்கள். பணக்காரப் பிரபு பத்துவகையோடு சாப்பிட்டால், ஏழை ஒரு வகை பழையது ஊறுகாயுடன் உண்டு பசியாறித் திருப்தியடைகிறான். இரண்டு பேரும் உட்கொண்ட ஆகார வகைகள் எவ்வித வித்தியாசமுமில்லாத ஒரு இரத்தமாகத்தான் மாறுகின்றன. இருவரும் என்றோ ஒரு நாள் இறக்கிறார்கள். ஏழையின் பிணம் எக்கதியடைகிறதோ, அதையே பணக்காரப் பிணமும் பதமாய்ப் பெறுகின்றது. இவ்விருவரும் இகலோகத்தில் வாழ்ந்து கண்ட பயன் யாது? ஏழைக்கில்லை யென்றால் பணக்காரனுக்கேனு முண்டோ? இல்லை. இவர்கள் பரலோகத்தில்தான் பயனைப் பார்த்தார்களோ? பிறந்து நின்றழிந்த பிணங்கள்தானே இவர்கள்! இந்நிலையில் ஏழைக்கும் புகழுடையாச் செல்வனுக்கும் தாரதம்மியம் ஏதேனுமுண்டா? இதற்குத் தான் மனிதன் பிறந்தானா? மண்ணுக்கிரையாகும் உடலால் உழைத்து நற்புகழ் பெறுவோனே உயர் செல்வன். அவனே இம்மண்ணுலகிலுதிக்க யோக்கியதை யுள்ளவன். ஆதலால் புகழை விரும்பு. அதுவே மனித லக்ஷியம்.

பேராசையின் பயனை நாம் எம்மட்டும் புகழ்ந்தாலும் அதன் சிறப்புக்களை விளக்க முடியாது. அது மிகவும் சிறந்த ஒரு குணமாகும். நாம் ஒவ்வொருவரும் நம்முள் க்ஷீணித்துக் கிடக்கும் பேராசையைத் தட்டி எழுப்ப வேண்டும். அதுவே மனித வாழ்வின் ஜீவ சக்தியாய் இருக்கின்றது. ஒரே தன்மையான கல்வியும் மூளையும், அயல் சார்புகளும் மன இயல்புகளும் உடையவர்களுள், பேராசை உடைய ஒருவனும், ஒருத்தியும், மற்றவர் அபஜயமடைந்து தவித்து நிற்கத், தாம் மட்டும் வெற்றி பெற்று மகிழ்வர். இதனைப் படிக்கின்ற நண்பரே! நீர் பேராசை உடையவரன்றோ? பேராசை என்ற சொல்லைக் கேட்டு வெட்கமடையாதீர். நீர் வெட்கமடைந்தால், உம்மைப் போன்ற கோழை வேறெவருமில்லை. ஆதலால், நீர் வெகு தைரியமாக உமக்கும் பேராசை உண்டு என்று சொல்லும். ஆனால், நீர், கழுத்தில் முரசு கட்டிக்கொண்டு அதை உலகோருக்கு அறையவேண்டாம். நீர் அதை உமது உள்ளத்தில் உணர்ந்து கொண்டாற் போதுமானது. மற்றெல்லா மனிதர்களின் மத்தியில், ஒரு தனிமனிதனாய்த் தலையெடுத்து நிற்பதை நீர் விரும்பவில்லையா? மனிதர்களது கூட்டத்தின் நடுவில் யாவரும் வாய் திறந்து வியந்து நோக்கும் மாட்சிமை உடையவராய் யாவரும் விரும்பத் தகுந்தவராய், நாடத்தகுந்தவராய் இருக்க விரும்பவில்லையா? நண்பரே! உமது பேராசையாகிய குதிரையின் கடிஞாணைத் தளர்த்தி அதனைச் சிவிட்டாக் கொடுத்துத் தட்டி எழுப்பி வான மண்டலமெங்கும் திரிந்து வர விடுவீர். ஆனால் உமது பாதம் பூமியில் நிலைத்து நிற்கட்டும். உமது நோக்கம் எத்தனை மாட்சியாய் இருக்கின்றதோ அத்தனைச் சிறப்பை நீரடைவீர்.



உமது உள்ளத்தில் பேராசையாகிய அனல் கொழுந்துவிட் டெரியட்டும். எதற்கும் அஞ்சாமல் பரிபூரண நம்பிக்கையோடும் ஜீவிய மகிழ்ச்சியோடும் உமது எல்லையை நோக்கிச் செல்லும், வெற்றி உமக்கே உரியது.

## சங்கற்பம்.

மனத் தத்துவங்களைப் பயின்று அவற்றைப் பழக்கத்திற் கொண்டுவர விரும்பும் ஒருவன் முதன் முதலில், சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். வேதியர்கள் ஏதேனுமொரு கருமத்தைச் செய்யப் புகுங்கால் முதலில் சங்கற்பம் செய்துகொள்வர். சங்கற்பமென்றால் தீர்மானம் எனலாம். இந் நாட்களில் அந்தணர்கள் கூறுகின்ற சங்கற்பம் கிளிமொழியாக இருக்கின்றதேயன்றி மனத்தின் தீர்மானத்தோடு சம்பந்தப்பட்டதன்று. மனத் தத்துவங்களை ஆராயப்புகும் மாணவருக்கு இன்றியமையாத சங்கற்பம், "மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார்," என்னும் தொடக்கத்துச் செய்யுளின் பொருளேயாம். அச்செய்யுளில் கூறியவாறு சங்கற்பம் செய்து கொள்ளுதல், மனத்தை உரம் செய்து கொள்ளுதலேயாம். மனத் தத்துவங்களைச் சுய அநுபவத்தில் கொண்டு வருகையில் பற்பல இடையூறுகளும் கஷ்டங்களும் நேரிடலாம். ஆனால் அதன் பொருட்டு மனச்சோர்வடைதல், மனத்தத்துவங்களைப் பயிலும் மாணவர்க்கழகன்று. நீங்கள் ஒரு முறை வசீகரதன்மையை அடைந்து பிறரை உங்களுடைய சித்தத்திற்கு இணங்கச் செய்யும் சக்தியை அடையத் தொடங்கும் பொழுது, முதன் முதலில் ஏற்படும் இடையூறுகளும் கஷ்டங்களும் தாமாகவே நீங்கிவிடும். நீங்கள் படிப்படியாக வெகு இலேசாய்ப் பல தத்துவங்களைச் சுய அநுபவத்தில் கொண்டுவந்த முடிவில், தாயுமானவர் கூறியவாறு, கந்துக மதக்கரியை வசமாய் நடத்தவும், கரடி வெம்புலி வாயைக் கட்டவும், சிங்க முதுகின்மேலேறவும், பாம்பாதி விஷப் பிராணிகளைப் பிடித்தாட்டவும், கனன்மேவிருக்கவும், ஜலமேல் நடக்கவும், வேறொருவர் காணாமல் உலகத்தில் உலாவவும், விண்ணவரை ஏவல் கொள்ளவும் திறனுடையவர்களாகி யாவருக்கும் நலம் புரியும் திறன் பெறுவீர்கள்.

## விசுவாசம்

மனித சமூகத்தை நிலை நாட்டுவதும் மனிதரை நட்பில் நிலைத்திருக்கச் செய்வதும், ஆத்துமாக்களைச் சமீபத்தில் கொண்டுவந்து ஒன்றோடொன்றை ஒட்டிச் சேர்ப்பதும் விசுவாசமேயாம். நமது தினசரி ஜீவியத்தினின்று விசுவாசத்தை நீக்கிவிடுவீர்களாயின் நமக்கு மிகுந்திருப்பது யாது? ஒரு சிறு குழந்தை தன் தாயையும் தன் தந்தையையும் விசுவாசிக்கின்றது. அக் குழந்தைக்குத் தன் பெற்றோரிடத்திலுள்ள விசுவாசம் அழிந்துவிட்டால் அக் குழந்தையின் வாழ்க்கை யாதாம்? கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் விசுவாசிக்கின்றனர். அந்த விசுவாசம் அற்றுப் போய்விட்டால், அவர் தம் ஜீவியம் எவ்வாறு முடியும்? நாம் ஒவ்வொருவரும் நம்மைச் சூழவுள்ள பிறரை அதிகமாகவோ குறைவாகவோ விசுவசிக்கிறோம். அந்த விசுவாசம் அற்றுப்போய்விட்டால் ஜன சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுடைய ஜீவியமும் யாதாம்? பகையும், இரத்தப் பெருக்கு எடுக்க நிசமும் போராட்டமுமே மிஞ்சும்.

ஒரு கலாசாலையில் பிரதம அத்தியக்ஷர் ஒருவர் இருந்தார். அவர் பற்பல விதமான அலுவல்களை உடையவர். ஆதலால், அவர் கல்லூரியின் அத்

தியக்ஷர்களின் வேலைகளைக் கவனிக்கவாவது, கல்லூரி வேலையில் பெருக்க மெடுத்துக் கொள்ளவாவது போதிய காலமின்றித் தவித்தார். அவர் சிறந்த கல்வி யறிவும் வேலையில் ஊக்கமும் உடையவராயிருந்தும் தம் ஊழியர்க ளிடத்தில் விசுவாச மட்டுமில்லாதிருந்தார். நான்தோறும் திடீர் திடீர் என்று வகுப்புகள் தோறும் சென்று உபாத்தியாயர்கள் சரியாகக் கற்றுக்கொடுக் கின்றனரா என்று சோதிக்கலாயினர். உபாத்தியாயர்கள், வெகு விரைவில் பிரதம அத்தியக்ஷருக்குத் தங்களிடத்தில் விசுவாசமில்லை எனக் கண்டு கொண்டு, அவரை, ''பிடாலம்'' என்றும், ''மார்ஜாலம்'' என்றும், ''பூனை'' என்றும் அழைக்க வாரம்பித்ததோடு தாம் அதுகாறும் மனச் சாட்சியோடு செய்துவந்த வேலையை அவருக்கென்று மனக் கசப்போடு செய்துவரலாயி னர். பள்ளிக்கூட வேலை மிகவும் கீழ் நிலையுற்றது. உபாத்தியாயர்கள் அவர் வருகிறபொழுது மிகவும் உற்சாகமாய் இருந்து, அவர் சென்ற பிறகு சோம்பி யிருக்க வாரம்பித்தனர். எவனுக்காவது நம்மிடத்தில் விசுவாசம் இல்லை யென்றறிந்தால் நாம் அவனை அன்போடு அணுகி அவனுக் குதவிபுரிய முயலு வோமா? இதே உதாரணத்தைத் திருப்பி அமைத்துக்கொண்டு பாருங்கள். உபாத்தியாயர்களுக்குப் பிரதம அத்தியக்ஷரிடம் விசுவாசம் இல்லை யெனில் உபாத்தியாயர்கள் பிரதம அத்தியக்ஷரோடு ஒத்துழைக்க விரும்புவார்களா?

மனித ஜீவியத்தில் மாட்சிமையும் பெருந்தன்மையுமான காரியங்களும் சிந்தனைகளும் ஆகிய யாவும் விசுவாசத்தினாலே தான் நிலைத்திருக்கின்றன. விசுவாசமென்னும் அச்சுத்தண்டிலேதான் உலகமாகிய சக்கரம் ஓயாமல் சுழன்றுகொண்டிருக்கின்றது. ஆதலால் நீங்கள் மனத்தத்துவ சாஸ்திரத் தை விசுவசிக்கவேண்டும். நீங்கள் மனத்தத்துவ சாஸ்திரம் கூறும் உண் மைகளை விசுவசித்தால் வெற்றி பெறுவீர்கள் என்பது திண்ணம்.

விசுவாசமே நோயாளரைக் குணப்படுத்தும் அற்புத சக்தியாம். பல வீனர்கள் விசுவாசத்தினால் மகா பலசாலிகளாகிறார்கள். அவர்களுக்குத் தங்களைக் குணப்படுத்தவும் பலப்படுத்தவும் வந்தவர்களிடத்தில் விசுவாச மில்லாதிருந்தால் அவர்கள் குணமும் பலமும் அடைந்திருப்பார்களா? விசு வாசம் உடையவராயிருத்தல் என்றால் தைரியசாலிகளாய் இருத்தலுமாம். தைரியசாலிகளாயிருத்தல் என்றால், வருங்காலத்தில் வெற்றியை அச்ச மின்றியும் மனப் பூர்வமான நம்பிக்கையோடும் எதிர்பார்த்தலேயாம். நியாயமான எதையும் அடையும் வல்லமையும் திடசித்தமும் எனக் குண்டு என்று ஒவ்வொரு நிமிஷமும் உணரவேண்டும். விசுவாசம் உங்களு டைய பேராசையை மூட்டி எரியச் செய்யும். விசுவாசம் வாழ்க்கை இன் பங்களை நவமாக்கி மகா அற்புதமாக விளங்கச் செய்கின்றது. துயரங்களை ஆண்மையோடு தாங்கவும் கஷ்டங்களையும் அல்லல்களையும் மனவமைதி யோடு சகிக்கவும் வல்லமை யளிக்கின்றது; அபாயத்தைத் தைரியமாய் எதிர் நோக்கும் திறனளிக்கின்றது. இவ்வுலகில் தோன்றியுள்ள சகல மதங்களின் சாராம்சமும் விசுவாசமேயாம்.

ஆதலால், இனிக் கூறப் போகின்ற தத்துவங்களை விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் பழக்கத்திற் கொண்டு வருவீர்களாயின் அதியாச்சரிய மான மனோசக்தியைப் பெற்று வாழ்க்கையில் ஜயமடைவீர்கள்.

(தொடரும்)

# வஞ்சித்து வாழ்வோர்.

(பசுவந்தனை. திரு. சு. சாமிநாத பட்டர்.)

அலைகடல் சூழ்ந்த இம்மேதினியின்கண் மனிதராய்ப் பிறந்த ஒவ் வொருவரும் தத்தமக்குரிய பற்பல தொழில் செய்து வாழ் கின்றனர். விவசாயம் செய்து வாழ்வோர் பலர்; கைத்தொழில்செய்து ஜீவிப் போர் அநேகர்; வியாபாரம் நடாத்தி நிதி சேர்ப்போர் ஓர் சாரார்; கூலி வேலைசெய்து நாட்கழிப்போர் வேறு பலர். இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்தே தான் வாழ்கின்றனர். இன்னோர் வாழ்வதற்கும் தாழ்வதற்கும் அவரவர்கள் அறிவும் அதிர்ஷ்டமுமே ஆதாரமாகும். இவர்கள் செயல் பரோபகாரமாகுமே அன்றி யாருக்கும் கேடு சூழ்வதாகாது. இத்தகை யார் வாழ்க்கை எவ்வகையாலும் சாலச் சிறந்ததே. பிறர்க்குக் கேடின்றித் தம் ஜீவியத்தை நடத்துமிவர்கள் கருணாநிதியாம் கடவுளின் கிருபைக்குப் பாத்திரமானவர்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை

இவ்வாறு பற்பல நியாயமான செயல்களைக் கைக்கொண்டு வதியும் மாந்தர்களிடையே வஞ்சித்து வாழும் கயவர்கள் பலரும் மலிந்திருப்பதைக் குறித்து வருந்தாதிருக்க முடியவில்லை. இவ்வஞ்சகர்களிற் சிலர், உலகியலறி யாத பாமரர்களிடையே வீண் வியாஜ்ஜியங்களை இழுத்து விட்டுத் தாம் ஓர் சார்பினருக்குச் சகாயமாயிருப்பதாய் நம்பிக்கை உண்டு பண்ணி, கோர்ட்டுச் செலவென்றும், வக்கீல் பீஸ் என்றும், சாக்ஷிகளின் படி என்றும் பலவித மான செலவுகள் சொல்லி, ரூபாய் வாங்கி, மேற்கூறியவர்களுக்கும் கொஞ்சம் கொடுத்து விட்டு மீதிப் பணத்தைத் தமது பாக்கெட்டில் போட்டுக் கொள்கின்றனர். இவ்வகுப்பினர் இல்லாத கிராமங்களோ நகரங் களோ இக்காலத்தில் இருத்தல் அபூர்வம். வேறு சில மோசக்காரர்கள் தேவாலயங்கள் கட்டுவதாயும், தர்ம சத்திரங்கள் நடத்துவதாயும், இது போன்ற பல காரணங்கள் புகன்று, ஏமாறுபவர்களிடம் பணம் வசூலித்துச் சேர்த்ததில் ஓர் பாகத்தைத் தாங்கள் கூறிய தர்மத்திற்கு உபயோகித்து விட்டு, மீதத்தைக் கொண்டு தம் பாழும் வயிறு வளர்க்க வகை தேடுகின்றனர். இவர்களில் அநேகர் தாம் சொல்லிய தர்ம விஷயத்திற்குக் கொஞ்சமாவது செலவு செய்யாமலே பூராத் தொகையையும் சொந்தப் படுத்திக் கொள்கின் றனர். இன்னும் சில நயவஞ்சகர்கள், குறித்த முக்கிய க்ஷேத்திரங்களி லுள்ள ஆலயங்களில் உச்சிக் காலக் கட்டளை நடத்துகிறவகைக்குப் பண்டு சேர்க்கிறேனென்றும், அர்த்தசாமக் கட்டளைக்கு நிதி வசூலிக்கிறேனென் றும் பணம் சேர்த்துத் தம் புழுமலி யுடலை வளர்த்துப் படு நரகத்திற் கிலக் காகின்றனர். ஆலயம் முதலிய தர்மஸ்தாபனங்களின் தர்ம பரிபாலகர்களா யிருந்தும் அவைகளின் வருவாயை நல்லவையல்லாவழிகளில் விரயம் செய் வோரையும் இவ்வினத்தவரே எனல் பொருந்தும். இன்னும் தந்தையும் தனயனும், தமயனும் தம்பியும், நண்பர்களும் உறவினர்களும் தமக்குள் ஒருவரை யொருவர் மோசம் செய்து பழி பூணுவதும் இவ்வஞ்சக குணத்தி

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்."

2076886 m211,N15A8

றாலேயே யாகும். இவர்கள் செயலைத் தவிர வியாபாரம் செய்பவர்களுள், குறைந்த அளவு நிறை முதலியவற்றைக் கொண்டும், விளம்பரம் செய்து மாறாட்டமான சரக்குகளை அனுப்பியும் ஏமாற்றும் பாதகர்களும் பலர். இன்னோரனையர் செயல்களை விரிக்கிற் பெருகும், இவை நிற்க,

தேச நலம் ஒன்றே கருதிப் பத்திரிகை நடாத்தும் தேசாபிமானிகளுள் இத்தகைய சிலர் புகுவதை நினைந்து வருந்தவேண்டியதா யிருக்கிறது. உதாரணமாக "சென்னையைச் சார்ந்த திருவள்ளூரில் 2 அல்லது 3 வருஷங்கட்கு முன்பு ஆரம்பமான ஓர் வாரவெளியீட்டிற்கு நாம் சந்தா அனுப்பி யிருந்தோம். அனுப்பிய சந்தாவிற்கு அப்பத்திராதிபர் ஒரு வருடத்துக்குப் பத்திரிகை அனுப்பித் தரவேண்டுவதிருக்க, மூன்று அல்லது நான்கு பத்திரிகைகளுக்கு மேல் வரப்பெற்றோமில்லை. இதன் சம்பந்தமாகப் பல கடிதங்கள் அதன் அதிபருக்கு எழுதியும், இதுவரை ஒருவிதமான பதிலும் கிடைக்கவில்லை. இப்பத்திராதிபரை நம்பி நம்போல் ரூபாய் அனுப்பி மோசம் போனவர்கள் இன்னும் எத்தனை பேர்களோ? ஈசனே யறிவார். இத்தகையார் செயலால், உத்தம தேசாபிமானிகளால் புதிதாய் வெளிவரும் வெளியீடுகளிலும் உலகினர் நம்பிக்கை கொள்வதற் கேதுவில்லாமற் போகு மல்லவா?

இவ்வினத்தார் பிறர்க் கிடையூறு செய்தே உயிர் வாழ்வதால், பொது மக்களின் பழிப்பிற் கிலக்காவதுடன், மறுமையினும் மீளா நரகத்திற்காளாகின்றனரன்றோ? இவர்களின் குணந் தெரிந்த உத்தமர் இன்னோர் பால் நற்புத்தி புகலினும் அவர்கள் அந் நன்மொழிகளைச் செவிடன் காதில் ஊதிய சங்குக்கே உவமையாக்குகின்றனர். கடவுளே நேரில் வந்து "உலகினரை ஏமாற்றி வாழ்தல் கொடிய நரகத்திற்கு ஏதுவாகும்" என்று போதித்தாலும் இவ்வகுப்பார் செவி சாய்க்கமாட்டார். என்னே! இன்னோர் நெஞ்சத்துள்ள வஞ்சத்தின் தடிப்பு. "நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டின் நற்றமிழை எழுத வெழுத்தாணியாமோ, பேய் வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரிய விளக்கேற்றி வைத்தால் வீடதாமோ, தாய்வார்த்தை கேளாத சகசண்டிக்கென் சாற்றிடினும் சொன்னபடி யொழுகமாட்டான்" என்ற ஆன்றோர் வாக்கை மெய்ப்பிக்கும் இவர்களைப்பற்றி வேதநாயகம் பிள்ளையவர்களும் தமது நீதிநூலில்

"புயக மதைத் தேள் புலியைப் பொல்லாத விலங்கையெலா
மயர்வாக வடித்தோட்ட லவைகள்குணத் தாலன்றோ
வியல்பின்றி யெக்காலு மேதிலார்க் கிடரிழைக்குங்
கயவனையே வைதடித்துக் கானோட்டல் நன்றாமே"

எனப் புகன்றனர்.

இவ் வஞ்சகர் இம்மையில் உலக அபவாதத்திற்கும் மறுமையில் வெய்ய நரகத்திற்கும் ஆளாகாதவாறு இனியேனும் நியாய வழிகளில் நடந்து நல்லோராக முயல்வது நலந்தருவதாகும். எல்லாம் வல்ல இறைவன் அவ் வண்ணம் அருள் புரிவானாக.

---

"கரும்பை வேம்பென்றால், அது வேம்பாகுமா?"

# சிறுகதை

## சிறுமிகள்—கல்வி.

ஆவணி மாதம்—சுக்கில பட்சம்—13-ம் தேதி புதன்கிழமை. முருகேசம் பிள்ளை வீட்டில் மேளவாத்தியம் முழங்கிக் கொண்டிருக்கிறது. பெரியோர்களும் சிறியோர்களும் வந்து கூடத்தில் உட்கார்ந்திருக்கின்றனர். முருகேசம் பிள்ளையின் மகன் நடராஜனுக்கு அன்று அக்ஷராப்பியாஸம் ஆரம்பம். எல்லாரும் வாத்திய முழக்கத்தோடு பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள். நடராஜனுக்கு அக்ஷராப்பியாஸம் முடிந்தது. பள்ளிச் சிறுவர்கட்கும், மற்றவர்கட்கும் பொறி, கடலை, கற்கண்டு, தேங்காய், பழம் முதலியன வழங்கப்பட்டன. நடராஜன் பள்ளிக்கூடத்தையும், மாணவர்களையும் கண்டு மகிழ்ந்தான். புதுச் சிலேட்டையும் புஸ்தகத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டான். அவனைப் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு எல்லாரும் அவரவர்களுடைய வீடுகளுக்குப் போனார்கள்.



நடராஜனுடைய அக்காள் காந்திமதி. எட்டுவயதுள்ள சிறுமி. காந்திமதிக்கு ஐந்து வயது முடிந்தவுடன் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டும் என்று முருகேசம் பிள்ளை நினைத்தார். அவருடைய மனைவி வள்ளியம்மாள் "ஆமாம்! இப்போது என்ன அவசரம் வந்து விட்டது! ஆண் பிள்ளையா, சரியாகப் பதினைந்து வயதில் மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணவேணும் என்பதற்கு. வீட்டு வேலைகளை முதலில் பழகும்படி விடுங்கள்" என்றாள்.

தம்பிக்கு அக்ஷராப்பியாஸம் ஆன நாளிலிருந்து காந்திமதிக்குங்கூட, படித்துக்கொள்ள வேண்டும் என்றும், பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும் என்றும் ஆலோசனைகள் தோன்றிவிட்டன. ஒரு நாள் நடராஜனோடு சாப்பிட்டுவிட்டு "அம்மா நானும் பள்ளுக்கூடத்துக்குப் போகிறேன்" என்று தாயாரைக் கேட்டாள். அப்போது வள்ளியம்மாள் "என்ன! உன் மூஞ்சி! பெண்பிள்ளைக்குப் பள்ளிக்கூடம் என்ன கேடு! நீ படித்து என்ன செய்யப்போகிறாய்? உத்தியோகம் ஏதாவது பண்ணப்போகிறாயா? நீ பள்ளிக்கூடத்துக்கே போக வேண்டாம்" என்று சீறிச் சினந்தாள்.

காந்திமதி அழுதுகொண்டே மாடிக்குச் சென்றாள். 'அழுது அழுது கண்கள் சிவந்துவிட்டன. பத்து மணி ஆயிற்று. நடராஜன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தான், முருகேசம் பிள்ளை சாப்பாட்டுக்கு வந்தார். ஒவ்

வொரு நாளும் வருகிற வழக்கப்படி அன்று சாப்பிட வரவில்லை காந்திமதி. காந்திமதி எங்கே காணோம்—சாப்பாட்டுக்கு ஏன் வரவில்லை என்று கேட்டார்கள்.

வள்ளியம்மாள் நடந்த சங்கதியைச் சொன்னாள். தம்பி புறப்பட்டுப் போய் அக்காளை அழைத்துக் கொண்டு வந்தான். காந்திமதி கதவுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு "ஏன் அப்பா அழைத்தீர்களாமே" என்று அழுதாள். அப்போது முருகேசம் பிள்ளை "அழாதே அம்மா! நல்ல நாள் பார்த்துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறேன் வா" என்று பக்கத்தில் வருமாறு அழைத்தார். காந்திமதிக்கு மகிழ்ச்சி பொங்கிவிட்டது.

குறிப்பிட்ட நல்ல நாளும் வந்தது. முருகேசம் பிள்ளை காந்திமதியைப் பெண் பாடசாலையிற் சேர்த்தார். அங்கே காந்திமதி வெகு சிரத்தையாக அ, ஆ—எழுத்துக்களை எழுதிப் பழகிக்கொண்டிருந்தாள். வீட்டில் காய்கறி அறுக்கும் நேரம் வந்தது. வள்ளியம்மாள் "காந்தம்! காந்தம்!! என்று கூப்பிட்டாள். காந்திமதி வரவில்லை. 'எங்கேயோ பெரியதனம் பண்ணப் போய்விட்டாள்' என்று மிகவும் ஆவேசம் கொண்டிருந்தாள் வள்ளியம்மாள்.

பத்து மணிக்கு அக்காளும் தம்பியும் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். மேல் மாடியில் உலரப்போட்டிருந்த புடவைகளை எடுத்துக் கொண்டுவரப் போன முருகேசம் பிள்ளையின் தாயார் பார்வதியம்மாள் சிறுவன்—சிறுமியைப் பார்த்துவிட்டாள். முருகேசம் பிள்ளையும் குழந்தைகளும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார்கள். பார்வதியம்மாள் வந்து "காந்தத்தை எங்கே போகச் சொன்னாயடா முருகேசா?" என்று கேட்டாள். அதற்கு முருகேசம் பிள்ளை "பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினேன்" என்று மறுமொழி கூறினார். அப்பொழுது பார்வதியம்மாள் "இதென்னடா, உன் மகளை உத்தியோகத்துக்கு அனுப்பப்போகிறாயா என்ன பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டாய்! இனி என்ன, காந்திமதியைப் படிக்கும்படி செய்துவிடு, நடராஜனைச் சமையல் செய்யக் கற்றுக்கொள்ளச் சொல்லிவிடு. காலம் கலிகாலமல்லவா இது! பெண் பிள்ளைக்கு இன்னும் சரியாகச் சோறு சமைக்கத் தெரியாது—அதற்குள் என்ன படிப்பு வேண்டியிருக்கிறதடா? நாங்கள் எல்லாரும் படித்துக் கொண்டோமா? குடும்பங்களைச் சமாளிக்கவில்லை? படித்துக் கொண்ட பெண்களின் சங்கதிகளைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். அந்தக் கைலாசம் பிள்ளையின் மகள் மீனாக்ஷியைப் பார்! இருபது வயதாயிற்று—கலியாணம் இல்லை. பட்டணத்தில் எப். ஏ., படித்துக் கொண்டிருக்கிறளாம்! உலாவல்கள்—லெக்சர்கள்—இதென்ன அம்மா! எங்கும் கண்டதில்லை. ஒரு படிப்பும் தெரியாத உன் பெண்டாட்டி குடும்பம் செய்யவில்லை?" என்று ஒரு பிரசங்கம் செய்தாள்.





இதற்குள் வள்ளியம்மாள் வந்து "காந்தத்துக்கு எதற்காகப் பள்ளிக்கூடம்? அம்மா வீட்டு வேலைகளைக் கவனிக்கட்டும். வீட்டில் சரிகம படிக்கிறவரை நீங்கள் சொல்லிக்கொடுங்கள். இவ்வளவு பெரிய பெண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் எல்லாரும் சிரிப்பார்கள்" என்று சொன்னாள்.

முருகேசம் பிள்ளையின் சாப்பாடு முடிந்தது. இதென்னடா பேரிழவு என்று ஆலோசனை செய்து கொண்டே கூடத்துக்குள் போனார்.

—*R. N.*

குறிப்பு:—இன்னும் நமது நாட்டில் பார்வதி அம்மாக்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். இந்த மூட்டுக் கட்டை முருகேசம் பிள்ளை வீட்டில் மாத்திரம் அல்ல—அநேகருடைய இல்லங்களில் இருக்கின்றது. நம்மவர்கட்குப் பெண் பிள்ளைகளின் கல்வி என்றால் மிகுந்த அசிரத்தை—அலட்சியம். ஒரு வேளை பள்ளிக்கூடத்துக்குப் பெண்களை அனுப்பினாலும் பத்து வயது நிறையு முன்பே கலியாண வயது என்றும், பன்னிரண்டு வயது வரும் போது பக்குவ வயது என்றும் ஏதோ சாக்குகளைச் சொல்லிப் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். கலியாணம்தான் நடந்துவிட்டாலும் கல்வி கற்பதற்கு என்ன தடை ஏற்பட்டுவிடும்? வீட்டில் குழந்தைகளுக்குத் தகப்பனைக் காட்டிலும் தாயார் மிகவும் நெருங்கிப் பழகி வழிகாட்டக் கூடியவள். தாயாரைவிடச் சிறந்த உபாத்தியாயர் இருக்க முடியாது. இத்தகைய தாயார் படியாதவளாயிருந்தால் பிள்ளைகளுக்கு நல்ல நீதிகள், நல்ல குணங்கள் பிடிபடாமற் போய்விடும். உலகியல் அறிவு இல்லாமலே பிள்ளைகள் வளர்வார்கள். பிள்ளைகளின் நற்குணம் தீக்குணங்கட்கு வீட்டின் வளர்ப்பே காரணமாகும். அதனால் தாய்மார் வித்தியாவதிகளாக விளங்குதல் மிகவும் அவசியம்.

பத்திராதிபர்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.




"பிராண சங்கடம்."

புதிதாகத் தாலூகா போர்டு அங்கத்தினராகிவிட்ட வெங்கா ரெட்டியாருக்கு போட்டோ எடுத்துக் கொள்ளவேணும் என்ற ஆசை பிறந்து சர்வாலங்கார பூஷிதராய்த் தயாரானார்.

போட்டோ கிராபர்:—"தயவு செய்து முகத்தில் உற்சாகம் தோன்றும்படி சந்தோஷமாய்ப் பாருங்கள் பார்க்கலாம்."

எப்படியோ சிரமப்பட்டு ஒரு தினுசாய் உட்காருவதைச் சரிப்படுத்திக் கொண்ட வெங்கா ரெட்டியார் கண் விழிகளை மேலே செலுத்தி, நோயினால் அவஸ்தைப் படுவது போன்ற பார்வையைக் காட்டினார்.



போட்டோ கிராபர்:—(வந்த சிரிப்பைச் சமாளித்துக் கொண்டு) ஐயா! ஐயா! கண்ணை உருட்டாதீர்கள்! தலையைக் கொஞ்சம் இடது பக்கமாகத் திருப்பிக் கொள்ளுங்கள், போதும்!"

ரெட்டியார் விசுக்கென்று தலையை இடது பக்கம் திருப்ப, ஏதோ கொஞ்சம் பொருத்தமான ஸ்தானத்துக்கு வந்து அது நின்றது.

போட்டோகிராபர்:—" ஆம்! அசே! இப்பொழுது வெகு ஜோர்!" என்று சொல்லிக்கொண்டே தன் தலையிலிருந்த தொப்பியைக் கழற்றி 1, 2, 3 என்று சொல்லித் தன் வேலையை முடித்துக்கொண்டு, ஐயா நமஸ்காரம்! நீங்கள் இனி எழுந்திருக்கலாம். நீங்கள் உங்கள் உருமால் மீது உட்கார்ந்திருக்கிறீர்களே என்று நான் மிகவும் பயந்துகொண்டிருந்தேன்!"

வெங்கா ரெட்டியார்:—(மிகுந்த ஏமாற்றத் தொனியில்) "ஆ! உருமால் மீதா உட்கார்ந்திருந்தேன். ஏன நீ முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாது? ஐயையோ! நான் தலையில் இருக்கிறதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன். கெடுத்துப் போட்டாயே! படம் என்ன நன்றாயிருக்கும்?"



போட்டோகிராபர்:—"நான் வேணும் என்றே சொல்லவில்லை. சொல்லியிருந்தால் உங்கள் முகத்தின் களையே கெட்டுப் போயிருக்குமே! உருமால் கலைந்துபோன விசனத்தில் உட்கார்ந்திருந்தால் முகத்தை, யாரால் பார்க்க முடியும்?"

***

"ஏன் விடமாட்டாய்?"

ஒரு பெரியவர் இரவில் படுக்கைக்குப் போகும் முன்பு ஐந்து வயதுள்ள தம் சிறுவனை அழைத்துக்கொண்டு அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருந்தார்.

இனி மேல் போய்ப் படுத்துக்கொள்ளலாம் என்று வீட்டுக்குப் பக்கத்தில் வரும்போது,



பையன்:—"அப்பா! நானும் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்."

பெரியவர்:—(பெருமையாக) "அடபடியா கண்ணே! யாரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறாய்!"

பையன்:—"பாட்டியை"

பெரியவர் வயிறு வெடிக்கச் சிரித்துப் பையனைத் தடவிக் கொடுத்துக்கொண்டே.

"ஏண்டா! எங்கள் அம்மாளை நீ கலியாணம் செய்துகொள்ள நான் விட்டு விடுவேனா?"

பையன்:—(ஆட்சேபணையாக) "ஏன் விடமாட்டாய்? நீ எங்கள் அம்மாவைக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறாயே, இல்லையா?"

***

காதலன்:—(காதலியைப் பார்த்து) "பெண்களுக்குத் திடீரென்று ஆச்சரியம் தோன்றி விட்டால் அப்போது அவர்களுடைய முகம் எப்படியிருக்கும்?"

காதலி:—"இவ்வளவு சந்தேகம் ஏன்? பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து விடுங்கள். நான் கேட்ட அந்த வைரத் தோட்டை வாங்கிக் கொடுத்து விட்டால் நன்றாகத் தெரிந்துவிடும் அல்லவா?"

***

சுப்பன்:—"நான் அந்தக் கலியாணத்துக்குப் போவதா இல்லையா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

குப்பன்:—"யாருக்குக் கலியாணம்?"

சுப்பன்:—"எனக்குத் தான்."

***

பொம்மன்:—"ராமன் எப்பேர்ப்பட்ட ட்ரைவர்?"

திம்மன்:—"ஓ! அவனா! அவன் ஸ்டீரிங்கை இரண்டு கைகளினாலும் பிடித்து ஓட்டுகிற ஒரு பெரிய முட்டாள்."

## "இருதலைக் கொள்ளி"

இரண்டு "குஷால் பேர் வழிகள்" வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார்கள். பாவம் எங்கு தேடியும் ஒன்றும் கிடைக்கவில்லை. பசிக் களைப்பு வாட்டியதினால் சாப்பிடவேண்டும் என்ற உத்தேசத்தோடு அப் பாக்கிகளை ஒரு மரத்தில் சார்த்திவிட்டு நிழலில் உட்கார்ந்தார்கள்.

புதரிலிருந்து திடீரென்று ஒரு கரடி வெளி வந்து தாக்கத் தொடங்கி விட்டது. இருவரும் ஒன்றும் தோன்றாமல் நடு நடுங்கிப்போனார்கள். ஒருவன் சுரேலென்று மரத்தின் மீது ஏறிக் கொண்டான். மற்றவன் பாறைகளிலிருந்த ஒரு குகையில் நுழைந்து பதுங்கினான்.



கரடி மரத்தின் மேல் இருந்தவனைப் பிடிக்கத் தாவித் தாவிப் பார்த்து முடியாமல் விட்டு விட்டது. பிறகு குகையில் பதுங்கி யிருந்தவன் மீது நாட்டம் வைத்துவிட்டது கரடி. குகைக்குள் நுழைந்தவனோ உள்ளேயும் போகாமல், வெளியிலும் வரமுடியாமல் திண்டாடித் தத்தளித்துப் பல்லைக் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

மரத்தில் இருப்பவன்:—"அடே வடிகட்டின முட்டாள்! ஏன் குகைக்குள்ளேயே தலைமறைவாய் இருக்கக் கூடாது?"

குகைக்குள் இருப்பவன்:—போடா மடையா! எனக்கிருக்கிற கஷ்டம் எனக்குத் தெரியும்! எவ்வளவு தூரம் உள்ளே இருக்க முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளி யிருக்கிறேன்—உள்ளே புலி தூங்கிக்கொண் டிருக்கிறது."

***

## "பசியாவரம்"

ஒரு பைராகி நல்ல மட்ட மத்தியானம்—கடும் வெய்யிலில் ஒரு பிராமணன் வீட்டுக்குப் போய்க் கூறுகிறான்:

எனக்குப் பசி பிராணன் போகிறது. கொஞ்சம் கஞ்சியும் சாதமும் கொடுப்பீர்களானால், உங்களுக்குப் பசி தாகம் இல்லாமற் செய்யும்படியான ஒரு சித்த ஔஷதம் கொடுப்பேன்."



பிராமணனோ பக்காப் பேர்வழி. பைராகியின் கைச்சரக்கு அவனிடம் செல்லவில்லை. பைராகிக்கு மறுமொழி பிராமணன் கூறுகிறான்:

"எங்களுக்குப் பசி தாகம் இல்லாமற் செய்யும் ஔஷதம் கொடுக்கவல்ல நீ, ஏன் அதை நீயும் உண்டு பசியாற்றிக் கொள்ளக்கூடாது? சரி! சரி!! உன் வேலையைப் பார்!"

***

டாக்டர்:—உனக்குத் தலைவலி எங்கே வரும்?"

மாணவன்:—"பள்ளிக்கூடத்தில்"



## "அவசரம் இல்லை"

ஒரு சாஸ்திரியார் மோக்ஷ இன்பத்தைக் குறித்து ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். எல்லோரும் பிரம்மானந்தமாய்க் கேட்டுக்கொண் டிருந்தார்கள். கடைசியில் சாஸ்திரிகள் பக்த கோடிகளை நோக்கி "மோக்ஷத்திற்குப் போகத் தயாரா யிருப்பவர்கள் எல்லாரும் எழுந்திருக்க வேண்டும்" என்றார்.



ஒருவனைத் தவிர மற்ற எல்லாரும் எழுந்து நின்றார்கள். அவனும் விஷயம் தெரிந்த ஒரு சரியான பேர்வழி. மிகவும் சாதாரணமாயும் அமைதியாயும் உட்கார்ந்திருந்தான்.

சாஸ்திரியார்;—(ஆவேசத்தோடும் ஆத்திரத்தோடும்) "என்ன உனக்கு மோக்ஷத்திற்குப் போக விருப்பம் இல்லையா?"

அவன்:—(அமைதியாய்) "இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை."

***

சென்னையில் ஒரு மின்சார உற்பத்தி சாலையில் அடியிற் கண்ட நோட்டீஸ் போடப்பட்டிருந்தது:—"அபாயம்! ஜாக்கிரதை! இந்தக் கம்பிகளைத் தொடுவோர் உடனே இறந்து விடுவார்கள். மீறித் தொடுவோர் பிராஸிக்யூஷன் செய்யப்படுவார்கள்."

***

பிச்சு:—"மாமா! உங்களுக்குக் குழந்தை பிறந்திருக்கிற தாமே. அது உங்களுக்கா, எனக்கா?

மாமா:—"என்னடா அது! போக்கிரிப் பயலே!"

பிச்சு:—"இல்லை மாமா! ஆண் குழந்தையானால் உங்களுக்கு. பெண் குழந்தையானால் எனக்கு. கோபித்துக் கொள்ளாதீர்கள்."

வி. ரா.

## செய்யத்தகாதன.

—:(o):—

1. யாரும் கன்றின் கயிற்றைத் தாண்டுதல் கூடாது.
2. மழை பெய்யும்போது ஓடக்கூடாது.
3. தண்ணீரில் தங்களுடைய பிரதி பிம்பத்தைப் பார்க்கக்கூடாது.

இவ்விதிகளைக் கடந்து ஒழுகுவோருக்கு அச்சம், நோய் முதலியன உண்டாகும் என்று பெரியோர் கூறுவர்.

## சொற்பிதிர் எண்—1.

1. கோலிசர்கசன் அர
2. லாநேதில் ருத்மோ
3. காபம் எதிதிகய
4. பொம்ருற் வக்றனழக
5. னைக்கி காதாராவி
6. வாசன் ணிலசாதனுத்கூர்
7. வாழ் நாகம் டாபடர்
8. குணக்கிகக்ழ்திண்பனெ
9. எதொடு கைடத்
10. வேசித்தாதாதம் தர்ந்
11. யார்த்தின வசிஞா
12. வினவல்ன் ககா.
13 ராமண் பாய்ம்ளுற

விடைகொடுக்கும் நேயர்க்குரிய விதிகள்

1. மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் எழுத்துக்களை முறைப்படுத்தினால் அர்த்த முள்ள வார்த்தையாகும். 2. மேற்கண்ட பிதிரின் விடைகள் ஜூலை மீ 31-ந்தேதிக்குள் வந்து சேரவேண்டும்; 3. "ஆனந்த போதினி" சந்தாதாரர்களுக்கு மாத்திரந்தான் இந்தப்போட்டியில் இடம் உண்டு, விடை அனுப்பும்போது சந்தா எண் குறித்து எழுதவேண்டும். 4. முழுதும் சரியான விடை கொடுப்பவருக்கு பாக்கெட் கடிகாரம் ஒன்று இனாமாக அளிக்கப்படும். 5. ஜனவரி மீ 31-ம் தேதியில் முதன் முதலாகப் பிரிக்கப்படும் சரியான விடைக்கே பரிசு கொடுக்கப்படும். 6. சொற்பிதிரைக்குறித்து யாதொரு கடிதப் போக்கு வரவும் வைத்துக் கொள்ள முடியாது. 7. சொற்பிதிர் மானேஜருடைய தீர்ப்பே முடிவானதாகும். 8. விடைகளை அடியிற் காணும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

மானேஜர், (சொற்பிதிர்)
ஆனந்தபோதினி ஆபீஸ், சென்னை.

### அறிவிப்பு.

—:(o):—

"ஆனந்த போதினி" மாச சஞ்சிகை 15-வது ஆண்டுக்காகச் சந்தாத் தொகையை 14-6-29 தேதிக்குள் முன் பணமாக அனுப்புவோருக்கு "ஆனந்த போதினி" வருஷ அநுபந்தம் இனாமாகக் கொடுக்கப்படும் என்று முன்னர் நாம் அறிவித்திருந்தபடி, அங்ஙனம் முன் பணம் அனுப்பியவர்கட்கும், ஸ்டாம்புகளை அனுப்பியவர்கட்கும் ஷை வருஷ அநுபந்தங்களைத் தபால் மூலம் அனுப்பிவைத்துவிட்டோம். இனியும் ஷை வருஷ அநுபந்தம் வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்.




### கிருஷ்ணலிங் அல்லது துப்பறியும் சீடன்.

(701-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

கற்பகம்:—ஆனால் அந்தோ எனக்குத் தெரியாதே.........

ஆனந்தலிங்:—"அப்படியாயின் நீ இதில் சம்பந்தப்படவில்லை யென்று கூறுகிறாயா? நீதானே மனோன்மணி போல் வேடமணிந்து ஒரு ஆயிரம் பவுன் உண்டியைப் பாங்கியில் கொண்டு போய் மாற்றினாய்? அதனால் குற்றம் செய்தது ஒருவரா யிருக்க, நிரபராதியும் யோக்கியதையும் உடைய வேறொரு கன்னிகையின் மேல் அநியாயமாய் அக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. நான் கூறுவது உண்மை தானே?" என்றான்.

கற்பகம் முதலில் ஆனந்தலிங் கூறியதை மறுக்க நினைத்தாள். அதற்கு மனச்சாட்சி ஒப்பவில்லை. ஆதலின் தன் முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழத் தொடங்கினாள்.

ஆனந்தலிங் அவளை நோக்கி மிக்க இரக்கத்தோடு,

"கற்பகம்! நீ அக்கள்ளர் ஜோலிக்குப் போகவேண்டா மென்று என்னைக் கேட்டுக்கொண்டாய். நீ யவர்கள் சகவாசத்தை விட்டு விலகிவிடமாட்டாயா? அத்தகைய கொடிய துஷ்டர்களைத் தண்டிக்கும்படி எனக்கு அனுமதியளிக்க மாட்டாயா?" என்றான்.

அவன் வார்த்தைகள் அவள் மனதில் ஆழமாய் உறுத்தின. ஆனால் அவள் ஒரு பதிலும் கூறவில்லை.

ஆனந்தலிங்,—"நான் உனக்குக் கூறவேண்டிய யாவும் கூறிவாய்விட்டது. இன்னும் ஒன்றே. அதாவது "இத்துஷ்டர்களை விடாது தேடி இவர்களைத் தண்டனைக்குள்ளாக்காமல் நான் உயிர் வாழ்வதில்லை யென்று என் தந்தையின் சவத்தின் முன் சத்தியம் செய்துகொண்டேன். இப்போது அவர்கள் ஜோலிக்கே போவதில்லை யென்று உனக்கு வாக்களித்துவிட்டேன். என் வாக்குப்படி நடந்துகொள்வது எப்படி யென்று எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு இரண்டடியாய் அறையை விட்டுச் சென்றான்.

## 15-வது அத்தியாயம்.

ஆனந்தவிங் சென்ற பிறகு ஒரு விநாடி கற்பகம் அசையாமலிருந்தான். உடனே அவன் மனதில் ஒரு மிக்க பயங்கரமான சிந்தனை யுதித்தது. உடனே ஆத்திரத்தோடு எழுந்து "இரு இரு- நில் நில். போகாதே" என்று கூவிக்கொண்டே அவன் பின்னால் ஓடினான்.

ஆனந்தவிங் பேசாமல் நின்றான்.

கற்பகம் அவன் தோள் மேல் கைவைத்துப் பிடித்துக்கொண்டு, மிக்க பரிதாபத்தோடும் துயரத்தோடும்,

"நீ யென்ன செய்யப் போகிறாய்? அதைச் சத்தியமாய்க் கூறவேண்டும் என்று உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றான்.

ஆனந்தவிங்:—"என் எதிர்கால விஷயத்தைப் பற்றி நீ கவனிக்க வேண்டிய அக்கரையே யில்லை. உன் கடனைத் தீர்த்துவிட்டேன்" என்று செல்ல முயன்றான்.

கற்பகம் அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "இல்லை! இல்லை! உன்னை விடமாட்டேன். நீ என்ன செய்யப் போகிறாய் என்பதைக் கூறிவிட்டே செல்லவேண்டும். இன்றேல் உன்னை விடாமல் தொடர்ந்தே வருவேன்" என்றான்.

ஆனந்தவிங்:—உயிரைவிடக் கௌரவத்தை மதிப்பவன் என்ன செய்வான்?

கற்பகம்:—அப்படியானால் தற்கொலை செய்துகொள்ளப் போகிறாயா?

ஆனந்:—"ஆம்—உண்மையே. ஆனாலும் தற்கொலை யல்ல. அக்கள்வர்களிடத்திலேயே என்னை மறுபடியும் ஒப்பித்துவிடப் போகிறேன்." என்று கூறிவிட்டு அவனிடமிருந்து திமிறிக்கொண்டு ஓடிவிட முயன்றான்.

கன்னிகை மறுபடியும் ஓடி அவனைப் பிடித்துக்கொண்டு, "ஐயோ! வேண்டாம் வேண்டாம். உன் வாக்குத்தத்தத்தை வாபீஸ் அளித்துவிட்டேன் உன் இஷ்டப்படி நடந்துகொள்" என்றான்.

இதைக் கேட்ட ஆனந்தவிங் சந்தோஷத்தால் கூச்சலிட்டு "ஓ! கற்பகம்! என்னைப் பற்றி யேன் நீ இவ்வளவு கவலை யெடுத்துக் கொள்கிறாய்? இத்துஷ்டருடைய சகவாசத்தை ஏன் விட்டொழியலாகாது? உன்னைக் காப்பாற்றும்படி யெனக்கு அனுமதி யளி! உனக்கு வேண்டியது பணமாயின் அதுவும் கிடைக்கச் செய்கிறேன். உனக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் கிடைக்கச் செய்கிறேன்" என்றான்.

கற்பகம்:—சந்தர்ப்ப சாக்ஷியங்களால் நீ யென்னை நம்ப மாட்டாய். ஆயினும் நான் உண்மையில் நிரபராதி.

ஆனந்:—ஆயினும் கோட்டைப் பாங்கியில் மாற்றினாயல்லவா!

கற்பகம்:—அவை யாவும் உண்மையே. ஆயினும் நான் நிரபராதியே. அதற்கு மேல் ஒன்றும் கூற முடியாது. நான் நிரபராதி என்பதை மட்டும் கூறுகிறேன்.

ஆனந்தவிங் வந்தனம் என்றான். உடனே கற்பகம் போய்விட்டேயிருப்பான். ஆனந்தவிங் அவனைப் பிடித்துக்கொண்டு "நான் இப்போது



தெரிந்து கொண்டேன். உண்மை யறியாமலே நீ யவர்கள் கையில் ஒரு ஆயுதமாய்ச் சிக்கிக்கொண்டாய்" என்றான்.

அவன் ஆம் என்றான்.

ஆனந்:—அப்படி யானால் இந்தச் சதியாலோசனையைப் பற்றி யுனக்கு ஒன்றும் தெரியாது?

கற்பகம் தலை யசைத்தான்.

ஆனந்தவிங் சற்று நேரம் சிந்தித்து, "கற்பகம் நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம். இனி இத்துஷ்டர்களால் உனக்கு ஒரு கெடுதியும் நேரா வண்ணம் நான் பார்த்துக் கொள்கிறேன். அவர்களை நான் பிடிக்கப் போகும் சமயம், உனக்கு முன்னாடி யெச்சரிக்கை செய்கிறேன். அப்போது நீ யுன் தாயாரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்." என்றான்.

கற்பகம்:—ஆ! உன் உதார குணத்திற்கு.........ஆனால்.........

ஆனந்:—உனக்கு வேண்டியவர்கள் வேறு யாரேனு மிருக்கிறார்களோ?

கற்பகம்:—பிச்சன் என்று அழைக்கப்பட்ட மனிதன்.........

ஆனந்:—அவன் என் தந்தையைக் கொன்றவர்களில் ஒருவன்.

கற்பகம்:—அவன் என் தந்தை.

ஆனந்தவிங் மிக்க வியப்படைந்து "என்ன! உன் தந்தையா! ஒருகாலு மிராது" என்றான்.

கற்பகம்:—உண்மையாகவே அவன் என் தந்தை.

ஆனந்தவிங் பிரமித்துவிட்டான். அப்படியாயின் இவன் தந்தை நம் தந்தையைக் கொன்றான் என்று சிந்தித்தான். அதற்குள் கற்பகம் வந்தனம், போய் வருகிறேன் என்றான். ஆனந்தவிங்கும் வந்தனம் என்றான்.

கற்பகம் உடனே போய்விட்டான். ஆனந்தவிங் சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் பிரம்ம ஹத்தியால் பீடிக்கப்பட்டவன்போல் நின்றான். "இவன் தந்தை நமது தந்தையைக் கொன்றான். நம் தந்தையைக் கொன்றவன் மேல் பழி தீர்த்துக் கொள்வதாய் நாம் பிரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறோம். இப்போது நம் உயிரைக் காப்பாற்றிய இவன் தந்தைக்கு நாம் எப்படித் தீங்கு செய்வது?" என்று அவனுக்குப் பெருங் கலவரமாய்விட்டது.

கற்பகமோ போய்விட்டான். துரிதமாய்ச் சென்று நெடுந் தூரம் சென்றுவிட்டவனை நெருங்கிக் கூப்பிட்டான். கற்பகம் சந்தோஷமடைந்து "ஆ! நீயா?" என்று நின்றான்.

ஆனந்தவிங்:—"ஆம், நீ சொன்னதை நான் நம்பவில்லை யென்று கூற வந்தேன். ஆயினும் பரவாயில்லை. எப்படியாவதாகட்டும் நான் உன் வீட்டு வரையில் உனக்குப் பாதுகாப்பாய் வருகிறேன்" என்றான்.

இருவரும் துரிதமாய் நடந்து முக்கால் வழி சென்றபோது ஆனந்தவிங் "கற்பகம் இனி நீ செல். நான் பின்னால் தூரத்தில் தொடர்ந்து வருகிறேன்" என்றான். அவ்வாறே யவன் தூரத்தில் முன்னும் ஆனந்தவிங் பின்னுமாய்ச் சென்றார்கள்.

கற்பகம் தன் வீட்டிற்குள் நுழைந்ததைக் கண்டபின் ஆனந்தஸிங் திரும்பிவிட்டான். அப்போது இரவு 9-மணியே யாகிறது. ஆயினும் ஆனந்தஸிங்குக்கு இளைப்பாறவே பிரியம். ஆனால் இராஜவேல் அவைகள் அக்குழப்பமான நிலைமையில் விட்டுச்செல்லப் பிரியமின்றி அதை யொழுங்குபடுத்தச் செல்லக்கருதி அங்கு சென்றான்.

அந்த அறையில் சாளரங்களனைத்தும் திறந்திருந்தன. அவைகளை மூடிவிட்டு விளக்கேற்ற வெண்ணி இரண்டு சாளரங்களை மூடினான். அச்சமயம் தாழ்வாரத்தின் வழியாய் யாரோ வரும் சத்தம் கேட்டது. சற்று நேரத்திற்குள் அந்த ஆள் வாசற்படியருகில் வந்து நின்று கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. தட்டிய மாதிரியால் ஸ்திரீ யென்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டு, கற்பகமே மறுபடி திரும்பிவந்தாளோ என்று நினைத்தான். அதற்குள் கதவின் பூட்டு உடைக்கப்பட் டிருந்தது நினைவிற்கு வந்தது.

ஆனந்தஸிங் "உள்ளே வா!" என்று உரத்துக் கூப்பிட்டான்.

ஒரு ஸ்திரியின் குரல் "ஆ! இராஜவேல் நீயா?" என்று கேட்டது.

ஆனந்தஸிங் உடனே ஜாக்கிரதையடைந்து இராஜவேல் குரல்போல் "ஆம் நான்றான். நீ யார்? என்ன வேண்டும்" என்றான்.

அம்மாது:—"ஆ! இராஜவேல் நான் தெரியவில்லையா?" என்றாள்.

ஆனந்தஸிங்குக்கு உடனே அது யாரென்று சந்தேகமுண்டாயினும் நிச்சயம் தெரியவில்லை. தைரியத்தோடு, "ஆகா நீயா? ஏன் இந்நேரத்தில் இங்கு வந்தாய்?" என்றான்.

அம்மாது:—உன்னைக் காண்கிறவரையில் என் மனம் பிடிக்கவில்லை.

ஆனந்:—ஏன் என்னைக் காணவிரும்புகிறாய்.

அம்மாது:—ஆ! ஆ! இராஜவேல்! இந்தக் கொஞ்ச வெளிச்சத்தில் உன்னைக் காண முடியவில்லையே.

இதற்குள் ஆனந்தஸிங் வந்தது உலகநாதம் பிள்ளையின் மனைவியென்று தெரிந்து கொண்டான்.

அதற்குள் அம்மாது:—இராஜவேல்! அது கிடக்கட்டும். நான் உன் சினேகி. பல வருடங்களாக நீ எனக்குப் புத்திரன்போலிருந்தா யென்பதை என்னால் மறக்கக்கூட வில்லையே?

ஆனந்:—ஆயினும் இன்று காலை நீ யதை மறந்து விட்டாய்.

அம்மாது:—உன் மேல் கோபம் கொண்டது நானல்லவே-என் புருடன்றானே அப்படிக் கோபம் கொண்டார். நான் அவரைச் சாந்தப்படுத்தவில்லையா? நீ மனோன்மணியைக் கண்டாய். அந்தோ! அவன் எங்கிருக்கிறான்? உனக்குத் தெரியுமென்று அவன் கூறினான். எனக்குத் தெரியாது. அவள் எங்கிருக்கிறாள்.

ஆனந்த:—யார் எனக்குத் தெரியுமென்று கூறியது—எவன் கூறியவன்?

அம்மாது:— ஒன்றுமில்லை. யாருமில்லை. அவள் எங்கிருக்கிறாளென்று நீ கூறவில்லையே.



ஆனந்:—நான் கூறமுடியாது. ஏன் கூறமுடியாதென்று உனக்குத் தெரியும்.

அம்மாது:—ஆனால் இப்போது நான் உனக்கு உதவி செய்யவே வந்தேன். இங்கு உன் உயிருக்கு ஆபத்தே. வெளியில் போய்விட்டால் அப்படியிருக்காது.

ஆனந்:—ஆனால் என்னை யெங்காவது ஓடிவிடச் சொல்கிறாயா?

அம்மாது:—ஓடிவிடுவதல்ல. இதோ முப்பதினாயிரம் ரூபாயிருக்கிறது. இதை யெடுத்துக்கொண்டு மனோன்மணியை மணம்புரிந்துகொண்டு எங்காவது போய் க்ஷேமமாய் வாழ்ந்துகொண்டிருங்கள். தயவு செய்து, பெருந்தன்மையோடும், உதாரகுணத்தோடும் அன்போடும் நடந்துகொள்.

ஆனந்:—நான் நிரபராதி. ஏன் ஓடிவிடவேண்டும்?

அம்மாது:—இருக்கட்டும், மனோன்மணியை யழைத்துக் கொண்டு போய் மணம்புரிந்து கொள். எனக்காகச் செய்யாவிடினும் அவன் பொருட்டாவது செய். இந்தா இப்பணத்தை யெடுத்துக் கொண்டுபோ!

ஆனர்:—நான் போகமாட்டேன். நான் நிரபராதி. ஆகையால் இங்கே யிருப்பேன்.


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

## தெலுங்குப் பதிப்பு.

(0)

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப்பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம்.

மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0

வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.




## ரயில் வண்டிகளில் பாடசாலை:—

பிள்ளைகள் பள்ளிக்கூடம் போக முடியாவிட்டால் பிள்ளைகள் இருக்கும் இடத்திலேயே பள்ளிக்கூடங்களை அமைப்பதென்னும் யோசனை அதிகரித்து வருகிறது. அதற்காக, கானடா தேச நிர்வாகிகள் ஒரு புதிய ஏற்பாடு செய்து வருகின்றனர். அத்தேசத்தைச் சேர்ந்த ஆண்டோரியா என்னும் பாகத்தில் சதாகாலமும் ஓரிடத்தை விட்டு மற்றோரிடம் திரியும் சமூகத்தினரே அதிகமாக வசிப்பதால் அவர்கள் நிலையான பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பமுடிவதில்லை. ஆகலின் அப்பிரதேசத்தில் ரயில்களில் பாடசாலைகளை அமைத்து அதில் 'அப்பிள்ளைகளுக்குக் கல்வியைப் போதிக்கின்றனர். இதனால் அச் சமூகத்தாரிடையே அதிகம் கல்வி பரவிவருவதாகத் தெரிகிறது.

## மோட்டார் டிரைவர் சாமர்த்தியம்:—

லண்டன் தெருக்களில் சுற்றினால் அத்தெருக்களெல்லாம் ஒரு மூலையில் வந்து சேர்வதைக் காணலாம். அம் மூலையில் ஒருவர் உட்கார்ந்து கொண்டு பியானோ என்னும் சங்கீத வாத்யம் வாசித்துக் கொண்டிருப்பார். ஆனால் ஜனங்கள் அதைக் கவனிக்கும் வழக்கமில்லை. நிதானித்துக் கவனித்தால் அவர் சில பாடல்களை அதில் வாசிக்கும்போது மிக இனிமையாய் இருப்பதை அறியலாம். அவர் வேலை இல்லாமல் திண்டாடும் ஒரு தேர்ச்சிபெற்ற மோட்டார் டிரைவர். அவர் பியானோ வாசிப்பதால் சேர்க்கும் பணத்தைக்கொண்டு குடும்பத்தைக் கவலையின்றி நடத்துகிறார். அவர் மிக்க சாமார்த்தியவானாக இருப்பதுடன் சங்கீதத்தில் மிகப்பிரிய முடையவராகவும் இருக்கிறார்.

## பாரீஸ் மாதர்களின் குற்றமாம்:—

பாரிசில் சென்ற 5-வருஷங்களாக வருஷத்துக்கு 50-லட்சம் ரொட்டிகளாகச் செலவில் குறைந்து வருகிறதாம். இதற்குக் காரணம் அந் நகர மாதர்கள்தான் என்றும் அவர்களுக்கு வேறு பண்டங்களின் மீது ஆசை ஏற்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் குறை கூறுகின்றனர்.

## பெரும் சொத்தைக் கண்டுபிடித்தும் ஏழையாய் இருப்பவர்:—

இங்கிலாத்தைச் சேர்ந்த வொர்செஸ்டர் பாதிரியாரின் குமாரரான ஸ்ரீ சாமுவேல் ஹனிபால் என்பவர் 1886 ஆம் வருஷம் தென்னாபிரிக்காவிலுள்ள திரான்ஸ்வாலைக் கடந்து சென்று சோதித்ததில் ஓரிடத்தில் பொன்கலந்த மண் அகப்பட்டது. அம்மண்ணை அவர் சுத்தம் செய்து பொன்னை விற்க முயன்றபோது அதை உபாயவிலை கொடுத்து வாங்கவும் யாரும் முன்வரவில்லை. ஆனால் நாளடைவில் அவரும் அவரது நண்பரும் தாங்கள் கண்டுபிடித்த பிரதேசத்தை சர்க்காருக்கு 300 பவுனுக்கு விற்று விட்டார்கள். அதில் இப்போது கோடிக்கணக்கான பவுன் மதிப்புள்ள பொன் எடுக்கப்படுகின்றது. ஸ்ரீ ஹனிபாலுக்கு இப்போது 75 வயது. அவர் மாதம் 2-பவுன் 10-ஷில்லிங்தான் சர்க்காரிடமிருந்து பென்ஷனாகப் பெறுகிறார்.

## குழந்தையின் சங்கீத ஞானம்:—

நார்த்தம்பர்லாந்தில் சுரங்கவேலை செய்யும் ஒருவருடைய நான்கு வயது குழந்தை சிட்னி ஷெர்ரிங்டன், பியானோ என்னும் சங்கீதக் கருவியில் மிகத்தேர்ச்சி பெற்றிருக்கிறான். சங்கீத வித்வானே அப்பையனுடைய சாமர்த்தியத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## தொழிலில்லாதவர்களுக்கு வேலை:—

எகிப்து தேசத்தின் ஹைகமிஷனராக இருந்து இப்போது இங்கிலாந்துக்குத் திரும்பியுள்ள லார்டு லாயிட் என்பவர் தாம் இத்தேசத்தில் இல்லாத காலத்தில் ஒரு புதிய தொழில் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார். அது என்னவென்று கேட்டபோது அவர் கூறியதாவது:—தொழிலில்லாதவர்களின் தொழிலாகும், தொழிலில்லாதவர்களும், சினிமாவுக்கும், குதிரைப் பந்தய இடங்களுக்கும், தேகாப்பியாசப் பந்தயங்களுக்கும், பணம் சம்பாதிப்பவர்களைப் போலவே போய் இன்பமாகக் காலங் கழிக்கின்றனர்.

## அதிர்ஷ்டமுள்ள தம்பதிகள்:—

ஸ்ரீ. கிளிமெண்ட்ஸ்-ம் அவரது மனைவியும் 1930-ம் வருஷம் தங்களுக்கு அதிர்ஷ்டத்தைத்தந்த வருஷமெனக் களிப்புடன் இருக்கின்றனர். கிளிமெண்ட்ஸ் என்பவர் ஒரு பிரைஸ் சீட்டில் 200-பவுனையும், அவரது மனைவி மற்றொரு பிரைஸ் சீட்டில் 30-பவுனையும் பெற்றார்கள்.

## குழந்தைக்கு முத்தமிடும் பாம்பு:—

சிலோன் அனுராதாபுரத்தில் மல்லவத்தை ஓயா ஒழுங்கையிலுள்ள ஒரு செல்வர் வீட்டில் 7-மாதக் குழந்தை ஒன்று இருக்கிறதாம். பிரதி சோமவாரந்தோறும் அக்குழந்தை தொட்டிலிற் படுத்திருக்கும் போது ஒரு நாகம் பக்கத்தில்போய் படுத்துக் கொண்டு குழந்தைக்கு முத்த மிடுகிறதாம். அப்போது எவரேனும் சமீபத்தில் போனால் சீறி விழுகிறதாம்.

## முதலைக் கடவுள்:—

மலாக்காவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த செம்படவனுக்கு ஒரு முதலை அகப்பட்டது. அதை அவன் மார்க்கெட்டுக்கு விற்பதற்காகக் கொண்டு போனபோது ஒரு கிராமவாசி அதை விலைகொடுத்து வாங்கி அதற்குப் பூஜை செய்து வணங்கி அதன் முதுகின்மீது தட்டிக் கொடுத்து அதை சமுத்திரத்துக்குள் செல்லும்படி சைகை காட்டினான். அதுவும் அவ்வாறேபோய் விட்டது.

## டிக்கெட் விற்கும் இயந்திரம்:—

இப்போது ரயில்வே ஸ்டேஷன்களில் டிக்கெட் விற்பதற்காகக் குமாஸ்தாக்கள் இருப்பதற்குப் பதிலாக இயந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். அதை இங்கிலாந்தில் முதலில் அனுபவித்துப் பார்ப்பர். அந்த இயந்திரத்தின் ஒரு பகுதியில் பணத்தைப் போட்டால் அது டிக்கெட் கொடுப்பதோடு அவசியமானபோது சில்லறையையும் கொடுக்கிறதாம். இந்த இயந்திரத்தை முடிக்க இரண்டு வருஷங்கள் பிடித்ததாம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரமோதூத௵ ஆடிமீ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340—கொல்லமாண்டு 1105—ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1930௵ ஜூலைமீ—ஆகஸ்டுமீ

| ஆடி | ஜூலை | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | புத | பஞ்17-40 | பூர33-0 | அ33-0சித் | தக்ஷிணாயன புண்யகாலம் |
| 2 | 17 | வியா | சஷ்22-43 | உத்39-20 | சித்60 | கரிநாள் |
| 3 | 18 | வெ | சப்26-20 | ரே44-8 | அமி60 | சீமந்தம், பும்சவனம் |
| 4 | 19 | சனி | அஷ்28-30 | அஸ்47-18 | சித்60 | தானியம் செலவிட |
| 5 | 20 | ஞாய | நவ28-33 | பர48-28 | சித்60 | ஆயுதம் உபயோகிக்க |
| 6 | 21 | திங் | தச26-28 | கி※47-35 | ம47-35அ | கிருத்திகை |
| 7 | 22 | செவ் | ஏகா22-18 | ரோ44-38 | அ44-38சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 8 | 23 | புதன் | து16-13 | மிரு39-53 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 9 | 24 | வியா | திர8-45 | திரு33-50 | ம33-50அ | மாச சிவராத்திரி |
| 10 | 25 | வெ | சது0-3 | புன26-45 | சி26-45ம | சர்வத்திர அமாவாசை |
| | | | அமா50-40 | | | |
| 11 | 26 | சனி | பிர40-58 | பூச19-10 | சி19-10ம | |
| 12 | 27 | ஞா | துதி31-25 | ஆயி11-38 | சி11-38மர | |
| 13 | 28 | திங் | திரி22-38 | மக4-33 | மர4-33சி | |
| | | | | பூர58-23 | | |
| 14 | 29 | செவ் | சது14-58 | உத்53-38 | அ53-38சி | |
| 15 | 30 | புதன் | பஞ்8-40 | அஸ்50-30 | மர50-30சி | |
| 16 | 31 | வியா | சஷ்3-55 | சித்49-0 | சித்49-0அ | |
| 17 | 1 | வெ | சப்1-0 | சுவா49-18 | சித்60 | |
| | | | அஷ்59-48 | | | |
| 18 | 2 (1930௵ ஆகஸ்டு) | சனி | நவ60 | விசா51-20 | சித்60 | காவேரி பெருக்கு, கிணறு [வெட்ட |
| 19 | 3 | ஞா | நவ0-23 | அனு54-50 | மர60 | |
| 20 | 4 | திங் | தச2-23 | கே59-40 | சித்60 | கரிநாள், தனிவியாபாராம்பம் |
| 21 | 5 | செவ் | ஏகா5-38 | மூல60 | அமி60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 22 | 6 | புத | து9-53 | மூல5-20 | மர5-20அ | பிரதோஷம், கடன் தீர்க்க |
| 23 | 7 | வியா | திர14-53 | பூரா11-48 | சித்60 | ருஷிபாரம்பம் செய்ய |
| 24 | 8 | வெ | சது20-23 | உத்18-45 | சி18-45மர | வரலக்ஷ்மி விரதம் |
| 25 | 9 | சனி | ○26-13 | திரு25-58 | சித்60 | ○ ஆவணி அவிட்டம் |
| 26 | 10 | ஞா | பிர32-13 | அவி33-25 | மர33 25சி | காயத்திரி ஜெபம் |
| 27 | 11 | திங் | துதி38-13 | சத40-50 | சி40-50ம | அருக்யசயன விரதம் |
| 28 | 12 | செவ் | திரி43-58 | பூ47-58 | ம47-58அ | கஜ்ஜாலி கிரிதியை |
| 29 | 13 | புத | சது49-0 | உத்54-30 | சி54-30மர | சங்கடஹர சதுர்த்தி |
| 30 | 14 | வியா | பஞ்53-10 | ரே60 | சித்60 | பிரயாணம் செய்ய |
| 31 | 15 | வெ | சஷ்56-5 | ரே0-8 | அமி60 | சீமந்தம், வித்யாரம்பம் |
| 32 | 16 | சனி | சப்57-20 | அஸ்4-23 | சித்60 | சீதளாசப்தமி. ஆடியிறுதி |

| | ராகு | செவ் | குரு |
|---|---|---|---|
| | 15-ஸிம்-புத<br>19-கங்-சுக் | | சூரி புதன் |
| | | | சுக் |
| சனி | | கேது | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## நெட்டாஜி சரித்திரம்.

(பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிவம் அவர்கள் எழுதியது)

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக அவனியில் தோன்றி அவதார புருஷராய் விளங்கிய சிவாஜிக்குப் பக்கத் துணையாய் இந் நெட்டாஜி எப்பொழுதும் நின்று மொகலாயக் கொடுங்கோன்மையி னின்றும் தேசத்தை விடுதலை செய்து சிவாஜிக்கு நேரிடவிருந்த பல விபத்துக்களையும் தடுத்து, அவருக்குச் சதிசெய்த பாவிகளின் உயிரைப் போக்கி, அஞ்சா நெஞ்சனாய் அநேக ஆபத்துக்களினின்றும் தப்பி, ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினன். இதில் யுத்த சம்பந்தமான தந்திரங்களும் வீரர்களின் சாமர்த்தியங் களும் வெகுவாக எழுதப்பட்டு தேச பக்தியைப் புகட்டும் விஷயங் கள் நிறைந்திருக்கின்றன. இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-30 வரை அணா 8

அதி அற்புத நாவல்! ஆனந்தக்களஞ்சியம்!!

## இரத்தினபுரி இரகசியம்

3-ம் பாகம் விலை ரூபா 2.

மேற்படி முதல் இரண்டு பாகங்கள் விலை ரூபா 4.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-30 வரை
3-ம் பாகம் விலை ரூபா 1-8-0

மேற்படி முதல் இரண்டு பாகங்கள் விலை ரூபா 3.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இதில் பாராளும் மன்னர்களும், பிரபுக்களும், மங்கையர்களின் மோக வலையிற் சிக்கி அல்லலுறுவதும், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற அவர்கள் வீசும் நானாவித சாகஸ வலைகளின் விதங்களும், கொடுங்கோன் மன்னரின் கொடுமைகளும், மேனாட்டாருடைய அநாசார நடத்தைகளின் அதிசயங்களும், பிரபுக்களின் பற்பல அட்டூழியங்களும், ஏழைகளின் தீராத் துயரங்களும், கபடமற்ற கன்னியர்கள் கற்பழிக்கப்பட்டுத் தீராத் துயரத்தில் மூழ்கி மடிவதும், நெறி தவறு நங்கையர்கள் மேன்மை அடைவதும், சில இரகசியக் கூட்டத்தாரின் நெஞ்சு திடுக்கிடும் கோரச் செயல்களும் துப்பறியும் நிபுணர்களின் தந்திர சாமர்த்தியங்களும் நிறைந்து விளங்குகின்றன. இது உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும், பிரமிக்கச் செய்வதாயும், வீர சோக மோகங்கள் நிறைந்ததாயும் இருக்கின்றது. பற்பல நீதிகளோடு மனதைப் பரவசப்படுத்தும் விஷயங்கள் நிறைந்த அற்புத ஆனந்த ரசக் களஞ்சியமாய்த் திகழ்கின்றது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.




வெட்டுக்காயம், எரி ரணங்கள் எவ்வளவு அற்பமாயினும் சரி, உடனே 'வாஸிலேன்' ஜெல்லியை உபயோகிக்கவும்.

வாஸிலேன் ஜெல்லி விரைவில் குணம் செய்கிறது. கட்டுகளில் இதை உபயோகிப்பதால் கட்டு அவிழ்க்கும்போது ரணத்தின்மீது ஒட்டிக்கொள்ளாது. எப்போதும் ஒரு ஜாடி கைவசமிருக்கட்டும்.

மெய்யான வாஸிலேன் ஜெல்லியே வேண்டுமென்று கேள். போலிகளை வாங்காதே.

**Vaseline**

TRADE MARK

PETROLEUM JELLY

"வாஸிலேன்" என்ற பதம் எமது டிரேட்மார்க், எம்மால் செய்யப்படும் பொருள்களையே குறிக்கின்றது.

செஸ்பரோ மான்யுபேக்டரிங் கம்பெனி,
கன்செட், நியூயார்க்,
லண்டன், மான்ட்ரீல்.



# ஆனந்தபோதினி வருஷ அனுபந்தம்.

'ஆனந்தபோதினி' வருஷ அனுபந்தம் சிறந்த அறிஞர்களால் வரையப்படும் கட்டுரைகளும், ஆராய்ச்சிகளும், பல விசித்திரப் படங்களுடன் கூடிய ஹாஸ்யக் கதைகளும், சமய தத்துவங்களும் அடங்கியது; பிரமோதூத வருஷத்திய 'ஆனந்தபோதினி' பஞ்சாங்கத்துடன் கூடியது. அனுபந்தம் 80 பக்கம், பஞ்சாங்கம் 80 பக்கம் ஆக 160 பக்கங் கொண்டது. விலை அணா 4. 5 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



# சர்வ தேவதா வசியம்

(பீஜாக்ஷர யந்திரங்களடங்கியது.)

மனிதர், பேய் பிசாசுகளால் வருந்துன்பங்களினின்று நீங்கி, பகைவர்
செய்யும் பில்லி சூனியம் மாரணம் முதலியவை தங்களிடம் எருதபடி
செய்தும், நோய் நொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்
களையும் வசப்படுத்தியும், எவ்விடத்தும் எக்காரியத்திலும் ஜெயம் பெற்றும்,
மிகுந்த ஐசுவரியத்தையும் செல்வாக்கையும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்
படுவார்கள். இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திர யந்தி
ரங்களும், அவற்றை அனுஷ்டித்துச் சித்திபெறக்கூடிய மார்க்கங்களும் இதில்
விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு தேவதைக்கு முரிய
மந்திரங்களும், மூல மந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும், தண்ணீர்
மந்திரித்தல், வேப்பிலை மந்திரித்தல், விபூதி பிடித்தல், பிசாசு விளக்கல்,
கழிப்புக் கழித்தல், மந்திரங்கட்டல் முதலியவைகளும், நக்ஷத்திர பலாபலன்
களும், அவற்றிற்குச் சாந்திகளும் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்
கின்றன. முதல் பாகமும் இரண்டாம் பாகமும் சேர்ந்து விலை ரூபா 1.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

# நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக் கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது கீகாற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து. விலை அணா 10.

## படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும்.

விலை டப்பி 1-க்கு அணா 6.

## மோஹினி தைலம்.

ஸ்திரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 தோலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

## தந்த சூரணம்.

பல் துலக்க இது நல்லதுள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும்.

விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

எமது ஸிலோன் சப் ஏஜென்ஸி :- } 16, கீமன்ஸ் கேட், கொழும்பு.



# ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப் படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது; உயர்ந்த சீமை காலிகோ பைண்டுள்ளது; இதன் விலை ரூபா 1 12 0

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதாதுணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்துமதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுக்கு இந்த ஸ்ரீராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இங்ஙனம் அவர்க்கும் இவர் குருவாயிருந்தனரென்றால் இவருடைய மகிமை அளவிடற்கரிதாமென்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவருக்குத் தெரியாமல், இவருடைய தேகத்திலே ஒரு நாணயத்தைக்கொண்டு எவரேனும் தொட்டால், அந்தப் பண விஷயத்தில் அருவருப்புக்கொண்டு இவர் உடம்பு அப்பொழுதே துடிக்குமாம். இஃதொன்றினாலேயே இவரது மனத் தூய்மையை நன்குணரலாம். இன்னும் இவர்செய்த அற்புதச் செயல்கள் எத்தனையோ உண்டு. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவரா யிருந்தும் உயர்ந்த ஞான மார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக்கூடியவைகள்.

# கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்காயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு கோர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

முதல் பாகம் விலை ரூபா 1. 2-ம் பாகம் விலை ரூபா 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# இனும்! இனும்!! இனும்!!!

அடியிற் குறிக்கப்பட்டிருக்கிற பாக்கட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு டேபில் டையம்பீஸ் இனமாகவும், கையில் கட்டும் கெடியாரம் வாங்குபவர்களுக்கு லிவர் பாக்கெட் கெடியாரம் இனமாகவும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு முறை வாங்கிப்பார்த்தால் எம்முடைய உண்மைவிளங்கும்.



நெ. 1.

பாக்கெட் லீவர் கெடியாரம் இனும் டேபில் டையம்பீசுடன் ரூ. 4-4-0

A டை. பொன் கிலிட் கெடியாரம் இனும் டையம்பீசுடன் ரூ. 4-8-0



நெ. 2.

பொன் கிலிட் விசித்திர பட்டைகள் தீர்த்த ரிஸ்லெட் கெடியாரம் தங்க டைல் உள்ளது இனும் பாக்கெட் கெடியாரத்துடன் ரூ. 6-12-0



நெ. 3.

பொன்கிலிட் 8-மூலை

ஷேப் ரிஸ்லெட் இனும் பாக்கெட் கெடியாரத்துடன் ரூ. 6-0-0



நெ. 4.

பொன் கிலிட் பீபாய் ஷேப் ரிஸ்லெட் கெடியாரம் தங்க டைல் உள்ளது இனும் பாகெட் கடியாரத்துடன்

விலை ரூபா 6-15-0

## லேடி பாக்கெட் கெடியாரம்.



இக் கெடியாரங்களை கையிலும் கட்டிக்கொள்ளலாம் சட்டை ஜேபியிலும் போட்டுக்கொள்ளலாம் இருவிதத்திலும் உபயோகப்படுத்தலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நிக்கல் கேஸ் கெடியாரம் 1-க்கு விலை ரூபா | | 4 | 4 | 0 |
| பொன் கிலிட் | ,, | ,, ,, 5 | 8 | 0 |
| சொக்கவெள்ளி | ,, | ,, ,, 6 | 8 | 0 |

இத்துடன் சிறு நிக்கல் சங்கிலியாவது அல்லது தோல் பட்டையாவது இனமாக அனுப்பப்படும்.

**சுபீரியர் வாட்சு கம்பெனி,** கெடியார வியாபாரிகள், மதராஸ்.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்.

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.
மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.
சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், சீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்து கொள்ளலாம்.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

நாவல்களையும் நாடகங்களையும் விட மேலானது!!!

# இந்திய கிராம ஜீவனோபாய முறை

## STUDIES IN INDIAN RURAL ECONOMICS

By ஸ்ரீமான் எஸ். கேசவய்யங்கார்.

CONTENTS-பொருளடக்கம்:—1. Economic Enquiry—ஜீவனோபாய ஆராய்ச்சி 2. Rural Economic Surveys—கிராம ஜீவனோபாய பரிசோதனை 3. Agricultural Holdings—பயிரிடும் நிலங்கள் 4. Agriculture and Future Policy—விவசாயமும் இனிச் செய்யவேண்டிய வேலையும் 5. Forests—இந்தியாவிலுள்ள காடுகள் 6. Transport-பொருட்களை இடமாற்றுதல் 7. Trade இந்திய வியாபார முறை 8. Capital—பணமுதல் 9. Rural Life in India—இந்திய கிராமவாழ்க்கை 10. Labour—கூலிய நிலைமை 11. Education—கல்வி 12. Rural Reconstruction—கிராம புனருத்தாரணம்.

விலை ரூபா 5. தபால்கூலி 8 அணா—1930.

விலாஸம் தெரிவித்தால் இனமாக எங்கள் புத்தக காட்லாக் அனுப்புகிறோம்.

**THE CITY BOOK CO.—POST BOX 283, MADRAS.**

ஸிடி புக் கம்பனி, தபால் பெட்டி 283, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த நாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத்பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல்விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மையளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 8 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0

# —முப்பெருந் தாசர்.—

## அறிவினைப் பயக்கும் ஓர் அரிய நூல்.

மக்கள் மாட்டுள்ள அஞ்ஞானம் நீங்குந்தோறும் அறிவாகிய ஒளி வளர்ந்து, அதன் முடிவாகிய பயனை அடையப்பெற்றோரே மற்றெல்லாரிலும் பெருஞ் சிறப்புறுவர் என்னும் கருத்தைக் கொண்டே இந்நூலின் கண் ஜயதேவர், துளசிதாசர், ஞானதேவர் என்னும் பெரியாரின் சரிதங்களைத் தெள்ளிய தமிழ் உரை நடையில் ஆழ்ந்த கருத்துகளுடன் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இடைவிடா முயற்சி, குன்றாத ஊக்கம், பெரியாரை பேணுதல், கடவுள் பக்தி, தாய்தந்தையரை விசுவாசித்தல் முதலிய சிறந்த நீதிகளும், நல்லறிவும், சிறந்த ஒழுக்கமும், கற்றோரின் உள்ளத்தில் பற்றச் செய்யும் பல உவமைகள் இதன் கண் குறிக்கப்பெற்றிருப்பது கருதற்பாலதாகும். மாணவரின் தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய பல அரிய விஷயங்கள் இதில் திகழ்வதால் உயர்தரக் கலாசாலை மாணவர்களுக்குப் பெரிதும் இந்நூல் பயன்தரக்கூடியது. இதன் விலை அணா 10.

207686

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, [illegible]